
# தமிழரசு


16-9-1982 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆவணி 31












தமிழ்த் தென்றல் திரு. வி. க
நூற்றாண்டுத் தொடக்க விழா
(29.8.1982)













# தமிழரசு

மலர்: 13 இதழ்: 6

16—9—1982

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆவணி 31




# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் முதல் நகர்ப்புறங்களிலும் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம்



## பயனடைவோர்

| | |
|---|---|
| 2வயது முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகள் | 6,04,400 |
| 5 வயது முதல் 10 வயது வரையிலுள்ள மாணவ மாணவியர் | 2,78,600 |
| 5903 மையங்களில் பயனடைவோர் மொத்தம் | 8,83,000 |

**தன்னிறைவுத் திட்டம்:** தமிழகத்திலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களில் முதல் கட்டமாக 1980-81ல் 69 வட்டாரங்களிலும், இரண்டாவது கட்டமாக 1981-82ல் 150 வட்டாரங்களிலும், மூன்றாவது கட்டமாக 1982-83ல் 159 வட்டாரங்களிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. குடிநீர் வழங்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியமும், ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்டித் தரும் திட்டத்தைக் கூட்டுறவு சங்கப் பதிவாளர் (வீட்டு வசதி) அலுவலகமும், நிறைவேற்றி வருகின்றன




முதல் கட்டமாக வட்டாரங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட வேலை விவரங்களும் அவற்றிற்கான செலவு விவரங்களும் வருமாறு: குடிநீர் வழங்கல் ரூ. 1807 இலட்சம் செலவில், 2,300 வேலைகள்; இணைப்புச் சாலைகள் ரூ. 1239.70 இலட்சம் செலவில் 6,590.96 கிலோ மீட்டர் சிறு பாலங்கள்; ரூ. 350.86 இலட்சம் செலவில் 3,044 ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கு மயானச் சாலைகள் அமைத்தல்; ரூ. 79.89 இலட்சம் செலவில் 927.71 கிலோ மீட்டர் சிறு பாசன மேம்பாடுகள்; ரூ. 68.67 இலட்சம் செலவில் 1,023 வேலைகள், ஊரக மருந்தகங்கள் ரூ. 47.43 இலட்சம் செலவில் 82; தாய்-சேய் நல நிலையங்கள் ரூ. 118.95 இலட்சம் செலவில் 237; பள்ளிக் கட்டடங்கள் ரூ. 487.45 இலட்சம் செலவில் 949; ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 302.61 இலட்சம் செலவில் 10,116 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட வட்டாரங்களில் வேலை விபரங்களும் அவற்றிற்கான செலவு விவரங்களும் வருமாறு:- குடிநீர் வழங்குதல் ரூ.1891 இலட்சம் செலவில் 1958 வேலைகள்; இணைப்புச்சாலைகள் - ரூ. 2584.72 இலட்சம் செலவில் 11,454.65 கிலோ மீட்டர்; சிறுபாலங்கள்-ரூ. 1423.98 இலட்சம் செலவில் 12 200: ஆதிதிராவிடர் குடி

யிருப்புகளுக்கு மயானச்சாலைகள் அமைத்தல்- ரூ. 44.77 இலட்சம் செலவில் 858.60 கிலோ மீட்டர்; சிறுபாசன மேம்பாடுகள் ரூ. 51.74 இலட்சம் செலவில் 566 வேலைகள்; ஊரக மருந்தகங்கள் ரூ. 108.17 இலட்சம் செலவில் 161; தாய்-சேய் நல நிலையங்கள் ரூ. 279.50 இலட்சம் செலவில் 429; பள்ளிக் கட்டடங்கள் ரூ. 992.34 இலட்சம் செலவில் 1,744; ஆதி திராவிடர்கருக்கு வீடுகள் ரூ. 518.19 இலட்சம் செலவில் 17,273.

1982ஆம் ஆண்டு அக்டோபருக்கு முன்னதாக முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படும் வேலைகள் பற்றி விவரங்கள் வருமாறு; இணைப்புச் சாலைகள்-461.35 கிலோ மீட்டர்; சிறு பாலங்கள் - 243 ஆதி திராவிடர் குடியிருப்புக்களுக்கு மயானச் சாலைகள் அமைத்தல் -6 கிலோமீட்டர்; சிறுபாசன மேம்பாடு-6 வேலைகள்; ஊரக மருந்தகங்கள்-11 தாய்-சேய் நல நிலையங்கள் 54; பள்ளிக் கட்டடங்கள் 83.

மூன்றாவது கட்ட வட்டாரங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட வேலை விவரங்களும், அவற்றிற்கான செலவு மதிப்பீடுகளும் வருமாறு;

இணைப்புச் சாலைகளுக்குக் கப்பிப் போடுதல் - ரூ1964.91 இலட்சம் செலவில் 5,495.06 கிலோ மீட்டர்; சிறு பாலங்கள் ரூ. 1,748.74 இலட்சம் செலவில் 13,495; ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயான சாலைகள் அமைத்தல் ரூ. 146.90 இலட்சம் செலவில் 1,279.40 கிலோ மீட்டர்; சிறு பாசன மேம்பாடு- ரூ.158.62 இலட்சம் செலவில் 1,198 வேலைகள்; ஊரக மருந்தகங்கள் ரூ. 139.75 இலட்சம் செலவில் 215, தாய்-சேய் நல நிலையங்கள் ரூ. 280.65 இலட்சம் செலவில் 463; பள்ளிக் கட்டடங்கள் ரூ. 1,466.24 இலட்சம் செலவில் 2,339; ஆதி திராவிடருக்கு வீடுகள் ரூ.636 இலட்சம் செலவில் 15,900. இந்தப் பணிகளில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கு மயானப் பாதைகள் அமைத்தலும், சிறுபாசன மேம்பாடு வேலைகளும் தொழிலாளர்களை அதிக அளவில் ஈடுபடுத்தக் கூடியவையாகஇருப்பதால், இவை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டன.

கிராமப் புறங்களில் வறுமையின் ஆணிவேரையே கல்லி எறியத்தக்க அளவில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டமே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும்.

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் முதலிய பல்வேறு பிரிவுகளில் மிக ஏழைகளாக உள்ள மக்களை—முக்கியமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களை ஈடேற்றும் இணையற்ற திட்டம் இது. இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவருவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அதற்கான வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆண்டுக்கு 600 குடும்பங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு உதவி அளிக்கப்படும்.

இவ்வாறு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் 3,000 குடும்பங்கள் பலனடையும். ஆண்டு வருமானம் ரூ. 3,000க்கு குறைவாகவுள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களாகக் கருதப்படும். உதவி பெறத் தெரிந்தெடுக்கப்படும் குடும்பங்களில் 40 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களைச் சார்ந்தவையாக இருக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு ஆண்டும் 200 பெண்களாவது இந்தத்திட்டத்தின் கீழ் உதவித்தொகைபெற தெரிந்தெடுக்கப்பட வேண்டும். மானிய உதவியைப் பொருத்த வரை சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், மிகச் சிறு விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்களுக்கு33 1/3 சதவிகிதமும், ஆதிதிராவிடர்களுக்கு 50 சதவிகிதமும் மானியமாகவழங்கப்படும். இந்த மான்ய உதவி ஆதி திராவிடர் அல்லாதவர்களுக்கு வறட்சி அல்லாத பகுதிகளில் ரூ. 3,000 வரையும், வறட்சிப் பகுதிகளில் ரூ. 4000 வரையும் ஆதி திராவிடர்களைப் பொருத்த வரையில் ரூ. 5,000 வரையும் ஒரு குடும்பத்திற்கு அனுமதிக்கப்படும்.

இதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட உதவித் திட்டங்களின்படி குடும்பத்தில் ஒருவரே பயன்பெற்று வந்தார். ஆனால் இப்பொழுது நிறைவேற்றப்படும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப்படி ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று அங்கத்தினர்களுக்கு உதவி கிடைக்கிறது. உதாரணமாக ஒரு குடும்பத்தலைவருக்கு மாட்டு வண்டி வாங்கக் கடன் உதவி கிடைக்கிறது. அவருடைய பெண்ணுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தையல் பயிற்சியும் தையல் இயந்திரமும் கிடைக்கின்றன. அவருடைய மனைவிக்குக் கறவைமாடு வாங்கக் கடன் வசதி கிடைக்கிறது. மொத்தத்தில் அந்தக்குடும்பம் முழுவதுமாக வாழ்க்கைத் தரத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்து மேலே உயர்த்தப்படுகிறது.

இத்திட்டம் 1980 அக்டோபர் 2 முதல் தமிழ்நாட்டில் எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டது. 1981-82ல் ரூ.2,256 இலட்சம் செலவு செய்ய வேண்டுமென்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், குறியளவை மிஞ்சி 2,810.64 இலட்சம் செலவிடப்பட்டது. இதன் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 5,50,556. இவர்களில் 25 சதவிகிதம் அதாவது 1,36,638 பேர் ஆதிதிராவிடர் 21 சதவிகிதம் அதாவது 1,13,517 பேர் பெண்கள். 1981-82ல் அளிக்கப்பட்ட கடன் வசதி மொத்தம் ரூ. 4,736.44 இலட்சம்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1982-83 ஆண்டில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூ. 8 இலட்சம் செலவிட மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி மாநிலத்தில் 376 வட்டாரங்களில் ரூ. 3,008 இலட்சம் மானியமாக வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1982 ஆகஸ்ட் வரை ரூ. 625.12 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பலனடைந்த குடும்பங்கள் 64,076. இதில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் குடும்பங்கள் 14,111. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 155.07 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 9,019 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.





# எல்லார்க்கும் வேலை வாய்ப்பு

மு. முத்துக்காளத்தி

எல்லோருக்கும் வேலை அளிக்கவும் உழைப்போர் உண்டு களித்திடவுமே ''உழைப்புக்கு உணவுத் திட்டம்'' 1979 ஏப்ரலில் கொண்டுவரப்பட்டது. பின்னர் இது மத்திய அரசின் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டமாக 1980 அக்டோபரில் மாற்றப்பட்டது.

கிராமப் புறங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதிகப்படி வேலை வாய்ப்பை உருவாக்குதல், கிராம மக்களின் வருமானத்தைப் பெருக்கக்கூடிய சமூக சொத்துக்களை உருவாக்குதல் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சத்துணவுத் தரத்தையும் மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காகக் கொண்டுவரப்பட்டது தான் இத்திட்டம்.

தமிழ் நாட்டிலுள்ள 378 வட்டாரங்கள் அனைத்திலும் இது நிறைவேற்றப்பட்டு வருகிறது. சிறுபாசன வேலைகள், வெள்ளத் தடுப்பு-வடிகால்வேலைகள், மண் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, சாலை போடுதல், ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களின் நலனுக்கான தனித்திட்டங்கள், பள்ளிகள் ஊராட்சி மன்றம், சமுதாய நிலையம், ஆசிரியைக் குடியிருப்பு, தாய்-சேய் நல நிலையம், போரடிக்கும் களம் போன்றவற்றை ஏற்படுத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் வேலைபார்க்கும் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நாளொன்றுக்கு ஒரு கிலோ அரிசியும் ரூ. 5.25 ரொக்கமும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் மாநிலத்தில் விவசாயத் தொழிலாளர்க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்சக் கூலியான ரூ. 7 ஒவ்வொருவருக்கும் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழகமெங்கும் 1982 ஜூன் இறுதி வரையில் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த வேலைகளின் எண்ணிக்கை 1,78,223 ஆகும். முடிக்கப்பட்ட வேலைகள் 1,15,638. இதற்குப் பயன்படுத்தப்பட்ட உணவு தானியம் 1,42,296 மெட்ரிக் டன். கூலியாகக் கொடுக்கப்பட்ட தொகை (ரொக்கம்) ரூ. 3,853.21 இலட்சம். இதன்மூலம் செய்துமுடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு ரூ. 5,759.30 இலட்சம். உருவாக்கப்பட்ட மனித வேலைநாட்கள் 825.66 இலட்சம் நாட்கள்.

தமிழக அரசு 1980-81ல் 2000 பள்ளிக் கட்டடங்கள் கட்டும் மாபெரும் பணியை மேற்கொண்டது. இதில் 1,230 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மற்றவை முடிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு சமையல் கூடத்தோடு சேர்ந்த 2,500 சமுதாய நிலையங்களைக் கட்டி முடிக்கும் மகத்தான திட்டத்தை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிறமலைக் கள்ளர்க்குப் பெருமை



இந்தியாவிலேயே கள்ளர் சீரமைப்புப் பிரிவு என்ற ஒன்று அரசின் மூலம் மதுரை மாவட்டம் ஒன்றில் மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பிறமலைக் கள்ளர்கள் குற்றப் பரம்பரையினர் எனக் கருதப்பட்ட காலம் மாறி, எல்லாவகையிலும் அவர்கள் உயர்வு பெற்றிடக் கள்ளர் சீரமைப்புப் பிரிவு பெரிதும் உதவிவருகிறது.

மதுரை மாவட்ட மக்கள் தொகையில் 6ல் ஒருபங்கு பிறமலைக் கள்ளர்கள் பிரிவினராவர். அதாவது, இந்த மாவட்டத்தில் மட்டும் உள்ள அவர்களது எண்ணிக்கை 1981 கணக்கெடுப்பின்படி 5,30,000 ஆகும்.

மாவட்டம் முழுவதும் பரவியுள்ள அவர்களது வளர்ச்சிப்பணிகளைச் சரிவர கவனிப்பதற்கென -மொத்தமுள்ள 13 வட்டங்களும் பெரியகுளம், உசிலம் பட்டி, உத்தமபாளையம், சோழவந்தான், திண்டுக்கல், செக்கான் ஊரணி என ஆறு ரேஞ்சுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பிறமலைக் கள்ளர் வீட்டுப் பிள்ளைகள் கல்விக்கெனக் கள்ளர் சீரமைப்புப் பிரிவில் மதுரை மாவட்டத்தில் 206 ஆரம்பப் பாடசாலைகளும், 32 நடுநிலைப் பள்ளிகளும், 8 உயர்நிலைப் பள்ளிகளும், 2 மேல்நிலைப்பள்ளிகளும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

அத்தனைப் பள்ளிகளுக்காகவும் உள்ள ஆசிரியர்ப் பெருமக்கள் 1460 பேர்கள் ஆவர்.

மாணவர்களுக்கென முன்பிருந்த 29 விடுதிகளோடு, 1982-83ல், வி. கள்ளப்பட்டி, கருநாக முத்தம்பட்டி ஆகிய இரு ஊர்களில் 2 விடுதிகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

கள்ளர் சீரமைப்புப் பிரிவின் நிர்வாகத்தின் கீழுள்ளவற்றில் 38 பள்ளிகளில் தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. 5 முதல் 9 வயது வரையுள்ள 30,960 பிள்ளைகளும், 10 முதல் 14 வயது வரையானவர்கள் 2,473 பேர்களும் சத்துணவுத் திட்டத்தாலே பயன் பெற்று வருகின்றனர்.

பிறமலைக்கள்ளர் வகுப்பு மாணாக்கர்களில் சென்ற ஆண்டில் 58 சதவீத மாணவர்களும், 70 சதவீத மாணவிகளும் நல்ல முறையில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தகுதியுள்ளவர்களுக்கெல்லாம் படிப்புதவிப் பணம் உண்டு

**மதுரை மாவட்டம் தேனியிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் வாழும் பருத்தி விவசாயிகளின் நீண்டநாள் கனவை நனவாக்கும் வகையில் ரூ. 7 கோடியே 6 இலட்சம் செலவில் தேனி கண்டமனூர் பிரிவில் தேனி கூட்டுறவு நூற்பாலை உருவாகி வருகிறது.**

# தேனி கூட்டுறவு நூற்பாலை



தேனி பருத்திக்கு என்று ஒரு சிறப்பு உண்டு. அதனுடைய தரத்தினாலே அதற்கு இத்தகைய மதிப்பு. வேறு இடங்களில் விளையும் பருத்திகளை வாங்கிவந்து 'தேனி பருத்தி' என்று விற்பனை செய்வார்களாம்.

அந்த அளவுக்குத் தேனி பருத்தி தனிச் சிறப்புடையது.

தேனி வட்டாரத்தில் பருத்தி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நீண்டநாளாக ஒரு மனக்குறை உண்டு. தரம் மிகுந்த பருத்தி உற்பத்தியாகும். இந்தப்பகுதியில் ஒரு நூற்பாலை கூட கிடையாதே, இந்தப் பருத்தியை இங்கே நூற்பாலை இருந்தால் நேரடியாகவே விற்பனை செய்யலாமே என்பதே அவர்களின் மனக்குறை.

"முன்பு இங்கு வர இருந்த கூட்டுறவு நூற்பாலை மேலூருக்குக் கொண்டு செல்லப்பட்டது. ஆனால், இப்பொழுது இங்கேயே கூட்டுறவு நூற்பாலை வந்துள்ளது எங்களது நீண்டநாள் கனவை நனவாக்குகிறது" என்று பருத்தி விவசாயிகள் சிலர் கூறினர்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தமிழ்நாட்டில் ஐந்து புதிய நூற்பாலைகள் ஏற்படவிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் தேனி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை ஆகிய இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் இப்பொழுது 16 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. தேனியில் அமைக்கப்படும் நூற்பாலை பருத்தி உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலையாகும். 25,000 கதிர்கள் கொண்ட இந்த நூற்பாலையை அமைக்க மொத்தம் ரூ. 7 கோடியே 6 இலட்சம் செலவாகும்.

தேனியை அடுத்துள்ள கண்டமனூர் பிரிவில் 42 ஏக்கர் பரப்பில் இந்த நூற்பாலையை அமைக்கும் பணி விரைந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதனால் இப்பகுதியில் 600 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

இந்தப் பகுதியில் உள்ள பருத்தி விவசாயிகளின் வாழ்வுக்கும் வளத்துக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் இந்நூற்பாலை உருவாகி வருகிறது.

இந்த நூற்பாலையினை அமைக்க தமிழ்நாடு அரசு முதலீட்டுப் பங்குத்தொகையாக ரூ. 67.50 இலட்சம் வழங்கியுள்ளது.

இந்நூற்பாலையில் உறுப்பினர்களாகச் சேர பருத்தி விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். வேறு எந்தக்கூட்டுறவு நூற்பாலையிலும் இப்படி தாங்களாகவே வந்து உறுப்பினராகும் காட்சியை இந்த அளவுக்கு கண்டிருக்க முடியாது என்கிறார், தேனி கூட்டுறவு நூற்பாலையின் நிருவாக இயக்குநர் திரு. கி. ராஜமாணிக்கம்.

நீண்டநாளைய பருத்தி விவசாயிகளின் கனவை நனவாக்கியதுடன், தேனி பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை நல்கும் கூட்டுறவு நூற்பாலையினை உருவாக்கி வருவதை அந்தப் பகுதி மக்கள் நன்றியுடன் பாராட்டுகிறார்கள்.

—மாமூலன்

# சுருளியாறு புனல் மின் திட்டம்




தமிழ்நாடு அரசின் பதினெட்டாவது புனல்மின் நிலையமான சுருளியாறு புனல் மின்திட்டம் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

மதுரையிலிருந்து சுமார் 150 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வண்ணாத்திப்பாறை என்னும் இடத்தில் பெரியாறு மின் நிலையத்துக்கு அருகில் சுருளியாறு புனல் மின்திட்டம் நிறுவப்பட்டிருக்கிறது.

கம்பம் பள்ளத்தாக்கிற்கும் பெரியாறு நீர்த்தேக்கத்திற்கும் இடையே அமைந்த பச்சைக்கு மாச்சி மலைகளில் உற்பத்தியாகும் சுருளியாறு, மணலாறு, வென்னியாறு, எரவலங்கலாறு ஆகியவற்றின் புனல், வனப்பு மிக்கக் காடுகளும் தேயிலைத் தோட்டங்களும் சூழ்ந்த இயற்கையழகு மிக்க சூழலில் அடுத்தடுத்து கட்டப்பட்டுள்ள அணைகளில் தேக்கப்பட்டு, சுருளியாறு மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப் படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான புனல் மின் நிலையங்கள் தென்மேற்குப் பருவ மழையினால் பயன்பெறுகின்றன. ஆனால், சுருளியாறு புனல் மின் திட்டம் வடகிழக்குப் பருவமழையினால் பயனடையும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மின் நிலையம் அணைக்கட்டுப் பகுதியைவிட 1028 மீட்டர் (Head) தாழ்வாக உள்ளது. ஆசியாவிலேயே இந்த மின் நிலையம்தான் இந்த அளவு நீரின் உயரத்தைப் பயன்படுத்துகிறது என்பது சுருளியாறு புனல் மின்திட்டத்தின் சிறப்பாகும்.

ஆண்டொன்றுக்குச் சுருளியாறு புனல் மின்திட்டம் 1140 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும். இந்தத் திட்டத்தின் இறுதி மதிப்பீடு ரூ. 25.06 கோடிகளாகும்.

சுருளியாறு மின் திட்டத்தின் கீழ், நான்கு பெரிய அணைகளும் இரு திருப்பு அணைகளும் கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றான ஹைவேவிஸ் அணையின் நடுப்பகுதி கற்களாலும், பிற்பகுதிகள் மண்ணாலும் அமைக்கப்படுகின்றன. ஏனைய அணைகளான மணலாறு, வென்



# தொழிலாளர்களே பங்குதாரர்களாகும் ஜக்கம்பட்டி விசைத்தறி மையம்

மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டாரம் ஜக்கம்பட்டிக் கிராமத்தில் ரூ. 40 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுவரும் விசைத்தறி மையத்தில் (**Powerloom Complex**) வேலையில் சேரும் 200 தொழிலாளர்களே அதன் பங்குதாரர்களாக மாறுவார்கள். தமிழ்நாட்டில் முதன் முறையாக இப்படியொரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைத் தெரிவித்த தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு எம். இராமன், இந்த விசைத்தறி மையத்தில் 100 ஆதிதிராவிடர்களும், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் 100 பிற்படுத்தப் பட்டவர்களும் பணிக்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள் என்று தெரிவித்தார்.

இவ்விசைத்தறி மையத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ. 10 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

பின்தங்கிய பகுதியில் இப்படியொரு விசைத்தறி மையம் உருவாக்கப்பட்டு வருவது அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

---

ணியாறு, எரவங்கலாறு ஆகியவையும் திருப்பு அணைகளும் கற்களாலேயே கட்டப்பட்டுள்ளன. இந்த அணைகளும் அதைச் சார்ந்த நீர்த்தேக்கங்களை இணைக்க மொத்தம் 7454 மீட்டர் நீளமுள்ள ஐந்து சுரங்கவழிகள் மலைப்பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர ஹைவேவிஸ் கீழ் விழும் நீர் ஒரு திருப்பு அணை மூலம் தேக்கப்பட்டு 525 குதிரைத் திறன் கொண்ட இரு பம்பு செட்டுகள் மூலம் ஹைவேவிஸ் தேக்கத்திற்கு ஏற்றப்படுகிறது. இத்தகைய அமைப்புகளின் மூலம் மலைச் சாரலில் பெய்யும் மழையின் நீர் முழுவதும் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.

'ஆட்டோ கண்ட்ரோல்' எனப்படும் தானே இயக்குவிக்கும் மின் நுணுக்கச் சாதனம் முதன்முறையாகச் சுருளியாறு புனல் மின் நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம், மின் இயந்திரத்தை ஒரு சில வினாடிகளில் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமாகவோ (Generator) அல்லது மின் சமனாக்கும் மோட்டாராகவோ (Synchsonous Condenser)

தமிழ்நாட்டில் எட்டு இலட்சங்களுக்கும் மேல் மின்சாரப் பம்பு செட்டுகள் உள்ளன. இவை பெரும்பாலும் காலை நேரத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆதலால், காலை நேரங்களில் மின்திறன் தேவை அதிகமாகவும் இரவுக் காலத்தில் மிகக்குறைவாகவும் உள்ளது.

மின் திறன் தேவையில் இத்தகைய ஏற்றத் தாழ்வுகளைச் சமாளிக்க, ஒரு சில வினாடிகள் இயக்கவும் நிறுத்தவும், இயலும் நீர்மின் நிலையங்களே மிகப் பொருத்தமானவையாகும். இவ்வகையில் சுருளியாறு புனல் மின் திட்டம் பெரிதும் மதுரைமாவட்டப் பகுதிக்குப் பயன்படுகிறது.

சுருளியாறு புனல் மின்திட்டத்திலுள்ள இயந்திரம் மின் சமனாக்கும் மோட்டாராக இயங்கும்போது மதுரை மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்படும் மின் தாழ்வழுத்தத்தைச் சீர்செய்யப் பயன்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பசுமைப் புரட்சிக்கு மேலும் வலுவூட்டும் வகையில் அமைந்த சுருளியாறு புனல் மின் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் நாள் தொடங்கி வைத்தார்கள்.

—மாமூலன்

---


# ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு கூடுதலாக நிதி உதவி

மதுரை மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்காக அரசு முதலில் 1981-82ஆம் ஆண்டிற்கு ரூ. 253.98 இலட்சம் நிதி ஒதுக்கியது. முதலில் ஒதுக்கிய நிதியில் பணிகள் வேகமாகவும், நல்லமுறையில் கிராமப்புற மக்களுக்குத் தேவையான அடிப்படைப் பணிகள் நிறைவேற்றப்பட்டதை அறிந்து அரசு மேலும், கூடுதலாக இத்திட்டப் பணிகளுக்கு ரூ. 1 40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.

ஆக மொத்தம் 1981–82 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திற்குத் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 393.98 இலட்சமாகும்.

மேலும் அத்தொகையுடன் 1520 மெட்ரிக்டன் அரிசியும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ. 26 இலட்சமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 4558 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 3464 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் (1982-83 ஆம் ஆண்டு) இவ்வாண்டு தொடர்ந்து முடிக்கப்பட்டு வருகின்றன.




# கொடைநீர்த் திட்டம்

இல. இராசேந்திரன்

**கோ**டைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 71,262. கொடைக்கானல் நகரியத்தின் மக்கள் தொகை 20,000.

கோடைக்காலத்தில் இவ்வளவு பெருக்கும் தட்டுப்பாடின்றிக் குடிநீர் கிட்ட தேவையான பணிகளை மேற்கொண்டிருக்கிறார் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர். முழுவதுமாக மழையை நம்பியிராமல் இருக்க எங்கெல்லாம் குடிநீர்க் கிணறுகள் வெட்டலாம் என அப்பகுதியில் நேரிலேயே சென்று இடங்களைக் கண்டறிந்து அதிகாரிகளுக்குத் தெரிவித்தார் அவர்.

நகரிய அலுவலகச் சொற்பொழிவுக் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பொதுமக்கள் பலரும் வந்து தங்கள் குறைகளைத் தெரிவித்தனர். அவைகளை நிறைவு செய்வதாக உறுதி கூறினார் அவர்.

தட்டுப்பாடின்றிக் குடிநீர் கிடைக்கச் 'செய்ய எவ்வாறெல்லாம் ஏற்பாடு செய்யலாம் எனச் சிந்தித்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, நகரிய அலுவலகக் கட்டடத்தின் பின்புறம் வெட்டப்படும் கிணறு ஒன்று காட்டப்படுகிறது. நீரூற்று வசதி அம்மண்ணுக்கிருப்பது தெளிவாகிறது.

'பிரையண்ட் பூங்கா'வில்உள்ள சிறுகுளம் குடிநீர்த் தேவைக்கு ஏற்றதாக மாற்றப்படலாமா என்று பரிசோதிக்கப்படுகிறது.

கொடைக்கானலில் 'பூம்பாறை' செல்லும் வழியில் உள்ள 'வானிலை நிகழ்வு ஆராய்ச்சி நிலையத்தின் எதிரே, அரசு தோட்டக் கலைப் பண்ணையின் வழியே ஆங்குள்ள ரிசர்வாயருக்குச் செல்கிறோம். வறண்டு கிடக்கும் அந்த நீர்த்தேக்கம் செப்பனிடப்படும்பணிகள் நடப்பதாகக் கூறுகிறார்கள் அதிகாரிகள். உள்ளே இறங்கி, 5 கிலோ மீட்டர் டர் தூரத்தில் நடக்கும் அந்த அணைக்கட்டுத் திட்டத்தைப் பார்வையிடுவதற்காக நடந்தே செல்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர். நாமும் தொடர்கிறோம்.

கடந்த ஏப்ரல் திங்களில் பணி துவக்கம் செய்யப்பட்ட குடிநீர்த் தேக்க அணைக்கட்டை உருவாக்கும் பணியில் ஆண்களும் பெண்களுமாக 200 பேர் பணியாற்றுகிறார்கள்.



கொடைக்கானல் ஏரியிலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்தில் அமையும் இந்த அணைக்கட்டு 1.2 மீட்டர் நீளமுள்ளதாக இருக்கும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், கடல்மட்டத்திற்கு மேலே 2,230 அடி உயரத்தில் அமையும் இந்த அணைக்கட்டு 80 லட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட வேலையை 1980ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

கொடைக்கானலில் எங்கே மழை பெய்தாலும் அந்நீர் இங்கே வந்து தங்கும் எனக்கூறும்படியான இடத்திலேதான் இந்த அணைக்கட்டு அமைகிறது. 10.6 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவு கொண்டவாக அமைக்கப்படும் இந்த அணையின் பரப்பளவு 1.56 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

1982-83ல், மட்டும் இத்திட்டத்திற்காக 30 லட்சம் ரூபாய் அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

# பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இவ்வாண்டு செயல்படுத்தும் முக்கியத் திட்டங்கள்

**1982-83**-ஆம் ஆண்டில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் போடி, வத்தலக்குண்டு, கொடைக்கானல், தேவாரம் ஆகிய ஊர்களில் ஏறத்தாழ ரூ. 30 இலட்சம் செலவில் புதிய பணிமனைகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை, எல்லிஸ்நகர், பணிமனையில் ரூ. 1.6 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்கென ஓய்வு விடுதிகள் திறக்கப்படும்.

மதுரை எல்லிஸ்நகர், புதூர் ஆகிய இடங்களில் சுமார்5 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலாளர்களுக்கென உணவு விடுதிகள் திறக்கப்படும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் பல்வேறு பிரிவு தொழிலாளர்கள் அவர்கள் கடமையைச் செவ்வனே செய்யும்பொருட்டு ஒரு பலதுறை பயிற்சி நிலையம் ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

## மற்ற குடிநீர்த் திட்டங்கள்

மதுரை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், 1981-82ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்காக 9.92 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 109 பணிகள் நிறைவேற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டதில் 92 குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1982-83ல் 143 ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றுவதென 3.95 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1.72 லட்சம் ரூபாய் செலவில் 16 திட்டங்கள் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.





...ரை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடைக்கானல் அணைக்கட்டுத் திட்டத்தைப் பார்வையிடுகிறார்


# பாசனத்துக்கு உதவ புதிய நீர்த்தேக்கங்கள்

“குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம் சுமார் ரூ. 4 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கிறது. பழனி வட்டத்தில் சுமார் 3850 ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும். சுமார் 2200 ஏக்கர் பாசன உறுதி பெறும், இதனால், சுமார் 5,757 டன் உணவு உற்பத்தி அதிகரிக்கும். ஆண்டிபட்டி, வாடிப்பட்டி, சித்தரேடி, காவல்பட்டி, பாப்பம்பட்டி ஆகிய கிராமங்கள் பயனடைகின்றன.

ஒரு திட்டத்தைநிறைவேற்றுகிறபோதுலாபம் வருமா நஷ்டம் வருமா என்று பார்ப்பதற்காக லாபம் மட்டும்பயன்கருதிச் செலவுமுறையைப் பின்பற்றவில்லை. இந்த வருடம் 10 கோடி ஒதுக்க முடியுமென்றால், அதை எந்தத் திட்டத்திற்கு ஒதுக்கினால் அதிக உணவு உற்பத்தி வருகிறது என்பதைப் பார்த்து. அந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அதை முதலில் எடுத்துக் கொள்வதற்கும் இம்முறையைப் பயன்படுத்துகிறோம். லாபம் குறைவாக வருகிற திட்டத்தையும் எடுத்துக் கொள்கிறோம். ஆனால், சிறிது காலதாமதமாகும். பின்தங்கிய பகுதியாக இருந்தால் லாபம் குறைவாக வந்தாலும் எடுத்துக் கொள்கிறோம்.

### புதிய அணுகு முறை—பாசனப் புன்செய்

ஒரே இடத்திற்கு, 2-வது போக விளைச்சலுக்குத் தண்ணீர் கொடுப்பதைவிட, ஒரு போகம்கூட விவசாயம் செய்ய இயலாமலிருக்கின்ற புன்செய் நிலங்களை, வசதி வாய்ப்புகளிருந்தால், பாசனம் பெறுகின்ற பாசனப் புன்செய் நிலமாக மாற்றி, அதிகமான பரப்பு நிலம் பாசனம் பெறவேண்டுமென்பதில் கவனம் செலுத்தி, அறவே விவசாயம் செய்யாமலிருப்பவர்களை ஊக்கப்படுத்துகிறோம். ஒரு போக விளைச்சலுக்குப் பிறகு, அடுத்துப் போடுகிற புன்செய்ப் பயிர்களும் நன்றாகப் பயன் தரும்.




உதாரணமாக, சாத்தனூர் அணையில், மேலும் ரூ. 5 கோடி செலவிட்டால், 5,000 ஏக்கர் 2-வது போகம் பாசனம் பெறும் என்று சொன்னார்கள். அதை மாற்றியமைத்து, ஆண்டுக்கு ஒரு முறை என்று ‘முறை கண்கள்’ வைத்து, ஒரு புதிய கால்வாய்

---

மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர்

**திரு. க. இராசாமுகமது**



## உணவு வழங்குதலுக்குக் கல்வெட்டுச் சான்று

கோயில்கள் குழந்தைகளுக்குப் (உணவும் செழுமையும்) பாலும் எண்ணெய்யும் கொடுப்பதைத் தலையாய புண்ணியமாகக் கொள்ளவேண்டும் என்பதற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது:-

சிதம்பரம் கோயிலில் சோழர் காலக் கல்வெட்டு இதைக் கூறுகிறது. குலோத்துங்க சோழன் ஆகிய இரண்டு சோழ மன்னர்களுக்குச் சேனாதிபதியாக இருந்தவன் நரலோக வீரன் என்பவன். அவன் சிதம்பரம் நடராஜப் பெருமானுக்கும், சிவகாமி அன்னைக்கும் ஏராளமான திருப்பணிகள் செய்துள்ளான். திருச்சுற்று மாளிகை எடுத்தான்; நூற்றுக்கால் மண்டபம் எடுத்தான்; கோபுரம் எடுத்தான்; ஆயிரம் பசுக்கன் கொடுத்தான்; ஆயிரம் பாக்கு மரங்களை நட்டான்; ஏராளமான அணிகலன்களைக் கொடுத்தான்; அவன், மேலும் இறுதியில் ஏராளமான குழந்தைகளுக்குப் பால் அளிக்கவும், குளிப்பதற்கு எண்ணெய் வழங்கவும் நிரந்தரமான தானம் அளித்தான். அதை அவனது தமிழ்க் கல்வெட்டு,

செல்வி திருத்த றங்கள் தென்னகர் இத்தில்லைக்கே
நல்ல மகப்பால் எண்ணெய் நாள் தோறும்—
செல்லத்தான்
கண்டான் அரும்பையர்கோன் கண் அகல்நீர்
ஞாலம் எல்லாம்
கொண்டான் அத்தொண்டையர் கோ

எனக் கூறுகிறது. குழந்தைகளுக்குத் தினந்தோறும் 'பால்' கொடுப்பது மிகவும் போற்றத்தக்கது. இதைக் காட்டிலும் மிகச் சிறந்த பணி வேறு எதுவும் இல்லை. இதுவே தெய்வத்துக்கு நாம் செய்யும் பெரும் பணிகளில் சிறந்தது என அவனது சமஸ்கிருதக் கல்வெட்டும் கூறுகிறது.

---

மூலம், அதே 5 கோடி செலவில், 20,000 ஏக்கர் புதிய புன்செய் நிலம் பாசனப் புன்செய் நிலமாக மாறியிருக்கிறது. அதிக விவசாயிகள் பயனடைகிறார்கள்.

இருக்கின்ற நீர் வளத்தை எல்லோரும் பெற வேண்டும்; அதிக பரப்பு நிலம் பாசனம் பெறவேண்டுமென்பது, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இந்த அரசு கையாளுகின்ற புதிய அணுகுமுறை.

### சோத்துப் பாறை நீர்த்தேக்கத் திட்டம்

''பல ஆண்டுக் காலமாக வலியுறுத்தப்பட்டு வந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பாலாறு—பொரந்தலாறு திட்டம், குதிரையாறு திட்டம், அடுத்து, சோத்துப்பாறைத் திட்டம். இது 40 ஆண்டுக்காலமாக வலியுறுத்தப்பட்டு வந்த கோரிக்கை என்பதால், இந்தத் திட்டத்தை எடுத்திருக்கிறோம். மேற்கு முகவை மாவட்டத்தில், கோல்வார்பட்டி, ஆணைக்குட்டம் ஆகிய திட்டங்களும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

சோத்துப்பாறை திட்டம், சுமார் 7 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனால், சுமார் 1,000 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும், 1825 ஏக்கர் பாசன உறுதி பெறும். சுமார் 1,629 டன் உணவு உற்பத்தி அதிகரிக்கும். அறவே, விவசாயம் செய்ய இயலாமலிருக்கிற விவசாயிகள் விவசாயம் செய்ய இயலும்.

இன்னும் 5 ஆண்டுகள் தாமதித்தால், இதே திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் செலவாகும்.

இது தவிர, மதுரை மாவட்டத்தில் பெரியகுளம், திண்டுக்கல் வட்டங்களில் மட்டும் சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களுக்கு இந்த ஆண்டு 1 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம்.

பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடிய சூழ்நிலையை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி 3 ஆண்டுக் காலத்தில் 9 மில்லியன் எக்டேரில் பாசன வசதியை ஏற்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஒரு எல்லைக் கோடு வைத்திருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குகின்றபோது, பொருளாதார ரீதியில், பயன் வருகிறதா என்ற விதியைத் தளர்த்துவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

நீர் வளத்தைப் பொறுத்த வரையில், தமிழகம் ஒரு பற்றாக்குறை மாநிலம், கிடைக்கக்கூடிய மேற்பரப்பு நீரில் 95 சதவீதத்தைப் பயன்படுத்தி விடுகிறோம். எனவே எந்த இடத்திலும் தண்ணீர் வீணாகக் கூடாது என்ற அடிப்படையில் இத்திட்டத்தை எடுத்திருக்கிறோம்.

### பொறியாளர்களுக்கு வேண்டுகோள்

திட்டங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்குகிறபோது, திட்டங்களை விரைவாகக் குறித்த காலத்தில் முடிப்பதனாலேயே திட்டத்தின் செலவில் 20 சதவீதத்தைக் காப்பாற்ற முடியும். 2 ஆண்டுக் காலத்தில் முடித்துவிட்டால், 8 கோடியிலேயே இந்த அணையைக் கட்டிவிடலாமென்றால், மேலும் 2 ஆண்டு தாமதமாகிவிட்டால் திருத்திய மதிப்பீடு வரும். இன்னும் 2கோடி ரூபாய் அதிகச் செலவாகும். காலதாமதம் செய்யச் செய்யக் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. குறித்த காலத்திலேயே திட்டங்களை நிறைவேற்றி, திருத்திய மதிப்பீடு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று அனைத்துப் பொறியாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

பொது மக்களின் நம்பிக்கைக்கு ஊனம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுதான் புரட்சித் தலைவர் ஆட்சியின் இலட்சியம்: காலங்காலமாக மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்தத் திட்டத்தை எடுக்கவில்லை.

### புரட்சித் தலைவர் காலத்தில் மாபெரும் 18-ஆம் கால்வாய் திட்டம்:

பெருந்தலைவர் காமராஜ் அவர்களின்

காலத்திலே பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் உருவாக்கப்பட்டது கோவை மாவட்டத்தில் இதேபோல வறண்டு கிடந்த இலட்சக்கணக் கான ஏக்கர் நிலங்கள் இன்று வளம்கொழிக் கும் நிலங்களாக மாறியுள்ளன

அதேபோல, ஒரு மாபெரும் திட்டம் 18-ஆம் கால்வாய்த் திட்டம். இது, புரட்சித் தலைவர் காலத்தில் உருவாக்கப்படும்

இத்திட்டம், கம்பம் தொகுதியில் ஆரம் பித்து, போடி (மேற்கு) தொகுதி, தேனித் தொகுதி வழியாகப் பெரியகுளம் தொகுதிக் கும் வந்து சேர்ந்து பெரும்பயனைக் கொடுக் கும். இதற்கு சுமார் 16 கோடி ரூபாய் செலவாகலாம்.

மழைக்காலங்களில் வெள்ளமாக வரு கின்ற வெள்ள நீரை வெள்ள வடிகால்கள் அமைத்து, சுமார் 90 கிராமங்களிலுள்ள வறண்ட பகுதிகளுக்குப் பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தக் கூடிய திட்டம்.

10 வருடங்களுக்குப் பிறகு நம்முடைய தேவை எவ்வளவாக இருக்குமென்பதைக் கணக்கிட்டு, இன்றைக்குத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அடுத்த 10 ஆண்டுகளுக்கு என்னென்ன செய்யலாம் என்று புரட்சித் தலைவர் அவர்கள் முடிவு செய்து வைத்திருக்கிறார்கள். எந்தெந்தக் காலத்திலே வெளிப்படுத்த வேண்டுமோ அப்போது செய்வார்கள். அவைகள்தான் இம்மாதிரி திட்டங்களாக வரு கின்றன. காலம் எல்லாம் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, சண்முகா நதித் திட்ட ஆய்வுப் பணிகள் முடிவுறும் தறுவாயிலிருக் கிறது. மண்ணத்துக் கிராமத்திலுள்ள சந்தனப் பாறை திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் முடிந்து, அரசின் பரிசீலனையிலிருக் கின்றன.

**விவசாய உரிமை**

எந்த ஒரு அரசும் அணை கட்டுகிற போது, அந்த நதியின் போக்கை ஆராய்ந்து, ஏற்கெனவே அந்த நதிநீரின் மூலம் பாச னம் செய்து கொண்டிருப்பவர்களுக்குப் பாது காப்புக் கொடுத்துவிட்டு, எஞ்சியிருக்கிற தண்ணீரைத்தான் மற்ற பகுதிகளுக்குக் கொடுப்பதற்கு வழிவகையைச் செய்யும் ஏற்கனவே செய்யப்படுகிற பாசனத்தைத் தடை செய்ய அரசுக்கே உரிமை கிடையாது. அதைத்தான் 'ரிபாரியன் ரைட்' (Riparian Right) என்கிறோம் இந்த அடிப் படையில்தான், நாம் காவேரி பேச்சு வார்த் தைகளையே நடத்திக்கொண்டிருக்கிறோம்.

**வரலாற்றுச் சாதனை**

வரலாற்றுக் காலந்தொட்டு இதுவரை வறண்ட பகுதிகளாக இருக்கின்ற இந்தப் பகுதியில் புரட்சித் தலைவர் காலத்தில் ஒரு மகிழ்ச்சியான ஆரம்ப விழா நடந்து கொண் டிருக்கின்றன.

ஒவ்வொரு ஆட்சிக் காலத்தையும் சரித் திர ஆசிரியர்கள் ஒவ்வொரு வகையில் பெரு மையாகக் கூறியிருக்கிறார்கள். மௌரியர் ஆட்சிக் காலத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரையிலும், பின்னர் சுதந்தர இந்தி யாவிலும் ஒவ்வொருவர் ஆட்சிக் காலத்தில் ஏதாவது ஒரு பகுதியில் சில நன்மைகள் உரு வாகியிருக்கின்றன

ஒட்டு மொத்தமாக அனைத்துப் பகுதி களிலும் சிலருடைய ஆட்சிக் காலத்தில் நன் மைகள் உருவாகியிருக்கின்றன. தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலமே பொற் காலம் என்று கூறும் வகையில் இங்கு பல்வேறு நன்மைகள் கடந்த 4 ஆண்டு காலமாக நடந்து வருகிறது என்பதை அறிவீர்கள்.

கோல்வார்ப் பட்டி நீர்த்தேக்கத் திட் டத்தைப் பற்றி நண்பர்கள் கூறியிருக் கிறார்கள். மேற்கு முகவை மாவட்டத்திலும் விளாத்திகுளம் பகுதிகளிலும் சேர்த்து 24.40 கோடி ரூபாய் செலவில் 30089 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக் கூடிய அளவில் பாசனத் திட் டங்கள் இந்த 4 ஆண்டு ஆட்சிக் காலத்திலே நடந்திருக்கிறது. இது வரலாற்றிலே எந்தக் காலத்திலும் நடக்காத சாதனை.

இன்று துவக்கப்படுகிற கோல்வார்ப்பட்டி திட்டம் 5 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவிருக்கிறது. கிட்டத்திட்ட 2,000 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும். 4,500 ஏக்கர் 2-வது போகப் பாசன வசதி பெறும். 245 ஏக்கர் பாசன உறுதி பெறும்.

## பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம்

கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, தாய் சேய் நல விடுதி, பள்ளிக்கட்டடங் கள் போன்ற அடிப்படை வசதி களைக் குறிப்பிட்ட காலவரம்பிற் குள் செய்து தரும் தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டம், தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டத்தினைத் தற்போது பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு எடுத்துள்ள முடிவின்படி மதுரை மாவட்டத் தில்-

1. பீ. மீனாட்சிபுரம்
2. அகரம்
3. பூதிபுரம்
4. தாடிக்கொம்பு
5. தேவதானப்பட்டி
6. வடுகப்பட்டி
7. தென்கரை
8. கங்குவார்பட்டி
9. பலசமுத்திரம்

ஆகிய 9 பேரூராட்சிகளில் நடப்பு நிதியாண்டில் (1982-83) தன்னிறைவுத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் இந்தப் பேரூ ராட்சிகளில் இணைப்புச் சாலை கள், குடிநீர் வசதி, தாய் சேய் நல விடுதி, பள்ளிக் கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மேலும், பேரூராட்சிகளில் தன் னிறைவுத்திட்டம் மூன்று காலக் கட்டங்களில் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். மூன்று ஆண்டுகளில் அனைத்துப் பேரூ ராட்சிகளும் இத்திட்டத்தால் பய னடையும்.



## பள்ளியில் சேரும் மாணவ மாணவியர் எண்ணிக்கை கூடுகிறது

மதுரை மாவட்டம் முழுவதும் இவ்வாண்டு, பள்ளிகளில் புதியதாக இதுவரை சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை 23,202 ஆகும். இம்மாணவர்கள் முதல் வகுப்பில் மட்டும் சேரவில்லை. இடையில் படிப்பை நிறுத்தியிருந்த பலசிறுவர்கள் இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை சேர்ந்திருக்கிறார்கள். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாகப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 5000தான் இருக்கும்.

ஆனால், இவ்வாண்டு இப்படி மாணவர்கள் கூடுதலாக பள்ளியில் சேரக் காரணம், 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்'தான்!

அருப்புக்கோட்டை, காரைக்குடி வட்டங்களில் சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பெரியாறு-வைகை பாசனத் திட்டங்களை உலக வங்கியின் உதவியோடு 44 கோடி செலவில் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. உலக வங்கி சுமார் 21 கோடி ரூபாய் உதவி செய்யும். இதன் மூலம் சுமார் 25455 ஏக்கர் புதிதாகப்பாசன வசதி பெறும்.

சாத்தூர், விருதுநகர் வட்டங்களில் ரூ. 45 இலட்சம் செலவில் 9 புதிய குளங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. ரூ. 24 இலட்சம் மதிப்பீட்டில் விருதுநகர், திருவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை வட்டங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆய்விலிருக்கின்றன.

வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்திட்டம் 4 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்கனவே துவக்கப்பட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு 82-83-ல் மட்டும் ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது 8100 ஏக்கருக்குப் பயனளிக்கும்.

### குள்ளூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம்

குள்ளூர் சந்தை நீர்த்தேக்கத் திட்டம் 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்பட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. 82-83-ல் மட்டும் 1 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சுமார் 2,900 ஏக்கர் நிலங்களுக்குப் பயனளிக்கும்.

இவ்வளவு பெரிய மகத்தான புரட்சியை இந்த வறண்ட பகுதிகளுக்குச் செய்வது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒன்று.

நில உடமையாளர்கள் மட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் பால் உற்பத்தி போன்ற சிறு சிறு தொழில்கள் செய்பவர்களுக்கும் மிகுந்த பயனை அளிக்கும.

### சமூகப் புரட்சி

கிழக்கு முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வெள்ளக் காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ள நீரைத் திருப்பிக் கொடுக்கின்ற திட்டமொன்றை 300 கோடி ரூபாய் செலவில் செய்யவிருக்கிறோம் என்பதை புரட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள்.

ஒரு மாபெரும் சமூகப் புரட்சி பின்தங்கிய மாவட்டங்களில் நடந்து கொண்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியும் விவசாய வளர்ச்சியும் ஏக காலத்தில் நடக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் கருதியதனால் தான் பல திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன.

மேற்கு முகவை மாவட்டத்தில் சுமார் 1,000 ஏக்கரில் சிப்காட் தொழில்பகுதி அமைக்கப்படவிருக்கிறது. கடலாடி, முதுகுளத்தூர் பகுதியில் ஒரு நூற்பாலை நிறுவ முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு இருக்கக்கூடிய பெரிய கண்மாயை ஆழப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். 500 ஏக்கருக்கு மேல் பாசனம் தரக்கூடிய சுமார் 500 கண்மாய்களை உலக வங்கியின் உதவியோடு ஆழப்படுத்தி நவீனப்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே கொண்டுவர அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது.

**(குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம் சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம், கோல்வார்ப்பட்டி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றை முறையே பழனியிலும் (ஜூலை 19) பெரிய குளத்திலும் (ஜூலை 20) சாத்தூரிலும் (ஜூலை 21) அடிக்கல் நாட்டி ஆற்றிய உரையிலிருந்து).**

# அரிய திட்டத்திற்குப் பெரிய குளத்தில் பயிற்சி

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் செயல் படுத்துவதற்காக அந்தந்தமாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்குக் 'குழந்தைகள் நல அமைப்பாளர்' பயிற்சி அளிக்கப் படுகிறது.

அவ்வகையில் மதுரை மாவட்டத்தில் உள்ள 60மையங்களிலும் தேர்வுபெற்றோருக்கான பயிற்சி பெரியகுளம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் அளிக்கப்பட்டது. நாம் அதைப் பார்வையிடச் சென்றபோது (28-8-82) அறுபது மகளிர் மட்டுமல்ல; புதிதாகத் துவக்கப்பட்ட 13 மையங்களுக்காகத் தேர்வுபெற்ற பதின்மூவரும், கொடைக்கானல் ஊராட்சி ஒன்றிய மையங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பேரும்கூட அங்கே பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தனர்.

அவர்களுக்கெல்லாம்பயிற்சியளிப்பதில் முக்கிய சேவிகா, திருமதி ஜி. அழகம்மாள் பெரிதும் அக்கறை செலுத்திக்கொண்டிருந்தார். கிராம சேவிகாக்களான டாரதிபாப்பாத்தி, வி. அமலோற்பவம் இருவரும் அவருக்குத் துணையாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இப் பகுதியிலுள்ள முப்பது மகளிர்மன்றங்களைக்கண்காணித்தல், சிறுசேமிப்புத் திட்டத்தில் மகளிரை உறுப்பினராக்க முனைந்து நிற்றல், ஊனமுற்றோர் அரசு உதவி பெற ஆவன செய்தல், விதவைப் பெண்களின் மகளிர் திருமணத்திற்கு அரசுத் திட்டப்படி தங்கத்திற்குத் தாலிகிட்ட உதவுதல் போன்ற சில பணிகளில் மட்டுமே இதுவரை தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்த கிராம சேவிகாக்கள் இப்போது சத்துணவுத் திட்டத்திற்கான இவ்வாறான பணிகளில் முழுமூச்சோடு தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்தது நம்மை வியப்பில் ஆழ்த்தியது.

''பயிற்சிக் காலத்தில் நீங்கள் என்னவெல்லாம் சொல்லித் தருகிறீர்கள்?'' என்று முக்கிய சேவிகாவைக் கேட்கிறோம்.

''குழந்தைகளின் விருப்பமறிந்து கற்பிப்பது எப்படி, சிறுவர்களின் வயதுக்கேற்ற விளையாட்டுகள்- அவற்றால் அவர்களுக்கேற்படும் தேக நலன்கள், குழந்தைகளின் மனமறிந்து நடந்து கொள்ளுவது எப்படி, அவர்களுக்குச் சுத்தமான முறையில் சத்துணவைத் தயாரிக்கும் விதம், உணவுக்கான பாத்திரம் பண்டங்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் எப்படி-என்பது போல் பலவிதங்களில் பயிற்சி அளித்துச் சான்றிதழ் தரப்படுகிறது.''

''பெண்களுக்குச் சாதாரணமாக இந்த விஷயங்கள் கூடவா தெரியாது?''

''பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்கு என்றால் நீங்கள் கூறுவது சரி; இங்கே பயிற்சி பெறுபவர்களில் சில பெண்களே தாய்மைப்பேறு பெற்றவர்கள். மற்றவர்களுக்குக் குழந்தைகள் பராமரிப்பு பற்றி நாமாகக் கற்பித்தல் தானே நல்லது? ஆகையால் இது மிகவும் முக்கியமான பயிற்சியாகும்.''

—இவ்வாறு நம் வினாக்களுக்கெல்லாம் மிகப் பொறுப்போடு பதிலளிக்கிறார் முக்கிய சேவிகா.

மாவட்ட செய்தி - மக்கள் தொடர்புத்துறை மூலம் பயிற்சி பெற்றோருக்கு, தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவின் 246-வது செய்திப் படம் காட்டப்படுகிறது. திருச்சி மாவட்டம் பாப்பாகுறிச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் குறித்த அப்படம் பயிற்சியாளர் மனத்தை மேலும் பண்படுத்துகிறது.

மதுரை/கிழக்கு :

பெரிய குளத்திலிருந்து மதுரைக்கு வருகிறோம்.

மதுரை-கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திலும் அதே போல்





# குழந்தைகள் சத்துணவுத் திட்டத் திரைப்படம்

பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில், தமிழ்நாடு அரசு செய்திப்படப் பிரிவின் (எண் : 246) திரைப்படம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்கள். மதுரை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தார் (28-8-82).

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் பற்றி அப்படத்தைப் பார்க்க ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்திருந்தனர். படம் முடிந்த அடியோடு, அங்கிருந்த நடுத்தர வயதுத் தம்பதிகள் இருவர், படம் காட்டியவரை அணுகி- தெனசரி இங்கே இந்தப் படத்தைக் காட்டுவியளா? என்று ஆர்வத்தோடு கேட்டார்கள். அதற்குப் பதிலளித்து விட்டு, அவர்களிடம் அவர் கேட்டார். "ஒங்க குழந்தைங்க ஏதாச்சும் ஸ்கூல்லபடிக்கிதுங்களா?"

"இப்ப படத்துல காட்டுனியளே, அப்பிடி சாப்பாடு போடறதுக்கு முன்னால வரைக்கும் நாங்க எங்க பிள்ளைங்களப் படிக்க அனுப்பிலிங்கய்யா. இப்பத்தேன் அனுப்பறம். படிப்புக்குப் படிப்பும் ஆச்சு; சாப்பாட்டுக்குச் சாப்பாடும் ஆச்சுதுங்களே! நாங்களே ஏதாச்சும் விஷேசம்னாதேன் எண்ணெ, பருப்பு, கீரையெல்லாம் உபயோகிச்சி சமையல் பண்றது. இப்ப தெனசரில்ல அதெல்லாம் போட்டு சமைச்சிப் போடுறாக!"

--முகமெல்லாம் சிரிப்பாக, அந்தக் கணவனும் மனைவியும் இதை மாற்றி மாற்றி மகிழ்ச்சி சொல்லி சத்துணவுத் திட்டத்திற்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காணும் அரசு இது என்பதற்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?

'குழந்தைகள் நல அமைப்பாளர்' பயிற்சி அளிக்கப்படுவதைச் சென்று பார்க்கிறோம்.

முக்கிய சேவிகா திருமதி எஸ். ஈஸ்வரி பாய், 49 மகளிருக்கு அப்பயிற்சி தருவதில் ஈடுபட்டிருந்தார். ஆகஸ்ட் 21 முதல் 29 முடிய நடந்த அந்த ஒன்பது நாள் பயிற்சியில் மிகவும் அக்கறையோடு காணப்பட்ட அந்த மகளிரில் 36 பேர் மணமானோர்; !1 பேர் மணமாகாதோர்; 2 பேர் கணவனால் கைவிடப்பட்ட கொடுமைக்கு ஆளானோர்.

"இவர்களுக்கெல்லாம் பயிற்சி அளிக்கும் முக்கிய சேவிகாக்களுக்கு எங்கே பயிற்சி தரப்பட்டது?" என்ற நம் கேள்விக்கு, "திருநெல்வேலியில்" என்று பதிலளித்தார் ஒன்றிய ஆணையர் திரு. ஐ. சுப்பிரமணியம்.

மொழிக்கல்வி, பூக்கள், விலங்குகள் பற்றிய விளக்கம், தலைவர்களைப் பற்றிய தெளிவு போன்றவற்றைக் குழந்தைச் செல்வங்களுக்கு ஏற்படுத்திடும் விதம் பற்றிய பயிற்சியில் மகளிரெல்லாம் கருத்துடன் ஈடுபாடு கொண்டிருந்தது மட்டுமல்ல; **சிறுவர்களுக்குப் படங்களின் மூலம் கல்வி புகட்ட அவர்கள் தயாரித்துக் கொண்டிருந்த வண்ண வண்ண ஓவிய 'ஆல்பங்'களும் நம்மைக் கவர்வதாக இருந்தன.**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் ஈடேறும் என்பதை உறுதிப்படுத்தியது தாய்மார்களின் பயிற்சிநிலை!**

# தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி

"உலக நாடுகளைக் கவர்ந்த உன்னத மான பல இடங்கள் நம் தமிழகத்தில் உள்ளன. நினைப்புக்கு எட்டாத நெடுங்காலத்துக்கு முன் நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் நெஞ்சைவிட்டு அக லாக்கலைக் கோயில்கள், அழகிய ஏரிகள், ஆறு கள், நீர்வீழ்ச்சிகள், விந்தை விலங்குகள் வாழ் வனங்கள், குன்றுகள் இப்படி நம் திருவிடத் தில் திரும்பும் திசையெல்லாம் தெவிட்டாத காட்சிகள்! அவை நம்மவரை மட்டுமல்ல மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவரு கின்ற வகையிலே, தமிழ்நாட்டுச் சுற்றுலா வளர்ச்சிக்கழகம் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

அதன் வளர்ச்சிப் பணிகளை அடுக்கடுக் காய் எடுத்துக்கூறுகிறார், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு க. பால சுப்ரமணியன் எம்.எல்.ஏ., அவர்கள்.



சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர்

**திரு. க. பாலசுப்ரமணியன் எம்.எல்.ஏ.**

## அவர்களுடன் பேட்டி

**சுற்றுலா கழகத்தின் நோக்கங்கள் என்ன?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கத்தில், சுற்றுலாப் பயணிகள் தங்குவ தற்கு இடவசதி அளித்திடவும் மற்றும் அவர் களுக்கென சுற்றுலாப் பேருந்துகளை நடத் தும் பணியினையும் மேற்கொண்டது.

கடந்த சில ஆண்டுகளில் இக்கழகம் சுற் றுலாப் பயணிகளுக்குத் தேவையான பணி களிலும் ஈடுபட்டு வந்துள்ளது. அவை குறைந்த செலவில் பயணம் செய்ய விரும்புப வர்களுக்கு, இளைஞர் விடுதிகளும், நெடுஞ் சாலைப்பயணிகள் வசதிக்கெனப் பெருவழி ஓய்வு விடுதிகளும் தங்கும் வசதியுள்ள உணவு விடுதிகளும் மற்றும் சுற்றுலாப் பயணி கள் முகாம் போன்றவைகளாகும். பயணிக ளுக்கென இக்கழகம் பொழுதுபோக்கு வசதி களையும் அளித்து வருகிறது. அவை தொலை நோக்கு இல்லங்கள், ஒலி-ஒளிக்காட்சி, படகு குழாம்கள் முதலியனவும் சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் சுற்றுலாப் பொருட் காட்சி போன்றவையுமாகும். சுற்றுலாப் பய ணிகள் தங்கள் மனத்தைக் கவர்ந்த இனிமை யான சுற்றுலாக்களை நினைவில் வைத்திட பரிசுப் பொருட்களையும் தயாரித்து சுற்று லாப் பயணிகளுக்கு இக்கழகம் வழங்கி வரு கிறது. தமிழகத்தின் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கொண்டுள்ள நோக்கத் திற்கு ஒப்ப சுற்றுலா வரும், வெளி மாநில வெளிநாடுகளின் பயணிகள் பண்டையத் தமி ழர் நாகரீகம், பண்பாடு, பண்டைய கலாச் சாரம் இவைகளைத் தெரிந்து செல்ல உறு துணையாக இருப்பதே இதன் நோக்கமாகும்.


**தமிழ்நாட்டு சுற்றுலாத் தலங்கள் எங்கெங்கு உள்ளன? சுற்றுலாக் கழகத்திற்குச் சொந்தமான இடங்கள் எங்கெங்கு உள்ளன?**

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வர லாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்களும், கண் கவர் இயற்கை எழுச்சியூட்டும் கோடை வாசஸ்தலங்களும், பாடல் பெற்ற புண்ணியத் தலங்களும், எழில்மிகு கடற்கரைப் பகுதிக ளும், வனவிலங்கு மற்றும் பறவை சரணால யங்களும் நிறைந்துள்ளன. எனவே, குறிப்பிட் டுச் சில இடங்களைச் சுற்றுலாத் தலங்கள் என்று கூற முடியாது. எனினும், சென்னை, காஞ்சிபுரம், மாமல்லபுரம், தஞ்சை, திருச்சி, சிதம்பரம், பிச்சாவரம், மதுரை, கன்னியா குமரி, ராமேஸ்வரம், உதகை, கொடைக்கா னல், முதுமலை, ஏர்க்காடு, ஒகனேக்கல் ஆகிய இடங்கள் நாட்டிலுள்ள பயணிகளை மட்டு மின்றி, வெளிநாட்டுப் பயணிகளையும் ஈர்க் கும் வகையில் சிறப்புற அமைந்துள்ள சில இடங்களாகும். அங்கெல்லாம் நமது கழகம் பயணிகளுக்கு வசதி செய்திருக்கின்றது.

**பயணிகளுக்கான தங்கும் இடங்கள் எங்கெங்கு உள்ளன? அங்குள்ள வசதிகள் வாய்ப்புகள் என்ன?**

தென்னகத்தில் மிக அதிக அளவில் சுற் றுலா விடுதிகள் நடத்தும் சிறப்பு இக்கழகத் தின் தனித்தன்மை ஆகும். தமிழகத்தில் சுற்

**பேட்டி : ஜி. ஆனந்தன்**



ஓட்டல் தமிழ்நாடு — மதுரை

றுலா சிறப்புப் பெற்ற இடங்களான சிதம்பரம், தஞ்சை, திருச்சி, மதுரை, கன்னியாகுமரி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ''ஓட்டல்கள் தமிழ்நாடு'' சுற்றுலாப் பயணிகளிடையே பெரும்பேறு பெற்றுள்ளன.

மதுரையிலும், கோவையிலும் புதுமையான முறையில் மூன்று நட்சத்திர ஓட்டல்கள் அமைக்கப்பெற்று, சுற்றுலாப் பயணிகளுக்கு மிக வசதியாக அமைந்துள்ளன. 1978ஆம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைப் பயணிகள் வசதிக்கென பெருவழி ஒய்வு விடுதிகளை (Motals) இக்கழகம் நிறுவி வருகின்றது.

இராணிப்பேட்டையில் 'மரகதம்' மற்றும் உளுந்தூர்ப்பேட்டையில் 'வைரம்' ஆகிய பெருவழி ஒய்வு விடுதிகள் நிறுவப் பெற்றுள்ளன. கிருஷ்ணகிரியில் 'மாணிக்கம்' என்னும் பெருவழி ஒய்வு விடுதி கட்டி முடிக்கப்பட்டு திறக்கும் தறுவாயில் உள்ளது. மற்றும் குறைந்த வருவாயுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகட்கென குறைந்த கட்டணத்தில் வசதிமிக்க இளைஞர் விடுதிகள் நிறுவும் பணியினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. இத்தகைய இளைஞர் விடுதிகள் ஏர்க்காடு, மாமல்லபுரம், உதகமண்டலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இராமேஸ்வரம், மண்டபம், கொடைக்கானல், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் இளைஞர் விடுதிகள் கட்டப்பட்டு திறக்கப்படும் தறுவாயில் உள்ளன.

மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகளின் முகாம் ஒன்று சுற்றுலாப் பயணிகளுக்குக் குறைந்த செலவில் தங்குவதற்கெனக் கடற்கரையின் அருகாமையில் அமைக்கப்பட்ட புதுமையான திட்டமாகும். அருமையான சூழ்நிலையில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த முகாமில் குடில்கள், இளைஞர் விடுதி, கூடாரங்கள், உணவுவிடுதி ஆகியவை அடங்கும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இந்தச் சுற்றுலாப் பயணிகள் முகாம் நாட்டிலேயே முதன்மையானதாகும்.

இக்கழகத்தின் சுற்றுலா விடுதிகள் அனைத்தும் நகரின் மையப்பகுதிகளில் அமைக்கப் பெற்று சுற்றுலாப் பயணிகள் எளிதில் அணுகும் வண்ணம் உள்ளன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் தேவைக்கேற்ப சுவையான உணவு வகைகள் சுகாதார முறையில் தயாரிக்கப் பெற்று கனிவாகப் பணிவுடன் வழங்கப்படுகின்றன. இந்த விடுதிகளில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டுள்ள அறைகளும், கூட்டங்கள் நடத்த அரங்குகளும் உள்ளன.

**சில சுற்றுலாத் தலங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரும்படியாக இல்லை எனக் கருதப் படுகிறதே? அதைப் பற்றி தாங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்? உதாரணம்—ஒகேனக்கல்.**

சில சுற்றுலாத் தலங்கள் பயணிகளைக் கவரும்படியாக இல்லை என்பதைவிட அந்த இடங்களில் தேவையான அளவிற்கு அடிப்படை வசதிகள் அமையவில்லை என்று கூறுவது சரியாக இருக்கலாம்.

சுற்றுலாத் தலங்களைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். வெளி நாட்டவர் கண்டு களிக்கும் இடங்கள் சில, நாட்டில் பல பாகங்களிலிருந்து வருகை தரும் பயணிகள் காணும் சுற்றுலாத் தலங்கள் சில மற்றும் உள்ளூர் மக்களை கவரும் சுற்றுலா மையங்கள் (Excursion Centre) ஆகியவை ஆகும். தேவைக்கேற்ப நிதிநிலையைப் பொருத்து இந்த சுற்றுலாத் தலங்களின் அடிப்படை வசதிகள் படிப்படியாக அமையப்பெற்று வருகின்றன.

நீங்கள் குறிப்பிட்ட ஒகேனக்கல் தர்மபுரி மாவட்டத்தில் இயற்கை எழில் சூழ்ந்த சிறப்பான இடமாகும். இது காவேரி நதி தமிழ்நாட்டில் முதன் முதலில் புகும் இடமாகும். இங்கு அமைந்துள்ள அருவிகளில் குளித்து மனம் மகிழலாம். ஒகேனக்கலின் சிறப்பானது நன்கு விளம்பரமாகாததால் மக்கள் அதனை சரியாகப் புரிந்து கொண்டு சென்று கண்டு களிக்க இயலவில்லை. அதனால் ஒகேனக்கல் சிறப்பை நன்கு உணர்ந்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் பலவசதிகளை அமைத்திருக்கிறது.

[தொடர்ச்சி அடுத்த இதழில்]




# மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

கு. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மதுரை மாவட்டம்

"இந்தியா கிராமங்களில் வாழ்கிறது" என்பது காந்தியடிகளின் சித்தாந்தம். அதற்கு அடிப்படைக் காரணம் நாட்டின் மக்கள் தொகையில் 80 சதவிகிதம் கிராமப் பகுதியைச் சார்ந்தது. எனவே இந்நாட்டிற்காகத் தீட்டப்படும் எந்தத் திட்டமும் கிராமங்களுக்குப் பயனளிக்கவில்லை என்றால் அதை ஒரு தேசியத் திட்டமாக ஏற்பதற்கில்லை என்பது முடிவான கருத்து. அதன் அடிப்படையில் நிறைவேற்றப்படுவது தான் கிராம வளர்ச்சித் திட்டங்கள்.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், அடிப்படை வசதிகளான குடிநீர்வசதி, சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள், மகப்பேறு நிலையங்கள், மருந்தகங்கள், அரிசனங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், மேம்படுத்தப்பட்ட சிறு பாசன ஆதாரங்கள், குடிசைகளுக்கு மின்னொளி ஆகியவை முழுமையாகவும் விரைவாகவும் கிடைத்து மக்கள் வளம் பெறவும் வகை செய்வதற்காகத் தமிழக அரசு தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

மாநில அளவில் வேறு எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத இந்தப் புதிய திட்டம் தமிழகத்தில் சிறப்புற நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தினைத் தீட்டி அதை நன்கு செயல்படுத்த வேண்டும் என்று அக்கறை கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்னின்று அதை நடத்துவதால் மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் துறைகளின் அதிகாரிகள், அலுவலர்கள் பெரிதும் அத்திட்டத்தில் ஈடுபாடுகொண்டு அல்லும்பகலும் பாடுபட்டு வருவதுடன் மிகக் குறுகிய காலத்தில் பல குறிப்பிடத் தக்க முன்னேற்றங்களையும் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மதுரை மாவட்டத்தில் 1979-80, 1980-81ஆம் ஆண்டுகளில் முதல் கட்டமாக நிலக்கோட்டை, போடி நாயக்கனூர், பெரியகுளம், பழனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 வட்டாரங்களி தன்னிறைவுத் திட்டம்நிறைவே றப்பட்டது, 31.3.81க்குள்ளா அனைத்து வேலைகளும் திட் மிட்டபடி மதுரை மாவட்டத்தி முடிக்கப்பட்டன. இத்திட் காலத்தில் இந்த ஐந்து ஊராட் ஒன்றியங்களில்உள்ளமக்களுக்கு தேவையான அடிப்படை வச களான இணைப்புச் சாலைகள் பாலங்கள், பள்ளிக் கட்டடங்க மகப்பேறு நிலையக் கட்டட கள், மருந்தகக் கட்டடங்க கட்டுதல், ஆதி திராவிடர்க குடியிருப்பிலிருந்து மயான களுக்குச் சாலைகள் அமைத்த போன்ற 881 வேலைகள் மொ தம் 132.16 இலட்சம் ரூபா செலவில் ஊராட்சி ஒன்றிய களின் மூலம் செய்து முடிக்க பெற்றன. தமிழ்நாடு குடிநீ வடிகால் வாரியம் நெடுஞ்சா






கிராமப் பணித்துறை, ஊரகக் கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கங்கள் மற்றும் மின்சார வாரியத்தின் மூலம் கீழ்க்கண்ட விவரப்படி மொத்தம் 134.80 இலட்சம் ரூபாய் செலவில் வேலைகள் செய்து முடிக்கப்பெற்றன.

மேலும் குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினராலும், கிராம மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பணி ஊரகக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமும், குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்தினராலும், ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் பேருந்து வழித் தடங்கள் மேம்பாடு செய்தல் நெடுஞ்சாலை மற்றும ஊரகப் பணித்துறையினராலும், மகப்பேறு நிலையக் கட்டடங்கள் உலக வங்கி நிதி உதவியுடன் நெடுஞ்சாலை-கிராமப் பணித்துறையினராலும் செயல்படுத்தப்பட்டன.

1982-83ஆம் ஆண்டில் 3-வது கட்டமாகத் தன்னிறைவுத் திட்டம், மதுரை மாவட்டத்தில், 11 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1. மேலூர், 2. நத்தம், 3. திருமங்கலம், 4. செல்லம்பட்டி, 5. வாடிப்பட்டி, 6. ஆத்தூர், 7. வடமதுரை, 8. வேடசந்தூர், 9. தேனி, 10. உத்தமபாளையம், 11. கம்பம்.

மேற்கண்ட 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ. 361.36 இலட்சம் மதிப்பீட்டில் 1,270 வேலைகளை எடுத்துச் செய்ய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

இதுவரை 214 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.107.11 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள அனைத்து வேலைகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்கண்ட வேலைகள் தவிர அத்தியாவசியமாகக் கருதப்பட்ட 368 வேலைகளை ரூ. 112.47 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டு, தேவையான கூடுதல் கருத்தும் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்:**

கிராமத்தில் வறுமையில் வாடும் மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவும், அதன்மூலம் சமுதாயம் மேம்பாடடைந்து நல்வாழ்வு பெறவும் மனித சக்தியைப் பயன்படுத்தி சமுதாயச் சொத்துக்களை உருவாக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமங்கள் போக்குவரத்து வசதிபெறசாலைகள் அமைத்தல், ஊராட்சிக்கட்டடங்கள் கட்டுதல், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், ஆதி திராவிட மக்களுக்கு மயான





சாலை அமைத்தல், ஆதிதிராவிட குடியிருப்புக்கான இடத்தைச் சமப்படுத்துதல், சமூக் காடுகள் வளர்த்தல் போன்ற நிரந்தரப் பயன் அளிக்கும் வேலைகள் எடுத்துச் செய்யப்பட்டு இலட்சக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படுகிறது.

1981-82ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 3,726 வேலைகள் முடிக்கப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 393.98 இலட்சம், முழுவதும் வகையுறச் செலவு செய்யப்பட்டுள்ளது என்பது பெருமைக்குரியதாகும். வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டு 34.23இலட்சம் மனிதசக்திநாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மக்களுக்குக் கூலியாகவும்,வேலைகளுக்குப் பொருட்களாகவும் செலவு செய்யப்பட்ட தொகை முறையே ரூ. 236.39 இலட்சமும், ரூ. 157.59 இலட்சமுமாகும். மேலும் 1,568.4 மெட்ரிக் டன் அரிசியும் மலிவான விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சிறப்பாக ஆதிதிராவிடர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 3.6 இலட்சம் ஆதிதிராவிடர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இந்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை மொத்தத்தில் 10.34 சதவீதம் ஆகும். 1981-82ல் எடுக்கப்பட்ட 204 பள்ளிக் கட்டடங்களில் இதுவரை 177 கட்டடங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

1982-83ல் இத்திட்டத்தின் கீழ் 2,236 வேலைகள் ரூ. 80- இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யத் திட்டமிடப்பட்டு இதுவரை 169 வேலைகள் முடிவு பெற்றன. ரூ. 68.89 இலட்சம் செலவு செய்யப்பட்டு உள்ளது. சிறப்பாக மாண்புமிகு முதலமைச்சரவர்களின் சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட சுகாதார வசதியுள்ள (சமையல்அறை பொருட்கள் வைப்பறை, உணவுக்கூடம் கொண்ட) 230 சமுதாயக் கட்டடங்கள் கட்டுவதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கட்டட வேலைகள் அனைத்தும் முன்னேற்ற நிலையில் உள்ளன. 30.9.82க்குள் முடிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஆதி திராவிடர்கள் குடியிருப்பு:**

ஆதி திராவிடர்கள் நலமுற வாழத் தேவையான உறைவிடம் நல்ல முறையில் அமைய வேண்டும் என்ற அடிப்படையில் 1981-82ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் 1,384 வீடுகள் கிராமாந்திர வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

1982-83ல், தமிழ்நாடு அரிசன வளர்ச்சிக் கழகத்தின் மூலம், வேடசந்தூரில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆதி திராவிட மக்களுக்கு என்று பிரத்தியேகமாக வீடுகட்டுதல், பால்மாடுகள் வழங்குதல் முதலிய வளர்ச்சிப் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டு நடவடிக்கைகளில் உள்ளது.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**


இத் திட்டம் வறுமைக் கோட்டின்கீழ், அதாவது ஆண்டு வருமானம் ரூ. 3,600-க்கும் கீழ் உள்ள குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்பாடடையச்செய்யும் குறிக்கோளுடன் செயலாற்றப்படுவதற்கும். பால் மாடுகள் வழங்கல், ஆடுகள் வளர்ப்பு ஆகிய உற்பத்தித் திறன் கொண்ட முயற்சிகளுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வசதி ஏற்பாடு செய்து, அக்கடனுக்கு எதிராக ஒரு கணிசமான தொகை மானியமாக வழங்கி ஊக்குவிப்பது இத்திட்டத்தின் பிரதான அம்சமாகும்.

1981-82-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களின் மூலம் பலனடைந்த 58,724 பேர் 10,424 பெண்களும், 6,644 பின் தங்கிய வகுப்பினரும் ஆவார்கள். இம்மாவட்டத்திற்கு அளிக்கப்பட்ட குறியீடு ரூ. 204 இலட்சமாக இருப்பினும் ரூ. 288.69 இலட்சம் செலவு செய்யப்பட்டு குறியீட்டை விஞ்சியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் பெரும் பகுதி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஒத்துழைப்புடனும், ஒருபகுதி சம்பந்தப்பட்ட இதர துறை அலுவலர்களின் ஒத்துழைப்புடனும் நிறைவேற்றப்பட்டதுகுறிப்பிடத்தக்கது. இதில் பின் தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்பட்ட உதவி ரூ. 32.02 இலட்சமும் பெண்களுக்கு ரூ. 56.52 இலட்சமும் ஆகும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்அனைத்தும் இத்திட்டத்தில் கடனுதவி வழங்கும் பணியில் சடுபடுத்தப்பட்டுள்ளன.

**சிறப்புத் திட்டம்:**

ஆதி திராவிடர்களுக்கான சிறப்புத் திட்டத்தின் மூலம் மொத்தம் பயனடைந்த 12,120 ஆதி திராவிட மக்களில் 1,274 பேர் பெண்கள் என்பதும் இம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மான்யக் குறியீடான ரூ. 86.44 இலட்சத்திற்கு மேலாக ரூ. 2.5 இலட்சம், அதாவது மொத்தம் ரூ. 89.01 இலட்சம் செலவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1982-83ம் ஆண்டிற்கு மதுரை மாவட்டத்திற்கு ரூ. 272.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் ஆதி திராவிடர்கள் மொத்தம் 6,621 பேர்கள் பயன் அடைந்துள்ளார்கள். இவர்களில் 1,141 பெண்கள். 31.8.82 முடிய இத்திட்டத்தில் பால் மாடுகள் ,ஆடுகள் மற்றும் இளைஞர் தொழிற் பயிற்சிக்காகவும் ரூ. 59 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆதி திராவிடர்களும் மற்றும் இளைஞர்களும் பொருளாதார மேம்பாடு எய்துவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



# சமூகநலக் காடுகள்

கிராமப்புற மக்களுக்குத் தேவைப்படும் எரிபொருள்கள், கலப்பை, மண்வெட்டி, கோடரி போன்ற கருவிகள் ஆகியவற்றுக்காக வேண்டிய மரங்களைப் பஞ்சமின்றிப் பெற்றிடும் நோக்கோடு உண்டாக்கப்படுபவை களே சமூக நலக்காடுகள். அரசு நிலம், ஊராட்சி மன்ற நிலம், ஏரிக்கரை, புறம்போக்குநிலங்கள், சாலை ஓரங்கள், வாய்க்கால் ஓரங்கள், இருப்புப்பாதை ஓரங்கள் போன்ற இடங்களில் தான் சமூகநலக் காடுகள் உருவாக்கப்படுகின்றன.

இத்திட்டம் சுவீடன் நாட்டு அரசு உதவியோடு, பத்தாண்டுகளில் ரூ. 108 கோடி செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981-82 முதல் 1985-86 வரையிலான முதல் கட்ட ஐந்தாண்டுகளுக்கு, சமூக நலக் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக 45 கோடி ரூபாய் செலவிட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரை இத்திட்டமானது மதுரை கிழக்கு மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், கொட்டாம்பட்டி மேலூர், நத்தம், செல்லம்பட்டி, சேடப்பட்டி, உசிலம்பட்டி கள்ளிக்குடி, டி. கல்லுப்பட்டி, திருமங்கலம், ஆண்டிப்பட்டி, பெரியகுளம், தேனி, போடி நாயக்கனூர், சின்னமனூர், கம்பம், உத்தமபாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை ஊக்குவிக்கும் விதத்தில் 1981-82ல், 440 குடும்பங்களுக்கு 95,500 பை நாற்றுகள் - அதாவது சிறு செடிகள் வழங்கப்பட்டுள்ளன. 1982-83ல் ஒரு இலட்சம் பை நாற்றுகள் இலவசமாக வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டு 31-7-82 வரை 8,000 பை நாற்றுகள் வினியோகிக்கப்பட்டு மரவளர்ப்புத் திட்டம் ஊக்குவிக்கப்பட்டது.

1982-83-ல் 50 எக்டேர் புறம்போக்கு நிலத்தில், பல வகைப் பயன் மரங்கள் உடையதான சமூகநலக் காடுகள் உருவாக்குவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் அதற்கான நடவு வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. புறம்போக்கு நிலத்தில் (poramboke plains) இவ்வாறான தோட்டங்கள் உருவாக்குவதன் மூலம் மக்களின் எரிபொருள் தேவை, தொழிற்சாலைகளின் தேவைகள் நிறைவாகக் கூடும்.

புறம்போக்குக் காடுகள் (poramboke hillocks) 1981-82-ல் 250 எக்டேரில் உண்டாக்குவதெனத் தீர்மானிக்கப்பட்டதில் 273.6 எக்டேர் பரப்பில் அவை உருவாக்கப்பட்டன. 1982-83-ல் 330 எக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தேவைக்காக மட்டுமல்லாமல் மண் அரிப்பைத் தடுக்கவும், காடுகளால் மழை பெருகும் என்பதை மெய்யாக்கவும் இவ்வகைத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் 1981-82-ல் கண்மாய்க்கரைக் காடுகள் 1257.8 எக்டேரில் உண்டாக்கப்பட்டன. மக்களின் எரிபொருள் தேவைக்காக மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையிலும் இவ்வகைக் காடுகள் உருவாக்கப்படுகின்றன.

இவை தவிர - கிராமப்புறக் கால்நடைகளுக்குத் தீவனம் கிட்டச் செய்வதற்கான கால்நடைத் தீவனத் தோட்டங்கள் (fodder) உண்டாக்கப்படவிருக்கின்றன.

1981-82-ல் 31 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலையோரத் தோட்டங்கள், நிழல் தரும் பயன் கருதி உருவாக்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பெருக்கும் காலத்தில் கரை உடையாதிருக்கவும் மண் அரிப்பைத் தடுக்கவும் வேண்டுமல்லவா? இதைமனத்திற் கொண்டு 1981-82ல் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு இம்மாவட்

டத்தில் கால்வாய்க் கரைத தோட்டங்கள் ( River canal fringes ) ஏற்படுத்தப்பட்டன. 1982-83ல் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏற்படுத்தப்பட விருக்கின்றன.

கடந்த இரண்டாண்டுகளில் இருப்புப் பாதைஓரத்தோட்டம் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ளம் கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் மனத்தில், வனவளத்தைப் பெருக்கும் எண்ணத்தை ஏற்படுத்திடவும், தமது விறகுத் தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள வழி காட்டவும் என மதுரை மாவட்டத்தில் பை நாற்றுகள் விற்பனைத் திட்டம் ( Tree cultivation extension programme) வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இந்த இரண்டாண்டுகளில் மட்டும் 55125 பை நாற்றுகள் இங்கே விற்பனை செய்யப்பட்டுள்ளன.



மதுரை மாவட்டத்தில், காடு வளர்ப்புக்கென 1981-82-ல், அளிக்கப்பட்ட நிதி இலக்கு ரூ. 22,76,500 ஆகும். 1982-83-க்கு ரூ. 36,79,835 நிதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவைகள் மட்டுமல்ல; மதுரை மாவட்டத்தில், 50 சதவீதம் மத்திய அரசின் உதவியோடு கிராமப்புற எரிபொருள்காடுகள் திட்டம் என்ற ஒன்றும் வகுக்கப்பட்டு, அத்திட்டம் சென்ற ஆண்டு பிப்ரவரி முதல் பழனி கோட்டத்தில் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விறகு மரத்தோட்டம் உண்டாக்குதல், சாலையோரத்தோட்டங்கள் உண்டாக்குதல் போன்ற வகையிலும் விரிவு செய்யப்பட்டது.

கல்விக்கூடங்களில் மாணாக்கர்களுக்கு வனவளத்தின் நன்மைகளை விளக்கும் வகையில் மரங்களை நடவும், அதன் வளர்ச்சியில் கவனம் செலுத்தவும் என, பள்ளிகளுக்கு இலவசமாகப் பை நாற்றுகள் தரும் ஒரு குழந்தைக்கு ஒரு செடி திட்டம்' (a tree for every child) என்றோர் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமூகநலக் காடுகள் திட்டம் இவ்வகையிலெல்லாம் மதுரை மாவட்டத்தில் மகத்துவம் பெற்று வருகிறது.



## அண்ணாவின் பேச்சாற்றல்

— புலவர் தணிகை உலகநாதன் —

மானமென்றால் வானத்தைப் பார்க்கும் மக்கள்
வாழ்வினையே சிந்தித்துப் பார்க்கவே, தன்
மானத்தை வளர்த்திடவே கருத்துக் கோவை
வகைவகையாய் எடுத்துரைத்தார்; நமது நாட்டில்
ஈனத்தை உண்டாக்கும் மூடக் கொள்கை
இல்லாமல் மறைந்திடவே வாழ்நா ளெல்லாம்
தேனமுதப் பேச்சாலே பிறர்உள் ளத்தைத்
திருகாமல்-உளையாமல் திருத்தும் வள்ளல்!

பகைவர்களும் பக்கத்தே வந்து நிற்கப்
பண்பான சொற்களையே பேசும் நல்ல
வகையான எடுத்துக்காட் டுகளைக் கூறி
மாற்றலரை மயக்கிவிட்ட மாயத் தேவன்
நகைச்சுவையும் மின்னலிடும் கதையும் தோன்றும்,
நவரசமும் கலந்ததுதான் அண்ணா பேச்சு!
மிகையின்றிச் சொல்கின்றேன் மேடைதோறும்
மென்காற்றாய் வீசியதாம் அவரின் மூச்சு!

# தொழில் நுணுக்கப் பயிற்சியில் தோகையர்



ஆண்களுக்கான கல்லூரிகள், மகளிருக்கான கல்லூரிகள், இரு பாலரும் சேர்ந்து படிக்கும் கல்லூரிகள், தொழிற் பயிற்சிக் கல்லூரிகள் என 335 கல்லூரிகள் மதுரைமாவட்டத்தில் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகைச் சிறப்பினதாக உள்ளன.

'பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில்
ஆணுக்குப் பெண் இங்கே
இளைப்பில்லை காண்
என்று கும்மியடி!'

—என்று பாடினான் நூற்றாண்டு விழா நாயகனான மகாகவி பாரதி.

அந்த வாக்கை மெய்ப்பிக்கும் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள், மதுரை மாநகரிலுள்ள அரசு மகளிர் தொழிற்பயிற்சிக் கல்லூரி மாணவிகள்.

திருப்பரங்குன்றம் செல்லும் சாலையில் உள்ள சிவப்புக்கட்டடத்தினுள் சிற்றெறும்புகளாய்த் தென்படுகின்றார்கள் அவர்கள். அத்தனைச் சுறுசுறுப்பு.

கல்லூரி முதல்வர் திரு. எம். ஆர். சுப்பையா அவர்களைச் சந்தித்து மகளிர் தொழிற்பயிற்சிக் கல்லூரி பற்றிய விவரங்களைக் கேட்கிறோம்.

நல்ல மதிப்பெண் பெற்றுப் பத்தாம் வகுப்பில் தேர்ச்சிபெற்றிருக்கும் மாணவிகள் இங்கே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். குறைவான இடங்களே இருப்பதால் தகுதிக்கே முதவிடம் தரப்படுகிறது. ஆண்டுதோறும் 110 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படும் இக்கல்லூரிக்கான இடங்களுக்கான விண்ணப்ப மனு ஒவ்வோராண்டும் ஐயாயிரத்திற்குக் குறையாமல் விற்பனையாகின்றன. இரண்டாயிரத்திற்குக் குறையாமல் மனுச் செய்யப்படுகின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கட்டடப் பொறியியல் (civil engineering) வணிகத் துறைப் பயிற்சி (commercial practice) எலக்ட்ரானிக் பொறியியல் (electronic engineering ) அலங்கார ஆடைகள் அமைக்கும் வகை தெரிதல் தைத்தல் (costume designing and dress making) ஆகிய நான்கு வகைத் தொழில் பயிற்சிகளே இக்கல்லூரியில் மாணவிகளுக்குத் தரப்படுகின்றன.

ஒவ்வொன்றும் மூன்றாண்டுப் படிப்பு.

அலங்கார ஆடைகள் அமைக்கும் வகை தெரிதல் தைத்தல் பிரிவு 1981ல் தான் துவக்கப்பட்டது. இதற்கென 36 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

எலக்ட்ரானிக் பொறியியல், கட்டடப் பொறியியல் ஆகிய இருவகைப் பயிற்சிகளுக்காகவும் 50 மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

வணிகத்துறைக்கான பயிற்சி வகுப்பில் 48 பேர் இடம் பெறுகிறார்கள்.

மொத்த மாணவிகளில் 60 சதவீதம் பேர் இங்குள்ள விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள். இந்த மாணவிகள் தொழிற் பயிற்சிக் கல்லூரி மதுரையிலே இருப்பதால், மதுரை வாழ் மாணவிகளே அதிகம் சேர்க்கப்படுவார்கள் என்று கருதிட இடமில்லை. உள்ள மாணவிகளைப் பற்றிய விவரத்தைக் கணக்கிட்டால் 40 சதவிதம் மாணவிகளே மதுரையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

ஆசிரியர்களாக 35 பேர்களும் கல்லூரி அலுவலகத்தில் பத்துப் பேர்களும் உள்ள இக்கல்லூரி கட்டடத்தை விரிவாக்கவும் மாணவிகள் எண்ணிக்கையைக் கூட்டவும் திட்டமிருப்பதாகக் கல்லூரிமுதல்வர் தெரிவித்தார்.



எதிரே மதுரைக் கல்லூரி, அடுத்த கட்டடத்திலேயே ஆண்களுக்கான தொழிற் பயிற்சிக் கல்லூரி எவ்விதச் சங்கடத்திற்கும் ஆளாகாமல் இந்தக் கல்லூரி மாணவிகள் சென்னை, கோவை போன்ற நகரில் உள்ள அரசுதொழிற் பயிற்சிக் கல்லூரி மாணவிகள் மட்டும் அல்ல; தனியார் தொழிற் பயிற்





சிக் கல்லூரி மாணவிகளைச் சேர்த்துப் பார்த்தாலும் சரி; அவர்களையெல்லாம்விட ஆண்டு தோறும் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுச் சாதனைச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்!

கல்லூரி துவக்கிய காலத்திலிருந்து இதுவரை ஒரே ஒருநாள் கூட 'ஸ்டிரைக்' அது இது என்ற அசம்பாவிதங்கள் ஏதும் இங்கே நடந்ததில்லை என்றால் இதுவே ஒரு மகத்தான சாதனையல்லவா!

கைப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கேற்ற இடம் மட்டுமே இக் கல்லூரி வளைவில் உள்ளது. ஆனாலும் என்ன, மாநில அளவில் நடைபெறும் அத்தனை விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்று மதுரை தொழிற்பயிற்சிக் கல்லூரி மாணவிகளே கடந்த மூன்றாண்டுக் காலமாகப் பெரு வெற்றி (championship) பெற்று வருகிறார்கள்.

## அண்ணா கண்ட அழகு மதுரை!

'நான்மாடக் கூடலில் நிற்கின்றேன். நானிலம் போற்றிடும் தனிச்சிறப்பினைப் பெற்ற தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்ததும் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கும் நிலையில் நிற்கின்றேன்.

'இங்கு நின்றிடும் எவருக்கும், அன்றொரு நாள் அறிவாளர் அறன் அளிக்க அரசாண்ட பாண்டிய பெருமன்னர் தமிழ் வளர்த்து, தமிழர் தம் தனிச்சிறப்பினைக் காத்து, புகழ்க்கொடி நாட்டி, தரணிமெச்சக் கோலோச்சி வந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள் எழத்தான் செய்யும்.

'மனக்கண்ணால் காணுகின்றேன் முதுபெரும் புலவர்கள் அவை நோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், மூதறிஞர், காணீர் தமிழ் நெறியை-தாரணியோர் மெச்சி ஏற்றிடத் தக்கதோர் நன்னெறியை-ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை என்றுரைத்த வண்ணம், திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

'தத்தமது ஏடுகளை வித்தகர் போற்றிடத் தக்கவென விளக்கி புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெல்லாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

'எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு இங்கிருந்தன அன்றைய நாளில்!

'இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிவிக்கின்றார்; நந் தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது.

'பாண்டிய நாடிதற்குப் பாங்களித்த மாமதுரை, தமிழ்மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை, தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச் செய்த திருமதுரை, வீரப் பேராற்றலால் மட்டுமின்றி - அறிவுக்கணைதொடுத்த மாண்பினாலும் பெருமைதனைப் பெற்ற வெற்றிக் கோட்டம் அந்த நாளும் வந்திடாதோ! என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலை பெறுவர் மாமதுரைப் பதியின் வரலாற்றுச் சிறப்பறியின்!'

[மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 7.9.1967ல் ஆற்றிய உரையிலிருந்து.]

ஆதாரம்: 'அண்ணாவும் அழகுத் தமிழும்'



# தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள்

உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர்-பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.

ஒரு சமூகமென்றிருந்தால் அச் சமூகத்தில் ஏழைகளில்லாமலும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூகச் சீர்திருத்த வேலையாகும்.

சீர்திருத்தங்கள்-மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமையவேண்டும்.

சக்கி முக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக்காலத்து "எடிசன்". அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம்; எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது.

நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத் தன்மையும், மனிதனின் பிறப்புரிமையாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள்.

ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும் அவரவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்தவேண்டுமானாலும் அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிகாரிகள் எல்லோரும் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, நாணயம் இவைகளை வளர்க்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூடங்கள் எழுத்து வாசனையையும் ஏதாவது ஒரு துறையில் விளக்கத்தையும் தான் உண்டாக்க உதவும். வாசகசாலை என்பது பொது அறிவு விளக்கத்தையும் சகல துறைகளிலும் ஞானத்தையும் உண்டாக்கும்.

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாயப்பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இராதவரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால் தமிழர்களுக்குத் தாய் மொழிப்பற்று பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

கூட்டுறவு என்கிற கொள்கை சரியான உயரிய முறையில் நம் நாட்டில் ஏற்பட்டுவிடுமானால் மக்கள் சமூகமே சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வதென்ற ஏக்கமின்றி, திருப்தியுடன் நிம்மதியாகக் குதூகலமாக வாழுவழி ஏற்பட்டுவிடும்.

மக்களுக்குள்ள சமூதாயக்கொடுமை தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ அது போலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமாகும்.

பெண்களுக்குப் பகுத்தறிவும், கல்வியும், உலக நடப்புக் கல்வியும், தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங்களையோ, இலக்கியங்களையோ, காணவும் கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை, முதலானவை அவற்றைஉடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.

வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

# பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்



மக்களை நல்லவர்களாக்க வேண்டுமா
னால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மத
வெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க
எண்ணம் அழிந்தாக வேண்டும்.

பொருள் பாடுபடுபவனுக்குப் போய்ச்
சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும்
பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்பட
வேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு
விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக்
கூடாது.

மொழிப் பற்று இருப்பது எந்த வகை
யிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு.
அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு,
வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே,
கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும்
விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின்
துணிவு.

நாம் அறிவுத் துறையில் முன்னேற்ற
மடைந்தால்தான் நம்மிடம் உள்ள பழைய
கருத்துக்கள் அகலும்; பாசி பிடித்துப் போன
கண்மூடிப் பழக்கங்களும் தொல்லையும். மற்ற
மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம்
தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச்
சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, சாதி
முறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்
தான்.

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி,
அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா,
வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறி
வுக்கு ஏற்றதா என்றுதான் நாம் பின்பற்ற
வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம்
என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு
எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாம
லும் பின்பற்றக்கூடாது.

மனிதனின் மனம் எல்லா உலகங்களை
யும் விடப் பெரியது! அந்த இதயம் பண்புக்
கேற்றபடி பெரிதாகத் தக்கது, நினைப்புக்
கேற்றபடி குறுகக் தக்கது. ஆகவே, அந்தமனித
மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க
வேண்டும்.

சட்டம்- ஒழுங்கு பற்றிய
பழையதத்துவத்தோடு
புதிய காலமும் மக்களிடம்
உணர்வுகளும் பொது
மக்கள் தேவைகளும்
இணைக்கப்படவேண்டும்.

நாட்டில் கற்றறிவாளர்கள்
எந்த அளவில் இருக்கின்
றனரோ, அதைக் கொண்டு
தான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இய
லும்.

பஞ்சாங்கம் அல்ல புத்தகசாலையில்
இருக்க வேண்டியது. அட்லஸ்-உலகப்படம்
இருக்கவேண்டும்.

மறுமலர்ச்சி என்பது மாண்புகளை
மாய்த்திடும் நஞ்சு அல்ல மாண்புகளை மாய்க்
கும் நச்சுப் பூச்சிகளை அழித்திடும் முறை.

காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டு
தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில்
மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம்
மறைந்துவிடும்.

பழமையின் பிடியிலிருந்து மக்களைப்
பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபி
தத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்
டும் வாலிபர்கள்.

சமுதாயக் கொடுமைகள் ஒருபுறமும்
சாதிப் பூசல்கள் ஒருபுறமும், வைதீகம் ஒரு
புறமும், வீண் வாய் வேதாந்தம் வேறோர் புற
மும் இருந்து கொண்டிருப்பதால் தான் இந்த
நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர்.
மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

ஒற்றுமை-கூட்டுறவு-ஒப்பந்தம்-கூடிவாழ்
தல்-நட்பு-அன்பு என்றுள்ள எத்தனையோ
பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே
செல்லக்கூடியவை. முழுத்திருப்தி தருபவை
அல்ல - தோழமை என்ற நிலையை அடையும்
படிக்கட்டுகள் இவை. ஆனால் தோழமை இவ்
வளவுக்கும் மேலான ஒரு நிலை பேதம் நீக்கிய
நிலை அல்ல-பேதம், ஏற்படாத நிலை - ஏற்
பட முடியாத நிலை.

# செப்டம்பர் 15 முதல் மதுரை மாநகரில் 25000 மாணவ, மாணவிகளுக்கும் 40000 குழந்தைகளுக்கும் சத்துணவு



கே.எஸ். ஸ்ரீபதி. இ.ஆ.ப
ஆணையாளர்
மதுரை மாநகராட்சி.

கலை வளரும் தலை நகரமாகவும், தமிழ்க் கலாச்சாரத்தின் தலை நகரமாகவும் விளங்கும் மதுரை நகர் தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகரமாகும். 1866ஆம் ஆண்டு, 2.56 ச.கி.மீ. பரப்பளவும், 41,600 மக்கள் தொகையையும் கொண்ட நகரமாக இருந்த மதுரை, தற்போது 51.85 ச.கி.மீ. பரப்பளவில் விரிந்திருக்கிறது.

மதுரை நகரில் தற்போது மக்கள் தொகை ஏறக்குறைய 9 இலட்சம். மதுரை நகர் வாழ் மக்கள் தவிர நாள்தோறும் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இந்நகருக்கு வந்து செல்கின்றனர். மதுரை நகருக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து தரும் பொறுப்பை மதுரை மாநகராட்சி ஏற்றுள்ளது. குறிப்பாகக் குடிநீர் வழங்குதல், கழிவுநீரை அகற்றுதல், நகரில் சுகாதாரத்தைப் பேணுதல், முறையாக நகரமைப்பு ஏற்படுத்துதல், கல்வி வசதிகளைப் பெருக்குதல், சாலைகளை அமைத்தல், பராமரித்தல் மற்றும் மின்சார வினியோகம் போன்ற பணிகளை மாநகராட்சி செவ்வனே செய்து வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றத்தின் வழி காட்டுதலிலும், தமிழக அரசின் பேருதவி டும் மதுரை மாநகரை மேம் த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக, பல்லாயிரக்கணக்கான தெருக் குழாய்கள் நகர் முழுவதும் பதிக்கப்பட்டு அவைகளின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர வீடுகளுக்கும் குடிநீர்க் குழாய்கள் இணைப்புகள் தரப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது 39000 இல்லங்களுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1981-1982ஆம் நிதியாண்டில், 2201 வீடுகளுக்குப் புதிய குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 413 தெருக்குழாய்கள் குடிநீர் வழங்கப் பதிக்க நடவடிக்கையிலுள்ளது. 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 132 மேல் நிலைத் தொட்டிகள் குடிநீர்வழங்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே வேறு எந்த நகரிலும் இந்த அளவுக்கு மேல்நிலைத் தொட்டிகள் இல்லையென்பது பெருமைக்குரிய ஒன்றாகும். இது தவிர, ஆங்காங்கே அடி குழாய்கள் பொருத்தப்பட்டு, ஆழ் குழாய்க் கிணறுகள் மூலம், குடிநீர் வழங்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பல்வேறு பகுதிகளில் கழிவு நீரேற்று நிலையங்களின் இணைப்புகள் மூலம் கழிவுநீர் அகற்றப்பட்டு, தலைமைக் கழிவுநீரேற்று நிலையத்திற்கு வந்தடைகிறது.

நாள் ஒன்றுக்குச் சுமார் 82 இலட்சம் காலன் கழிவு நீர் நகரிலிருந்து அகற்றப்படுகிறது. கழிவு நீர் அகற்றும் இணைப்புக் குழாய்கள் இல்லங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 46,000 இல்லங்களுக்குக் கழிவு நீர் அகற்றும் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 137 இல்லங்களுக்கு இவ்வகை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை நகர் பாதாளச் சாக்கடைத் திட்டம் மதுரை வட பகுதியில் ரூ. 190 இலட்சம் செலவில் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரை நகரின் தென் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாத பகுதிகளுக்கும் இத்திட்டம் கொண்டுவர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதல் கட்டமாக இஸ்மாயில்புரம் கழிவுநீர் திட்டம் ரூ. 21.61 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

கீழச்சந்தைப் பேட்டையில் ரூ. 7.97 இலட்சம் செலவில் 3வது கழிவுநீர் நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. அவனியாபுரத்தில் ரூ. 44.9 இலட்சம் செலவில்

கழிவுநீர்த் தேக்கம் அமைக்கப் பட்டிருக்கிறது.

**சாலைகள்:**

மதுரை நகரில் 453.389 கிலோ மீட்டர் நீளச் சாலைகள், மதுரை மாநகராட்சியால் பராமரிக்கப்படுகின்றன. உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, மதுரை நகரச் சாலைகள் மிகச் சீரிய முறையில் புதுப்பிக்கப்பட்டன. சாலைகளில் சேரும் குப்பைகள் முதலானவை தனிப் பிரிவால் அவ்வப்போது சுத்தப்படுத்தப்படுகின்றன. சாலைகளில் ஏற்படும் பழுதுகளும் பெருமளவில் உடனுக்குடன் சரி செய்யப்படுகின்றன.

மதுரை அருப்புக்கோட்டைச் சாலையில் ரயில்வே லைனுக்கு மேல் மேம்பாலம் கட்ட ரூ.83.29 இலட்சத்திற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றம் சாலையுடன், அருப்புக்கோட்டைச் சாலையை இணைத்துப் புதிய சாலை அமைக்கும் பணி ரூ.6.60 இலட்சம் சம் செலவில் அரசு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மதுரை நகரில் உள்ள 108 குடிசைப் பகுதிகளை மேம்படுத்த இதுவரை ரூ. 175 இலட்சம் நெடுஞ்சாலைத் துறையிடம் வழங்கப்பட்டுள்ளது. இப் பணி விரைந்து செய்யப்பட்டு வருகின்றது. நகரின் முக்கிய நடைபாதைகளில் சிமெண்டுத் தட்டுக்கற்கள் பரப்பி சிமெண்ட் கைப்பிடி கிராதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**கல்வி**

மதுரை மாநகராட்சியில் 71 துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளும், 12 உயர்நிலைப் பள்ளிகளும், 8 மேல்நிலைப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மதுரை நகரின் கல்வி வளர்ச்சியில் மாநகராட்சி பெரும் பங்கு வகிக்கிறது. இம்மாநகராட்சியால் நடத்தப்படும் திருவாப்புடையார் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் அரசுத் தேர்வில் 99 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். மதுரை மாநகராட்சி, கீழ ஆவணி மூல வீதி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 96 மாணவிகள் அரசுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இக்கல்வி ஆண்டில் மதுரை நகர், கே.கே. நகர்ப் பகுதியில் புதிதாக ஆரம்பப்பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

**நகரமைப்பு**

வளர்ந்து வரும் மதுரை நகரில் நகரமைப்பு பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கின்றது. இருப்பினும் மாநகராட்சி நிர்வாகம் இப்பிரச்சினையை ஏற்றுச் சிறந்த நகராக மதுரை நகரை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மதுரை நகர் இயல்பாகவே அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள நகராகும். மதுரை நகரை,

நான்கு திசையிலும் நந்நான்கு
தெருக்களாய்த்
தோன்றும் தாமரைபோல்
துலங்கும் நகரிது
அங்கயற் கண்ணியும்
ஆலவாய்ச் சொக்கரும்
நடுவண்ணிலிருந்து அரசோச்
சும் மதுரை.

என்று குறிப்பிடுவார்கள்.

இது நமது முன்னோர்களின் நாகரீக வளர்ச்சிக்கும் நகரமைப்புத் திறனுக்கும் சான்றாகவும் விளங்கி வருகிறது.

இப்பாரம்பரியத்தைக் காக்கின்ற வகையில் பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டி மதுரை மாநகராட்சி செயல்படுகின்றது.

உள்ளூர்த் திட்டக் குழுமத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் கொள்ளப்பட்டு வருகின்றன. மதுரை நகர் எல்லிஸ் நகர்ப் பகுதியில் 223.65 ஏக்கர் பரப்பளவில் ரூ. 450 இலட்சம் செலவில் குடியிருப்பு அமைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் மிகப் பெரிய வணிக மையம் ஒன்று ரூ.2 கோடி செலவில் கட்ட திட்டம் வகுக்கப்பட்டு, அதன் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டு, கடைகள் நடத்த வாடகைக்கு விடப்பட்டுள்ளன. ஆர்.எம்.எஸ். சாலையில் ரூ. 18 இலட்சம் செலவில் தரைத் தளத்தில் 26 கடைகளும், முதல் தளத்தில் அலுவலகப் பகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மதுரை நகரின் மத்திய காய்கறி அங்காடியின் இட நெருக்கடி தவிர்க்க, காய்கறி அங்காடி ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் முன்புறம் மொத்த வியாபாரக் கடைகள் கட்ட ரூ. 7.9 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதுரை நகரில் அமைந்துள்ள வண்டியூர்க் கண்மாயை ஒரு மிகப் பெரிய பொழுதுபோக்கு மையமாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கண்மாயில் மேற்குக் கரைப் பகுதியில் முதல் கட்டமாக ரூ. 10 இலட்சம் செலவில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. மொத்த மதிப்பீடு ரூ. 303 இலட்சமாகும். பனகல் தெரு, சிலைக்கு அருகில் கடைகள் மற்றும் தங்கும் விடுதிகள் ரூ. 4 இலட்சம் செலவில் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓர்க் ஷாப் ரோட்டில் கல்யாண மண்டபம் ஒன்றும் வணிக வளைவும் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராசாசி விளையாட்டுத் திடலில், காய்கறிச்சந்தைக் கடைகள் மற்றும் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுரை நகரின் வடபகுதியில் இரண்டாவது பேருந்து நிலையமாக அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டு 15.10.81ந் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

மதுரை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நகரைச் சுற்றி சுற்றுச் சாலையமைக்க வடிவமைப்பு நெடுஞ்சாலைத் துறையினரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மதுரை நகரின் விரிவாக்கப்பகுதிகளில் பல்வேறு

## சாப்பாடும் பாதுகாப்பும்

**மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடைய பிள்ளை (இ.ஆ.ப) கொடைக்கானலுக்குச் சென்றிருந்தார். அங்கு சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படும் பள்ளி ஒன்றுக்குத் திடீரென்று சென்று பார்வையிட்டார். எவ்விதக் குறையுமில்லாமலே எல்லாம் நடந்தன. அத்திட்டம் பற்றி, அங்கே வந்திருந்த குழந்தையொன்றின் தாயாரிடம் விசாரித்தார் மாவட்ட ஆட்சித் தலைவர்.**

**"முன்னெல்லாம் இந்தக் கொழந்தையெப் பார்த்துக்கனும் கிறதுக்காகவே நான் வீட்லயே இருந்துர்றதுங்க. சரியானபடி புள்ளைக்கிச் சாப்பாடும் தர முடியறதில்லைங்க. இப்ப, நம்ம அரசாங்கமே இதுங்களுக்கு நல்லா சோறும் போட்டு, படிக்க வெச்சிப் பார்த்துக்கிறதால, நான் குழந்தையைப்பத்திய பயமே இல்லாமெ வெளியே வேலைக்கும் போய்வர முடியுதுங்க. குழந்தைக்குச் சாப்பாடும் ஆச்சி, பாதுகாப்பும் ஆச்சி பாருங்க!" என்று பூரிப்போடு சொன்னார் ஆதிவாசிக் குடியைச் சேர்ந்த அந்தப் பெண்மணி.**

புதிய நகரமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மதுரை மக்களுக்கு வரிப்பளுவை அதிகரிக்காமல் மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கும் வகையில் மேற்கண்ட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**சுகாதாரம்:**

நகரின் சுகாதாரத்தைக் காக்கும் பணிகள், இம் மாநகராட்சியின் நகர் நலப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாநகராட்சியின் சார்பாக 11 ஆங்கில முறை மருந்தகங்கள், 5 இந்திய முறை மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகள் தவிர 15 தாய்சேய் நல இல்லங்கள், ஒரு வீடி மருத்துவ நிலையம் ஆகியவைகள் மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் மூலமாக நகரின் ஏழை எளிய மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை சிறந்த முறையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியால் இரண்டு, குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 10 மையங்களில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றன. ஏழைகள் விடுதி ஒன்றும் இம்மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றது. மாநகராட்சியால் நடத்தப்படும் 8 குடும்ப நல மையங்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் வெற்றிக்குப் பயன்பட்டு வருகின்றன. நடமாடும் மருந்தகம் ஒன்று, இம்மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. இரத்தம், சளி, மலம் போன்றவை பரிசோதிக்கும் பரிசோதனை நிலையம் ஒன்று இம்மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்குக் கட்டணம் எதுவும் பெறாமல், பரிசோதனை செய்து கொள்ள இந்த நிலையம் உதவுகிறது. மிகக் குறைந்த கட்டணம் பெற்றுக் கொண்டு எக்ஸ்-ரே எடுத்துத் தரும் எக்ஸ்-ரே நிலையம் ஒன்றும் மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள் இம்மாநகராட்சி மருத்துவர்களால் செய்யப்படுகின்றன. இத்திட்டம் சிறு குழந்தைகளுக்கு உள்ள நோய்களை முன்பே கண்டறிந்து, இவைகளை நீக்க பெரிதும் பயன்பட்டு வருகிறது.

நகரில் காலரா, அம்மை, மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் பரவாமல் மாநகராட்சியால் தடுக்கப்பட்டு வருகின்றன. தொற்று நோய்கள் குறிப்பிடத்தக்க அளவில் பரவும் நிலை ஏற்படுகின்ற காலங்களில் அதை நீக்கப் பெரிய அளவில் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலேரியா போன்ற நோய்கள் வராது தடுக்க தனித் திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழ், கொசு உற்பத்தியைப் தடுக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரின் பல்வேறு பகுதிகளில் பொதுக்கழிப்பறைகள் மற்றும் சிறுநீர்ப்பிறைகள் ஆகியவை ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுகாதாரச் சிற்றூழியர்களின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு முக்கிய இடங்களில் கட்டணம் கொடுத்துப் பயன்படுத்தும் கழிப்பறைகள் - சிறுநீர்ப்பிறை இம்மாநகராட்சியால் பராமரிக்க பட்டு வருகின்றன.

**மின் விநியோகம்:**

மின் விநியோகத்தை ஏற்று நடத்தும் ஐந்து உள்ளாட்சி மன்றங்களில் மதுரை மாநகராட்சியும் ஒன்று. உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டியும், அதற்குப் பின்பும் மாநகரின் முக்கிய சாலைகளில் சோடியம் வாயு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே 64426 மின் இணைப்புகள் இம்மாநகராட்சியால் வழங்கப்பட்டிருக்கின்றன.

நகரின் பெருகிவரும் தேவைக்கேற்ப 1981-1982ஆம் நிதியாண்டில் வீடுகளுக்கு 4125 மின் இணைப்புகள் மேலும் வழங்கப்பட்டுள்ளன. நகரை ஒளி மயமாக்க சோடியம் வாயு விளக்குகள் தவிர, மெர்க்குரி வாயு விளக்குகள், கட் ஆஃப் லாம்ப்ஸ் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த நிதி ஆண்டில் 16 கி.மீ. தொலைவில் புதிதாக மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

மின் தடை ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு புதிதாக 9 டிரான்ஸ்பார்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது தவிர 19 பழைய டிரான்ஸ்பார்கள் மாற்றப்பட்டு அதிக சக்தி உள்ள புதிய டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்பட்டுள்ளது. பழுது ஏற்பட்ட 12 டிரான்ஸ்பாமர்கள் மாற்றப்பட்டு புதிய டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மின்சார விநியோகத்தில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரிப்படுத்தப்படுகின்றன. மதுரை நகரின் முறையான மின்சார விநியோகம் செயல்பட்டு வருகிறது. மின்சார விநியோகம் மதுரை மாநகராட்சியில் இலாபகரமான துறையென்பது குறிப்பிடத்தக்கது.

பெருகி வரும் மக்கள் தொகையில் உருவாக்கப்படும் பல்வேறு பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும், தேவைகளையும் மதுரை மாநகராட்சி ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு தனது தொண்டைத் தொடர்கின்றது. மதுரை நகர் வாழ் மக்களுக்கும், மதுரை நகருக்கு வந்து செல்லுகின்றவர்களுக்கும், தேவையான எல்லா வசதிகளையும் செய்து தருகிறது.


மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 15.9.1982ம் நாள் முதல் ஆண்டு முழுவதும், மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் ஏறத்தாழ 25,000 மாணவ, மாணவிகளுக்குச் சத்துணவு வழங்கப்படவிருக்கிறது. இது தவிர இரண்டு வயது முதல் 5 வயது வரை உள்ள ஏறத்தாழ 40000 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கென 400 மையங்கள் அமைக்கும் பணி போர்க்கால நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தன்னிறைவுத் திட்டப் பணிகள்

மதுரை மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக 1981-82ஆம் ஆண்டில் 18 ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

1. மதுரை கிழக்கு, 2. மதுரை மேற்கு, 3. திருப்பரங்குன்றம், 4. கொட்டாம்பட்டி, 5. அலங்கா நல்லூர், 6. சேடப்பட்டி, 7. தே.கல்லுப்பட்டி, 8. வத்தலக்குண்டு, 9. உசிலம்பட்டி, 10. கள்ளிக்குடி, 11. சாணார்ப்பட்டி 12. ரெட்டியார்சத்திரம், 13, ஒட்டன்சத்திரம் 14. தொப்பம்பட்டி, 15. குஜிலியம்பாறை, 16. கொடைக்கானல், 17. ஆண்டிப்பட்டி 18. சின்னமனூர்.

இந்த ஒன்றியங்களில் பல்வேறு இனங்களில் 2662 வேலைகள் ரூ. 442.85 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செய்து முடிக்கப்பெற்றன.



# புதிய பீர்க்கங்காய்

பீர்க்கங்காய் எல்லாரும் விரும்பிப் பயிர் செய்யும் கொடிப்பயிர். கோ. 1, ஹைச். 160 எனும் வகைகள் தமிழ்நாட்டில் பயிரிடப் படும் ஆய்வு வகைகளாகும். இவ் வகைகள் குறைவான மகசூல் கொடுக்கும் தன்மை கொண்டவை. இவ்விரண்டு வகைகளை விட நல்ல பண்புகளைக்கொண்ட ஒரு பீர்க்கங்காய் வகையைத் தேர்ந்தெடுக்கும் பயிர் சிறப்பிப்பு ஆராய்ச்சி 1971-ஆம் ஆண்டு முதல் பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஹைச் 160 எனும் பீர்க்கங்காய் வகை விதைகளைக் காமாக் கதிர் வீச்சுக்கு உட்படுத்தி திடீர் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அம்முயற்சியில் விளைந்ததே இவ்வாண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட பிகேஎம் 1 பீர்க்கங்காய் வகை.

இவ்வகை அதிக மகசூல் தரும் சாயில் நார் குறைவாக இருக்கும். நடுத்தர எழுச்சியில் வளரும். முன்பருவத்திலும் பின் பருவத்திலும் விதைக்கலாம். தமிழ்நாடு முழுவதும் பயிரிடலாம்.

**பி. கே. எம். 1 பீர்க்கங்காய் வகைக்குரிய சிறப்புப் பண்புகள்:**

மகசூல்—25.1 டன்(ஒருஎக்டரில்) ஒருகாயின் எடை : 300 கிராம்.

ஒரு காயின் நீளம்—47செ.மீ.

ஒரு காயின் நடுத்தரச் சுற்றளவு —24 செ. மீட்டர்.
காயின் நிறம்—கரும் பச்சை.

பயிரிடும் பருவம்—ஜூன்-ஜூலை முதல் செப்டம்பர்-அக்டோபர்.
டிசம்பர்—ஜனவரி முதல் மார்ச்சு—ஏப்ரல்.

வயது—160 நாட்கள்.

விதை அளவு—ஒரு எக்டருக்கு 1.5கிலோ

இடைவெளி—2.5 மீ. —2. மீ.

நார்—காய்களில் நார்குறைவாக அமையும்.

தரம்—உயர்வானது.

**தோட்டத் தயாரிப்பு:**

நிலத்தை நான்கு அல்லது ஐந்து முறை ஆழமாக உழுது பண்படுத்த வேண்டும். 45. செ. மீ. சதுரமும் ஆழமும் கொண்ட குழிகளை எடுக்கவும். பின்பு சிறிது நாட்கள் ஆறப் போட்டு ஒவ்வொரு குழியிலும் 10 கிலோ சாணி உரம் அல்லது கலவை எருவையும், மண்ணுடன் கலந்து நிரப்பவும்.

**விதைப்பு:**

ஒவ்வொரு குழியிலும் 4.5 விதைகளை 2 செ. மீ. ஆழத்தில் குழியினுள் அங்குமிங்குமாக இட்டு குடம் அல்லது பூவாளி கொண்டு தண்ணீர் விடவும். தண்ணீர் விடும்போது குழிகளைத் தண்ணீர் அரிக்காமலும், விதை வெளியில் தெரியாமலும் ஒரு ஓரத்தில் விடவும். விதைகள் முளைக்க 4—6 நாட்களாகும். விதைகள் முளைத்து 25—30 நாட்கள் சென்ற பிறகு ஒவ்வொரு குழியிலும் 3 செடிகளை வைத்து மீதிச் செடிகளைப் பிடுங்கி விடவும்.

விதை முளைப்பதுவரை தினந்தோறும் குடம் அல்லது பூவாளி கொண்டு தண்ணீர் விடவும். பின்னர் 3-4 நாட்களுக்கு ஒரு முறை வாய்க்கால் வழி நீர் பாய்ச்சவும். அதிகமான நீர் குழிகளில் தேங்காமல் வடித்து விடவும் செடிகள் வளர வளர நீர் தங்குமிடங்களைப் பெரிதாக்கவும். பின்னர் செடிகளுக்கு 2 மீட்டர் உயரத்தில் பந்தல் அமைக்கவும்.

**பின்செய் நேர்த்தி**

களைகளை அவ்வப்போது நீக்கவும். ஒவ்வொரு செடிக்கும் முள்ளில்லாத கொழுகொம்பைக் கொடுத்து பந்தலுடன் இணைக்கவும். இக்கொம்புகள் செங்குத்தாய் கொடிகள் படர வகை செய்யும் நிலையில் அமைய வேண்டும். விதைத்து 30 நாட்கள் சென்ற பிறகு ஒவ்வொரு குழியிலும் 100 கிராம் அமோனியம் சல்பேட்டை இட்டு கொத்திக் கொடுத்து நீர்பாய்ச்சவும். விதைத்த 55 நாட்கள் சென்ற பிறகு காய்களைப் பறிக்கலாம்.


**பயிர்ப் பாதுகாப்பு முறைகள்:**


பழ ஈக்கள், இலைப் புழுக்கள் போன்ற பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு பெற கார்பரில் 0.1 சத மருந்தை (1 கிலோ மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது ரோகார் 0.06 சதம் மருந்தை (ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மிலி மருந்தைக் கலந்து) தெளிக்க வேண்டும். இம் மருந்தைச் செடிகள் பூக்க ஆரம்பித்ததும், 15 நாட்கள் இடைவெளியில் 3—5 தடவைகள் தெளிக்கவும்.

மருந்து தெளிப்பதற்கு முன்னால் விளைந்த காய்களை அறுவடை செய்யவும். பி. எச். சி. டி. டி. டீ. எண்டிரின் மருந்துக் கலவையை எக்காரணம் கொண்டும் தெளிக்கக் கூடாது.

சாம்பல் நோயிலிருந்து பாதுகாப்பு பெற 10 லிட்டர் தண்ணீரில் 5 கிராம் மொரிஸ்டான் மருந்து வீதம் கலந்து தெளிக்கவும்.

**இப்புதிய வகையின் விதைகளைப் பெற பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.**





# கால்நடைப் பராமரிப்பில் கவனம்

“பாலைப் பொழிந்துதரும்பசு
தான்-அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா”

என்று பாடி, கால்நடைக்குத் தனி மதிப்பளித்தார் மகாகவி பாரதியார்.

கால்நடைப் பராமரிப்புப் பணிகளைச் சிறப்பாகச் செயற்படுத்துதுவதற்காக மதுரை மாவட்டத்திற்கு ஒரு கால்நடைப் பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் மதுரையில் செயற்பட்டு வருகின்றார். மதுரை மாவட்டத்தில் கோழிகள் உட்பட கால்நடைச் சங்கியை க்ணக்குப்படி 33,02116 கால்நடைகள் உள்ளன.

சால்நடைகளுக்கு மருத்துவ வசதி, மேம்பாட்டுத் திட்டங்கள், கேந்திரக் கிராமத் திட்டம், வெக்கை நோய்த் தடுப்புத் திட்டம், நோய்ப் புலனாய்வுத் திட்டம், மாதிரி அளவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கோழியின விரிவாக்கத் திட்டங்கள், செயற்கைமுறைக் கருவூட்டலுக்கான பொலிகாளை நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆட்டின வளர்ப்பு, பன்றி வளர்ப்பு மற்றும் பெருக்கம், வறட்சித் துயர் துடைப்புப் பணிகளுக்கான திட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கன்றுகள்வளர்ப்புத் திட்டம் ஆகிய இயல்பான மற்றும் சிறப்பான திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இத்துறையினால் செயற்படுத்தப் பெறுகின்றன.

மதுரை மாவட்டத்தில் உள்ள ஆறு கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர்களின் ஆளுகையை உள்ளடக்கிய முப்பத்து நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் செயற்படும் மொத்தம் 69 கால்நடை மருத்துவ நிலையங்கள் உள்ளன. அவற்றில் (6 கால்நடை மருத்துவ மனைகள், 63 கால்நடை மருந்தகங்கள்) கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சை செய்யப்பட்டும் தரக் குறைவான வேண்டாத காளைகள் காயடிக்கப்பட்டும், நோய் வருமுன் தடுப்பதற்குக் கால்நடைகளுக்குப் பருவங்கள் தோறும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டும் சிறப்பான பணிகள் ஆற்றப்பட்டும் வருகின்றன.

மதுரை, உசிலம்பட்டி மற்றும் வாடிப்பட்டி ஆகிய மூன்று இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு மூன்று கால்நடை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. எட்டுச் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களும் 200 செயற்கை முறைக் கருவூட்டல் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பால் உற்பத்தியைப் பெருக்குதலும், நல்ல தரமான உயர் இனக் கால்நடைகளை உற்பத்தி செய்தலும் இத்திட்டத்தினுடைய விழுமிய நோக்கமாகும். இத் திட்டங்களின் மூலம் ஆண்டிற்கு 1.63 லட்சம் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 16,000 தரமுயர்ந்த பால் திறன் அதிகமுள்ள கிடேரிக் கன்றுகள் ஆண்டுதோறும் உருவாகின்றன.


மதுரை மாவட்டத்தில் எட்டுக் கேந்திரக் கிராம நிலையங்களும் எண்பது கேந்திரக்கிராமக் கிளை நிலையங்களும் ஒவ்வொரு கேந்திரக் கிராம நிலையத்திற்கும் பத்துக் கிளை நிலையங்கள்வீதம் சீரிய முறையில் செயற்பட்டு வருகின்றன. விழுமிய உயர்இன கால்நடைகளை உருவாக்குதலும் பால் உற்பத்தியைப் பெருக்குதலுமே இத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.


இத் திட்டத்தின் வாயிலாக 1,05,493 செயற்கைமுறைக் கருவூட்டல்கள் செயற்பெற்று 19,405 தரமான கன்றுகள் பிறந்துள்ளன.

கொடிய வெக்கை நோய் கால்நடைகளுக்கு வராமல் தடுக்கவும் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வெக்கை நோய் தடுப்பு அணியும், போட்டியில் இன்னொரு அணியும், லோயர் கேம்ப்பில் ஒரு சோதனைச் சாவடியும் செயற்படுகின்றன. 1981-82ல் 6,21,308 வெக்கைநோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன.

நோய்ப் புலனாய்வுத் திட்டத்தின் வாயிலாக 47,473 கால்நடைகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. ஆங்காங்கே நோய் கிளர்ச்சிகள் ஏற்படுமாயின் உடன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பணியில் இதற்கான தனிப் பிரிவு செயல்படுகிறது.

டாக்டர் ஆ. சு. பரிபூரணம்
மண்டல இணை இயக்குநர்
மதுரை






காால்நடைப் பராமரிப்புத் திட்டத்தின் செயற்பாட்டினால் நலிந்த மக்கள் பயன் துய்க்கின்றனரா, முன்னேற்றம் அடைந்துள்ளனரா என்பதை அறிய தேவையான விவரங்கள் மாதிரி அளவு திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகின்றன- பழனியைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு கால்நடைப் ஆய்வாளருடன் இத் திட்டம் செயற்பட்டு வருகின்றது.


ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக நடுத்தர, சிறு விவசாயிகளுக்கும், மிக சிறு விவசாயிகளுக்கும் மற்றும் வேளாண்மைக் கூலியாளர்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பால் மாடுகள், ஆடுகள் மற்றும் கோழிகள் பன்றிகள் வாங்குவதற்குத் தொகைகள் கடனாகவும் மானியத்துடனும் வழங்க ஏற்பாடு செய்யப் படுகிறது. பயன் பெறுவோர் பராமரிக்கும் கால்நடைகளுக்கு அந்தந்தப் பகுதிகளிலே உள்ள கால்நடை நிலையங்கள் மூலமும் மருந்தகங்கள் மூலமும் மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகின்றது. இதில் பயன் பெறுவோருக்கு வங்கிகள் மூலம் கடனுதவியும் மாவட்டக் கிராம வளர்ச்சிக்குழு மூலமும் மான்யமும் கிடைக்க வழி வகைசெய்யப்பட்டுள்ளது.


உயர் இனக் கோழிகளைப் பெருக்கவும், பகுதிவாழ் மக்களின் இறைச்சி முட்டை தேவைகளை ஈடு செய்யவும் இந்த மாவட்டத்தில் கோழியின விரிவாக்க நிலையக்கட்டுப்பாட்டின் கீழ் நான்கு கோழியின விரிவாக்க நிலையங்கள் முறையே வைகை அணை, கருத்தப் புளியம்பட்டி, காந்திக் கிராமம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் செயற்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு தேவைப்படும் உயிரினக் கோழிகளை வளர்ப்பதற்கு விநியோகிக்க இந் நிலையங்கள் உதவுகின்றன.

நல்ல தரமான உயர்இன மாடுகள் மற்றும் எருமைகளைப் பெருக்கும்நோக்குடன்செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களுக்கு விந்து வழங்க வேண்டி இம்மாவட்டத்தில் எட்டு பொலி காளை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

ஆடு வளர்ப்பினால் சமுதாயத்தின் அடித்தள மக்கள் நிறைவாக பயன்பெறுகின்றனர் என்பது வெள்ளிடைமலை. இச்சங்கத்தில் இணைபவர்களுக்குத் தேசியமயமாக்கப்பெற்ற வங்கிகளின்







வாயிலாக ஆடுகள் வாங்கக் கடனுதவியும், மற்றும் நோய் வராமல் தடுக்கவும் மற்றும் சிறந்த முறையில் வளர்க்கவும் தொழில் நுட்ப உதவிகள் அளிக்கப்படுகின்றன.

நல்ல தரமான பன்றிகள் வளர்ப்பும் பலவீனப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அடிப்படையாக திகழ்வதாகும். இதற்கான வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 25 பேர்கள் பயன் பெற உள்ளனர். ரூ.38000- மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி மூலம் இத்திட்டத்திற்குக் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தீவனப் பயிர் வளர்ச்சிப் பணி சிறப்பாக ஆற்றப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் வாயிலாக இவ்வாண்டில் 319.25 ஏக்கர் நிலத்தில் தீவனப் பயிர் பயிரிடப்பட்டும், I9,618 மெட்ரிக் டன் எடையளவு தீவன பயிர் விதைகள் வழங்கப்படும், 3 இலட்சம் கூபாபுல் தீவனப் பயிர் நாற்றுகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டும் உள்ளன. கால்நடைப் பசுந்தீவன உற்பத்திக்காக விவசாயிகளுக்கு மானியமும் வழங்கப்படுகிறது.

சென்ற ஆண்டு மதுரைமாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டது. மாடுகள் வைத்துப் பிழைப்பை நடத்தும் ஏழை எளிய மக்கள் வைக்கோல் இன்றித் தவித்தனர். இந்தத் துயர் நிலையைத் துடைக்க வறட்சித் துயர்துடைப்புப்பணி துறை வாயிலாக 8,83,120கிலோ வைக்கோல் மாநிலத்தில் வறட்சி பாதிக்கப்பெறாத பகுதிகளில் இருந்து வாங்கப் பெற்று ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கப்பெற்று அவர்களின் தேவை நிறைவு செய்யப்பட்டது. இதற்காக ரூ. 2,57,000- செலவிடப்பட்டது. வறட்சியினால் கால்நடைகளுக்கு கோமாரிநோய் வராமல் - பரவாமல் தடுக்க 10266 கால்நடைகளுக்குக் கால் மற்றும் வாய் நோய் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. ரூபாய் 7,65,000-க்கு மருந்துகள் வாங்கிக் கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. வறட்சிப் பகுதிகளில் 32 தண்ணீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டன.

மேற்குத் தொடர்ச்சி மலை கன்றுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், சிறு விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் ரூ. 800ஐ மான்யமாகவும் மற்றும் ரூ.800- கடனாகவும் தீவனமாகவும் வழங்கப்படுகிறது. விவசாயக் கூலிகளுக்கு ரூ. 534 கடனாகவும் ரூ. 1056- மான்யமாகவும் தீவனக் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கன்றுகளின் 3வது மாத வயது முதல் 28வது மாத வயது முடிய மொத்தம்25 மாதங்களுக்குத் தீவனம் குறிப்பிட்ட வீதத்தில் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தில் ஒரு கன்றுக்கு 25 மாதத்திற்குத் தேவையான 16 குவிண்டால் தீவனம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 500 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இத் திட்டத்தின் மூலம் 1981-82 ஆண்டில் தீவனத்திற்கான மான்யமாக ரூ. 1,72,300- செலவிடப்பட்டுள்ளது.



கால்நடைப் பராமரிப்புப் பணிகள் சிறப்பாக ஆற்றப்பெறுகின்றன. திட்டங்கள் எழிலோடும் ஏற்றத்தோடும் செயற்படுத்தப் பெறுகின்றன. மக்களின் வாழ்வுக்கும் வளனுக்கும் கால்நடைப் பராமரிப்புத்துறைப் பணிகள் உறுதுணையாக இலங்குகின்றன.



# கோவையில் சத்துணவுத் திட்டம்

**கோ**வை மாவட்டத்தில், பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்க 1397 மையங்களும், 2 வயதிலிருந்து 4 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 826 மையங்களும் ஆக மொத்தத்தில் 2,223 மையங்கள் செயல்பட்டு, 1397 மையங்களில் 1,75,000 மாணவர்களும் 826 மையங்களில், 80,000 குழந்தைகளும் சத்துணவு பெற்று வருகிறார்கள்.

இரண்டாவதாகச் சொன்ன 826 மையங்களில் 826 படித்த பெண்மணிகள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இதில் குறிப்பாக 27 விதவைகளும், 15கணவனால் கைவிடப்பட்ட பெண்களும், 109 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களும், 7 மலைவாழ் வகுப்பைச் சார்ந்தவர்களும், குழந்தைகள் நல அமைப்பாளர்களாக வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இம்மையங்களில் மையத்திற்கு இருவர் வீதம் உதவியாளர்கள் நியமிக்கப்பட்ட வகையில் 1595 பேர் கிராமப்புறப் பெண்மணிகள் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இவ்வுதவியாளர்களில் 266 விதவைகளும், 59 கணவனால் கைவிடப்பட்ட பெண்களும், 140 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களும் 18 மலைவாழ் வகுப்பைச்சார்ந்தவர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். இம்மையத்தைப் பொறுத்த அளவில் நியமிக்கப்பட்டுள்ள 826 பேரில் 750 பேர் திருமணமாகி குழந்தை பெற்றவர்கள். மக்கட் செல்வத்தின் அருமையையும், பெருமையையும் உணர்ந்த பெண்மணிகள். இதுபோலவே பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ள மையங்களில் 1397 உதவியாளர்களும் 1397 சமையல் வேலையாட்களும் ஆக மொத்தம் 5115 பெண்கள் இத்திட்டத்தால் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்கள்.

**பொன். சுப்பையா,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர்.**

கோவை மாவட்டத்தில் உள்ளது ஜி. கவுண்டம்பாளையம். அது, அழகிய ஒரு குக்கிராமம். அங்கே துவக்கப்பள்ளி ஒன்று உண்டு. இப்பள்ளியில் பயில்வோர் எண்ணிக்கை 184. இதில் புதிதாக முதலாம் வகுப்பில் சேர்ந்தவர்கள் 42 பேர். 5 வயதை எட்டிப் பள்ளிக்கு வர வேண்டிய வயதைப் பெற்றவர்களில் இருவரைத் தவிர எல்லோரும் பள்ளியில் சேர்ந்துவிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. மலைச்சாமி அவர்கள்அங்கே தணிக்கை செய்யச் சென்றார்.

புதிய இலவச சத்துணவுத் திட்டம் குறித்து பள்ளித் தலைமை ஆசிரியரிடம் அவர் விசாரித்தார். ''புதிய சத்துணவுத் திட்டத்தால் பள்ளியில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது, இவ்வூரில் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது; குழந்தைகள் அதிக அளவில் நாள்தோறும் பள்ளிக்கு வருவதால் எங்களுக்கு உற்சாகம் பிறந்திருக்கிறது, விடுமுறை நாட்களில் கூடப் பணியாற்றுகிறோமே என்ற தயக்கம் எங்களுக்குஏற்படவில்லை'' யென்றும் பெருமையோடு சொன்னார் பள்ளியின் தலைமை ஆசிரியர்.

தனது பேத்தி, பேரன்களைத் தூக்கிக் கொண்டு வந்த அலமேலு கருப்பாயி என்ற மூதாட்டிகள் மிகுந்த சிரிப்போடும் வரவேற்போடும் ''எங்க பேரன் பேத்திகளுக்குத் தினந்தோறும் இங்கே கல்யாணச் சாப்பாடுதாங்க. அவ்வளவு ருசியாகவும் சுத்தமாகவும் பக்குவமாகவும் சமைச்சுப் போடறாங்க. இந்தச் சாப்பாடு கிடைக்கிறதுக்குக் கொடுத்து வைக்கணுங்க..எங்களமாதிரி கஷ்டப்படுற தாய் தந்தையர் ஆனந்தப்படற மாதிரி இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்த மகராசன் நல்லாயிருக்கணுங்க'' என்றனர். எல்லாக் கிராமங்களில் உள்ள மையங்களிலும் மாவட்ட ஆட்சியாளர் சென்ற இடமெல்லாம் நல்ல வரவேற்பும் மக்களிடம் ஆர்வமும் காணப்பட்டன.

## அருந்ததி பார்த்து... அல்லல் துடைத்து...



**ஏ**ழை எளியவர்களுக்கு, சுய வேலை வாய்ப்பில் ஈடுபட விரும்புவோருக்கு எல்லாம் தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் தந்து உதவி வருகின்றன. அந்த வகையில் சிண்டிகேட் வங்கியின் அண்ணா சாலைக் கிளையும் காலணி தைக்கும் ஏழை எளியவர்க்குக் கடன் தந்து உதவியிருக்கிறது.

ஆகஸ்டு 24-ந்தேதி நடந்த இந்த விழாவில், மாண்புமிகு கதர் கிராமத் தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள், அருந்ததியர்க்குக் (காலணித் தொழிலாளர்களுக்கு) கடன்கள் வழங்கினார்.

காலணித் தொழிலாளர்கள் 36 பேர்களுக்கு ரூ. 700லிருந்து ரூ. 5000 வரை கடன்கள் வழங்கப்பட்டன.

கடன்கள் வழங்கி மாண்புமிகு கதர் கிராமத் தொழில் அமைச்சர் திரு. எஸ். என். இராசேந்திரன் அவர்கள் பேசுகையில்: "ஏழை எளியவர்களுக்கு — வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு இந்த வங்கி கடன் தந்து உதவி வருவதைப் பாராட்டுகிறேன்" என்றார்.

விழாவில், வங்கியின் தமிழ் நாடு மண்டல உதவிப் பொது மேலாளர் திரு. கே. டி. குடுவா, வட்டார மேலாளர் திரு பி. வசந்தன், திரு ஏ. என். சீனி வாசராவ், அருந்ததியர் சங்கத் தலைவர் திரு அருணாசலம் ஆகியோர் பேசினர்.

திரு. எம். ரூஸ்வெல்ட் அவர்கள் நன்றி கூறினார்.









# திரைப்படத் துறைக்கு ஒரு திருவிழா!

—தமிழ்ப்பித்தன்

**ஆ**கஸ்ட் 15-ஆம் நாள் மாலை நேரம். கலைவாணர் அரங்கம் புதுக்கோலம் கொண்டிருந்தது. அதன் உள்ளும் புறமும் மக்கள் கூட்டம் அலைகடலெனத் திரண்டிருந்தது. 1980-81-ல் வெளி வந்த சிறந்த திரைப்படங்களுக்கும்; பங்கு பெற்ற கலைஞர்களுக்கும் தமிழக அரசு விருது வழங்கிச் சிறப்பிக்கும் இனிய காட்சியைக் காண்பதற்கே வெள்ளம்போல் மக்கள் கூட்டம் கூடியிருந்தது.

**மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன்** அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் தெரிவித்தார்:

''பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் சிறந்த திரைப் படங்களுக்கும், சிறந்த கலைஞர்களுக்கும் விருது வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி அமல்படுத்தி வந்தார்கள். அவருக்குப் பின்னர் அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது. புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் அதனைத் தொடர்வதுடன், சிறந்த கருத்துக்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லும் படத்திற்கு 1 இலட்ச ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.''

விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்த **மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள்** - தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''திரைப்படங்கள் நமது தேசிய வாழ்விலும் சொந்த வாழ்விலும் சிறப்பிடம் பெறுகின்றன. அவை நமக்குக் கேளிக்கை விருந்தை வழங்குவதுடன் நமக்குப் போதனையையும் வழங்குகின்றன. நம்மை உயர்த்தவும் செய்கின்றன.''

அடுத்து,நிதி உதவிக்குரிய படங்களைத் தேர்ந்தெடுத்த தேர்வுக் குழுத் தலைவர் **மாண்புமிகு நீதிபதி திரு எஸ். சாமிக்கண்ணு** தெரிவித்தார்:

''திரைப்படங்கள் இதயத்தைத் தொட வேண்டும்; உற்சாகத்தை உருவாக்க வேண்டும்; தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். வாழ்க்கைப் போராட்டத்தைச் சந்திக்கக் கற்றுத் தர வேண்டும். அப்படி இருந்தால் தான் திரை தரும் காவியங்கள் பெருமை பெற முடியும்.''

''திரைக் காவியம் சுவையாக இருக்க வேண்டும். காண்போரை அது தன் வயப்படுத்த வேண்டும். குழந்தைச் செல்வங்களின் மனத்தை அது பக்குவப்படுத்த வேண்டும்;

சிறந்த நடிகராக திரு கமலஹாசன், சிறந்த நடிகையாக செல்வி சுஹாசினி, சிறப்புப் பரிசு நடிகராக திரு கே. பாக்யராஜ், சிறப்புப் பரிசு நடிகையாக திருமதி சுஜாதா, சிறந்த இயக்குநராக திரு கே. பாலசந்தர். சிறந்த கதாசிரியராக திரு எம்.ஏ. அப்பாஸ், சிறந்த உரையாடல் ஆசிரியராக திரு வலம்புரி சோமநாதன், சிறந்த இசையமைப்பாளராக திரு இளையராஜா, சிறந்த பின்னணிப் பாடகராக திரு. எஸ். பி. பாலசுப்மணியம், சிறந்த பின்னணிப் பாடகியாக திருமதி பி. சுசீலா, சிறந்த பாடலாசிரியராக திரு புலவர் புலமைப்பித்தன், சிறந்த ஒளிப்பதிவாளராக திரு அசோக்குமார், சிறந்த நகைச்சுவை நடிகராக (அமரர்) திரு சுருளிராஜன், சிறந்த நகைச்சுவை நடிகையாக திருமதி மனோரமா, சிறந்த படத்தொகுப்பாளராக திரு ஆர். விட்டல் ஆகியோர் ரூபாய் 5






ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்க விருது பெற்றனர். ராஜா சாண்டோ நினைவுப் பரிசு திரு ப. நீலகண்டன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பரிசு பெற்ற தொழில் நுணுக்கக் கலைஞர்களின் சார்பில் **இயக்குநர் திரு கே. பாலச்சந்தர்** நன்றி கூறினார்.

அடுத்து உரையாற்றிய **தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் திரு எஸ். எஸ். இராஜேந்திரன் மாண்புமிகு முன்னாள் தலைமை நீதிபதி திரு டி. ராமபிரசாத ராவ், தமிழ்நாடு திரைஅரங்கு சங்கத் தலைவர் திரு டி. ராமானுஜம், தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு கே. வெங்கட்ராம், தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தலைவர் திரு வலம்புரி சோமநாதன், தென்னிந்தியத்திரைபபட வர்த்தக சங்கத்தின் துணைத் தலைவர் விட்டல்தாஸ் ஜெகநாததாஸ்**, ஆகியோர் பேசினர்.

பின்னர், சிறந்த படங்களுக்குரிய பரிசுகளையும் சிறந்த நடிகர், நடிகை, மற்றும் தொழில் நுணுக்கக் கலைஞர்கள் ஆகியோர்களுக்குரிய பரிசுகளையும், உதவித் தொகைகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். (சிறந்த படத் தொகுப்பாளருக்குரிய பரிசு இந்த ஆண்டு முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது).

'வறுமையின் நிறம் சிவப்பு' முதற்பரிசையும் (ரூபாய் 50 ஆயிரமும் தங்கப்பதக்கமும்) 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' இரண்டாம் பரிசையும் (ரூபாய் 30 ஆயிரமும் வெள்ளிப் பதக்கமும்) 'வண்டிச் சக்கரம்' மூன்றாம் பரிசையும் (ரூபாய் 20 ஆயிரமும் வெள்ளிப் பதக்கமும்) பெற்றன. 'ஒரு கை ஓசை சிறப்புப் பரிசை (ரூபாய் 25 ஆயிரமும் வெள்ளிப் பதக்கமும்) பெற்றது.

மாநில திரைப்பட நிதி உதவித் திட்டத்தின் கீழ் சூறாவளி, வடைமாலை, மீண்டும் சோகிலா, துணைவி, காலம் தப்பிய பயிர் ஆகிய படங்கள் ஒவ்வொன்றிற்கும் 1 இலட்ச ரூபாய் உதவித் தொகையை முறையே **நிமாய் கோஷ், ஜெயந்தி, டி. ஆர். சீனிவாசன், வலம்புரி சோமநாதன், ஏ. எம். ராஜூ** ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய **மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர்.** அவர்கள் தெரிவித்தார்:

''நாட்டில் இல்லாத கதா பாத்திரங்களை நாமே உருவாக்கிக் கொண்டு கதையை அமைப்பது ஒருவகை. இருக்கின்ற ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு இல்லாத குணங்களைச் சொல்வது ஒரு வகை.

''படத்தின் மையக் கருத்துகளை வைத்துப் பாத்திரங்களை உருவாக்க வேண்டும். தயாரிப்பாளர்கள், தமிழகத்தில் உள்ள கலாச்சாரம் காப்பாற்றப்படும் வகையிலே பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் கலைஞர்கள். ஒரு எல்லைக் கோட்டைத் தாண்டிப் போகாத முறையில்-கட்டுப்பாட்டுடன் பாத்திரங்களை உருவாக்கிக் கொண்டால் கலைஞர்கள் வெற்றி பெற முடியும். திரைப்படத்திற்கு மட்டுமல்ல எல்லைக் கோடு -கட்டுப்பாடு. வாழ்க்கைக்கும் இது தேவைதான்.''

செய்தி மக்கள் தொடர்புத் **துறை இயக்குநர் திரு எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப.** அவர்கள் நன்றி கூற, விழா இனிது முடிந்தது.





# ஐம்பெரும் விழா

அ. ம. விநாயகம்

கல்லிலே கலைவண்ணம் கண்டவர்கள் பல்லவப் பெருமன்னர்கள். அந்தப் பல்லவர்களின் பெயரால் அமைந்த பல்லவபுரம் என வழங்கப்படும் பல்லாவரத்தில் 21.7.1960 அன்று ஊர்ப் பெருமக்களின் நன்முயற்சியாலும் பேருதவியாலும் தமிழக அரசின் ஆணையாலும் 288 மாணவர்களைக் கொண்டு 12 ஆசிரியர்களுடன் மறைமலை அடிகள் அரசினர் மேல்நிலைப்பள்ளி 'செங்கை மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி என்னும் பெயரால் தொடங்கப் பெற்றது. இப்பள்ளியில் இப்போது 1,700 மாணவர்கள் பயில்கின்றனர். இப்பள்ளியின் ஐம்பெரும்விழா 8.8.82 அன்று நடைபெற்றது.

அரசினர் நங்கைநல்லூர் உயர்நிலைப் பள்ளி மாணவியர்களின் நடன நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சட்டமன்ற உறுப்பினர் திரு கே.எம் அப்துல் ரசாக் அவர்கள் முன்னிலை வகித்தார். பள்ளி அறிக்கையைத் தலைமை ஆசிரியர் திரு நல்லி இராமநாதன் அவர்கள் படித்தார். கல்வி அறிக்கையை முதன்மைக் கல்வி அலுவலர் திரு பி.வி. முனிரத்தினம் அவர்கள் வாசித்தார்.


மூன்று வகுப்பு அறைகளைக் கொண்ட கட்டடத்தினை மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு இரா. மோகனரங்கம் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழகம் தான் அதிக நிதிவசதியைப் பெற்று அதிகப் பற்று இல்லாமல் இருக்கின்றது (Over draft) என்றார். அறிவியல் ஆய்வக நீரேற்றும் பொறியைக் கல்வித்துறைச் செயலாளர், திரு செ. இராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச்.ஜே. இராமச்சந்திரன், இ.ஆ.ப,. அவர்கள் பாரதியார் நூற்றாண்டு விழா நூல்களை வழங்கினார்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. டி. கே. சீனுவாசன் அவர்கள் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்குப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் நன்கொடைக்கான காசோலையை மாண்புமிகு முதல்வரிடம்வழங்கிப் பேசுகையில் "தாய்மொழி தமிழை தனித்தன்மையோடு எழுத முடியும் என்று நிரூபித்தவர் மறைமலை அடிகள்" என்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் பல்லவபுரம் நகராட்சி சார்பில் போடப்பட்டுள்ள 5 சோடியம் ஆவி விளக்குகளை ஏற்றிவைத்துப் பேசுகையில், "வருகின்ற காலம் மாணவர்கள் காலம். அதை உணர்ந்து செயல்படவேண்டும்" என்றார். பல்லவபுரம் நகராட்சித் தனி அலுவலர் திரு அ. விக்டர் தங்கராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்களுக்கான மாலை நேர தனிவகுப்புகளைத் தொடங்கி வைத்தும், புயல் நிவாரண நிதியைக் கொண்டு கட்டவிருக்கும் கட்டடத்திற்குக் கால்கோள் நாட்டியும் பேசுகையில், நான் "நன்கு படிப்பேன், சமுதாயத்திற்கும், மக்களுக்கும், நாட்டிற்கும் பாடுபடுவேன் என்று மாணவர்கள் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

கல்வித்துறையின் சார்பாகச் சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 2,26,138 மாண்புமிகு கல்வி அமைச்சர் மாண்புமிகு முதல்வரிடம் வழங்கினார். பல்வேறு



நிறுவனங்கள் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும், சத்துணவுத் திட்டத்திற்கு முதல்வரிடம் நிதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தும், ஒலி-ஒளிக்கூடக் கட்டடத்தைத் திறந்துவைத்தும் உரையாற்றியபோது, ''மறைமலை அடிகள் ஊட்டிய உணர்ச்சி இன்று தமிழகத்தில் எழுச்சிபெற்று இருக்கின்றது'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மறைமலை அடிகள் சிலையையும், பழைய மாணவர் சங்கத்தார் கட்டியுள்ள 'பாரதியார் நூற்றாண்டு விழா' அரங்கத்தையும் திறந்து வைத்து, பாடநூல் நிறுவன நன்கொடையால் கட்டப்படவிருக்கும் கட்டடத்திற்குக் கால்கோள் செய்தும் உரையாற்றினார்.

''தமிழ் இயக்கத்தின் தந்தை பெரியவர் மறைமலை அடிகளார் பெயரால் விளங்கும் இந்தப் பள்ளிக்கூடத்தில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக விழாவில் கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மாணவ, மாணவியர்கள் இங்கு பேசியவர்களின் பேச்சை எப்படிக் கூர்ந்து கவனித்தீர்கள் என்பதை நான் கவனித்தேன். இங்கு நடனம் ஆடிய மாணவியர்கள் இசைக்கு ஏற்ப ஆடிய விதத்தையும் கவனித்தேன். இவர்கள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

''இந்த மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து நிர்வாகிகளாக உள்ளனர். இரண்டு பேரும் சேர்ந்து செயல்படுவது மிகவும் பாராட்டுக்குரியது. மற்ற பள்ளிகளிலும் இதுபோல் செயல்பட வேண்டும். கற்றுக்கொடுக்கிறவர்கள் ஏற்றுக்கொள்கிறவர்கள் கடமையோடு செய்தால் அது நல்ல முறையில் வெற்றி பெறும். ஆண், பெண் இருவரும் சமமாகவே வாழவேண்டும், அப்போதுதான் நாட்டில் சமத்துவம் ஏற்படும்.

''மாணவர்கள் கேள்வி கேட்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். கேள்வி கேட்டால்தான் சிந்தனை வளரும். ஆசிரியர்கள் மட்டும் மாணவர்களைப் பார்த்து கேள்வி கேட்டால் போதாது, ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் கேள்வி கேட்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

''மாணவர்கள் படித்து முடித்து வெளியே வந்தால் மட்டும் போதாது. பொது அறிவு பெற்றவர்களாகவரவேண்டும். தொழிற் கல்வி பயில வேண்டும். அப்படித் தொழிற்கல்வி பெற்றவர்கள் தாங்கள் சுயமாகத் தொழில் தொடங்கும் ஆற்றலைப் பெற்று தொழிலைத் தொடங்குகிறார்கள். தொழில் தொடங்குவதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்யும்.



''மாணவர்கள் தங்களுடைய கடமையில் இருந்து சிறிதும் விலகாமல் பொறுப்பை உணர்ந்து படிக்க வேண்டும். படித்துவிட்டு வெளியே வரும் மாணவர்கள் வேலையில்லாமல் அவதிப்படும் 4 பேர்களுக்காவது வேலை கொடுக்கும் தகுதியைப் பெற வேண்டும்.

''இந்தப் பள்ளியில் ஆளத் தகுந்தவர்க்ள் உருவாக வேண்டும், மறைமலை அடிகள் போல, பேரறிஞர் அண்ணா போல் நீங்கள் வரவேண்டும். பல்வேறு மாநிலத்திலிருந்து இங்கு வருபவர்களும், வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களும் இந்தச் சிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும்.''

விழா இறுதியில பெற்றோர் ஆசிரியர் கழக இணைச் செயலாளர் புலவர் ப. தட்சிணாமூர்த்தி அவர்கள் நன்றி கூறினார்.

23-7-82 ந் தேதி சேலம் மாவட்டத்தில் மேச்சேரி ஒன்றிய விவசாயிகளுக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் நில உடைமைப் பதிவேடுகளை வழங்கினார்.



# செலவு குறைய, சிபாரிசுப்படி உரமிடுங்கள்.







மானுவாரி சோளம், கம்பு போன்ற சிறுதானியப் பயிர்களுக்கு சிபாரிசுப்படி உரமிடுவது மிகவும் லாபகரமானது.

எந்த ஒரு பயிருக்கும் சிபாரிசுப்படி உரமிட்டால் ஒரு குவின்டாலுக்கான உற்பத்தி செலவு குறையும். சோளப்பயிரைப் பொறுத்தவரை இதைக் கீழே தெளிவாகக் காணலாம்.

| | உரம் இடாவிட்டால் | சிபாரிசுப்படி உரமிட்டால் |
|---|---|---|
| சோளம் சாகுபடி செலவு ஏக்கருக்கு | ரூ. 400 | ரூ. 555 |
| விளைச்சல் ஏக்கருக்கு (குவின்டால்) | 4 | 9 |
| எனவே ஒரு குவின்டால் உற்பத்திக்கு ஆகும் செலவு | ரூ. 100 | ரூ. 62 |

பார்த்தீர்களா! சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு கிட்டத்தட்ட பாதியாகக் குறைந்துவிடுகிறது. லாபமும் மிக அதிகமாகிறது. பருவ மழை குறைவான காலத்திலும்கூட உரமிட்ட பயிர் அதிக நாட்களுக்கு வறட்சியைத் தாங்கி, பலனளிக்கிறது. இதே போல் கம்பு போன்ற மற்ற சிறு தானியப் பயிர்களிலும் சிபாரிசுப்படி உரமிட்டால் உற்பத்தி செலவு குறைகிறது.






சமச்சீர் உரமிட

விஜய்

மானுவாரி சோளம், கம்பு போன்ற பயிர்களுக்கு ஏற்ற உரம் விஜய் 14-28-14. ஏக்கருக்கு 30 கிலோ விஜய் 14-28-14 உரத்துடன் 25 கிலோ விஜய் யூரியாவையும் சேர்த்து அடியுரமாக இடவேண்டும். உரத்தைப் பரவலாகத் தூவாமல் விதைக்கு 5 செ.மீ. ஆழத்திலும் 5 செ.மீ. பக்கத்திலும் இடவேண்டும்.

மேலும் சிறுதானியப் பயிர்களுக்கான சாகுபடி முறைகளை விவரிக்கும் புத்தகத்தைக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டார அலுவலகம்
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

| விஜய் 14-28-14 உரத்தின் விவரக் குறிப்புகள் (சதவிகிதத்தில்) | |
|---|---|
| தழைச் சத்து | 14 |
| மணிச் சத்து | 28 |
| சாம்பல் சத்து | 14 |
| நிரப்பி (குறுமணல் அல்லது டாலமைட்) | 11.5 |

HTM-MFL-2794

# காடு அதை நாடு

வனங்களின் முக்கியத்துவத்தை இன்று அனைத்துலக அளவிலேயே உணர்ந்து அதற்கேற்பத் திட்டங்கள் தீட்டி வரும் வேளையில், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய மதுரை வன மண்டலத்தில் காடுகள் வளர்ப்பதற்கும், ஏற்கெனவே உள்ள காடுகளைப் பாதுகாப்பதற்கும், காடுளின் மூலம் கிடைக்கும் உப பொருட்களை மக்களுக்குப் பயன்படும் விதத்தில் விநியோகிப்பதற்கும் ஏற்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில் தற்போது பேணப்பட்டு வரும் காப்புக் காடுகள் மற்றும் காப்பு நிலங்களின் பரப்பு சுமார் 2,972.566 சதுர கிலோ மீட்டராகும். இது மொத்தப் பரப்பில் 23.42 சதவீதமாகும். மேலும், புதிய காடுகள் உண்டாக்க ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மதுரை நகர் மக்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 1981-82ஆம் வருடத்தில் 3,577 மெட்ரிக் டன் எடையுள்ள விறகுகள் ஒரு டன் ரூ. 70 வீதம் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாண்டும் அதே மாதிரியான விநியோகத்திற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுபோலவே வனச் சார்புள்ள தொழிலகங்களான தென் இந்தியா விஸ்கோஸ் கம்பெனி, சேசஷாயி பேப்பர் மில்ஸ் மற்றும் டான் இந்தியா கம்பெனி போன்றவைகட்குக் கூழ்மரங்களும், அவைகளின் பட்டைகளும் கீழ்க் கண்ட அளவுகளில் 1981-82ல் விநியோகம் செய்யப்பட்டன.

அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் குறிப்பிடத்தக்கதாகும்.

இவை தவிர சில்லறை மகசூல் வனப்பொருட்களான மூங்கில், புளி, பனைப்பொருட்கள், இலவு, கடுக்காய், முந்திரி போன்றவைகளும் ஏலத்தில் விடப்பட்டு அரசுக்கு வருமானம் கிடைக்கப்பெற்றன.

காடுகளை வளர்ப்பதைப் பொறுத்தவரையில் 1981-82ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் விறகு தரும் மரங்கள், சந்தனம், கூழ்மரம், சில்லறை மகசூல் இனங்கள் சவுக்கு போன்ற பல தரப்பட்ட இனங்களில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.



இது தவிர, மரம் நடும் திட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான பள்ளிகள், கட்டடங்கள், அலுவலகங்கள் இவற்றில் மரம் நடுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் குறைந்த விலையில் நாற்றுக்கள் விநியோகம் செய்யும் பணியில் 5,75,900 நாற்றுக்கள் ரூ. 1.01 இலட்சம் செலவில் எழுப்பப்பட்டன.

கூழ்மரங்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கொடைக்கானல் மலையில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 508 எக்டேரில் ரூ. 5.21 லட்சம் செலவில் குங்கிலியம், யூகலிப்டஸ், கிராண்டிஸ் போன்ற மர வகைகள் 1981-82-ல் வளர்க்கப்பட்டுள்ளன.

''மண் வளம் பெருக மழை வளம் பெருகும்'' என்னும் அடிப்படையில் வைகை ஆற்று நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மண் அரிப்பைத் தடுப்பதனை நோக்கமாகக் கொண்டு 1981-82ல் வைகை நீர் பிடிப்புப் பகுதிகளில் 2,210 எக்டேரில் ரூ. 16 லட்சம் செலவில் பல்வேறு இனத்தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இந்த நடப்பு ஆண்டிலும் (1982-83) மண் பாதுகாப்புத் திட்டம், கூழ்மரத்தோட்டங்கள், விறகு இன மரங்கள், சவுக்குத் தோட்டங்கள், புளியமரத்தோட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலை, மேம்பாட்டுத் திட்டம், கூழ்மரத்தோட்டங்கள் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

# மதுரை மாவட்டத்தில் புதிய சிறு தொழில் பிரிவுகள்

மதுரை மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் மூலமாகப் பல்வேறு சிறு தொழில் பிரிவுகள் உருவாகியுள்ளன. இந்த ஆண்டு மட்டும் உருவாக இருக்கும் சிறுதொழில் அமைப்புகள் 291 ஆகும். இதனால் 1966 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

புதியதாக அமையவிருக்கும் கைத்திறன் பிரிவுகளின் எண்ணிக்கை 378 ஆகும். இதனால் 1169 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

புதியதாக இவ்வாண்டில் அமையவிருக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 820 ஆகும்.

மாவட்டத் தொழில் மையம் செய்யவிருக்கும் நிதியுதவி ரூ 80 இலட்சம் ஆகும்.

# விரும்பும் படங்களை வீட்டிலேயே காண 'வீடியோ'

வீட்டிலிருந்து கொண்டே நாம் விரும்புகின்ற படங்களை-எந்த நேரத்திலும் பார்க்கலாம்!

இதற்கு வசதி செய்யும் வகையிலே-சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தில் வீடியோ மையத்தின் ( Video Centre ) துவக்கவிழா ஜூலைத் திங்கள் 28ஆம் நாள் நடந்தது.

மத்திய அரசின் சார்பில் நிறுவப்பட்டுள்ள இந்த நிலையத்தின் மதிப்பு 70 இலட்சம் ரூபாய்.

பாடல்களை டேப்ரிக்கார்டரில் பதிவு செய்வது போல, திரைப் படங்களை டேப்பில் பதிவு செய்யும் நவீன சாதனம்தான் இந்த 'வீடியோ'

மாண்புமிகு மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு வசந்த் சாத்தே அவர்கள் மையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இருப்பதால், அவர்களுக்குக் கல்வி அறிவு தரவும், நவீன வகை விவசாயம் போன்றவற்றைத் திரைப்படங்கள் மூலம் கற்றுத் தரவும் வீடியோக்களைப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும்''

மாண்புமிகு செய்தி -அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், வீடியோ மைய நிலையம் குறித்து சிறு கையேடு ஒன்றை வெளியிட்டுப் பேசினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''வீடியோக்களைத் தவறாகப் பயன்படுத்துவதை மத்திய அரசு கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.''

## இதனால் என்ன நிலைமை?

**இங்கு அமைக்கப்பட்டுள்ள வீடியோ கேமிரா மூலம், 4 பிரிண்டுகள் போட முடியும்.**

**20 பிரிண்டுகள் போட வசதியுள்ள மற்றொரு கேமிரா விரைவில் பொருத்தப்படவுள்ளது.**

**இந்தியாவில், தற்போது 3 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் 'வீடியோ' கருவிகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் படங்களை வீடியோ கேசட்டுகளில் பதிவு செய்து தரமுடியும்.**

**உள்நாட்டு வீடியோ கேசட் தேவைகள் முழு அளவில் பூர்த்தி செய்வதுடன், மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய கேசட்டுகள் தயாரிக்கப்படும்.**

**ஆண்டுக்கு 600 திரைப் படங்களை வீடியோ டேப்பில் பதிவு செய்யலாம். இதனால் வெளிநாட்டு வீடியோ சந்தையின் மோகம் குறையும்.**

— பி. வி. ஜி.

*******************************

# சின்கோனா

சின்கோனாத் துறை தமிழ்நாடு அரசினரால் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஒரு துறையாகும். இத்துறையில் மலேரியா நோயினை குணப்படுத்த பயன்படுத்தப்படும் கொய்னா சல்பேட் மற்றும் இருதய நோய்களைக் குணப்படுத்தப் பயன்படும் குனிடீன் சல்பேட் ஆகிய மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் மருந்து மற்றும் மணம் தரும் தாவர வகைத் தைலங்களும் இத்துறையில் தயாராகின்றன.

சின்கோனாப் பயிரை முனைப்புடன் சாகுபடி செய்தல் :

தமிழ்நாட்டில் மீண்டும் மலேரியா தோன்றிப் பரவி வருவதால் கொய்னா பொருட்களுக்குள்ள உள்நாட்டு தேவை அதிகமாகலாம் என்பதோடு வெளிநாட்டு ஏற்றுமதியும் காலப் போக்கில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தேவைகளை நிறைவேற்றிட ஏற்கனவே சாகுபடி செய்து அறுவடையான நிலங்களிலும் புதிய நிலங்களிலும் சின்கோனா பயிரிடப்பட்டு வருகிறது. 31-3-80 வரை நீலகிரி மாவட்டத்திலுள்ள 369.61 எக்டேர் நிலத்திலும் கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலைக் காடுகளில் 1437,65 எக்டேர் நிலத்திலும் ஆக மொத்தம் 1807.26 எக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் பிப்ரவரி '81 முடிய புதிதாக 144.50 எக்டேர் பரப்பில் சின்கோனா பயிரிடப்பட்டுள்ளது. மேலும் 23.56 எக்டேர் பரப்பில் ஏற்கனவே உள்ள சின்கோனாத் தோட்டங்களில் பதியன் மற்றும் ஒட்டுச்செடி முறைகளில் வீரியம் உள்ள சின்கோனாச் செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர இத்திட்டத்தின் கீழ் கொய்னா பட்டை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 650 கொய்னாப் பட்டை மாதிரி பகுப்பாய்வு செய்யத்திட்டமிட்டுள்ள போதிலும் பிப்ரவரி வரையில் 689 மாதிரிகள் பகுப்பாய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளன.

நம் நாட்டில் மருந்து வகைத் தைலங்கள் வாசனைத் தைலங்கள் இவற்றிற்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருவதை ஈடுகட்டும் நோக்கத்துடன் இந்தப் பயிர்களின் சாகுபடியை பல்வேறு வகைகளில் விரிவுபடுத்தும் பணியினை இத்திட்டத்தின் கீழ் இத்துறை நடப்பு ஆண்டில் மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகள் பயிரிடப்பட்டு திட்ட இலக்கு முடிக்கப்பட்டுள்ளது.




# மதுரை மாவட்டத்தில் புதிய பாசனத் திட்டங்கள்

தமிழ்நாட்டுக்குக் கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசு ரூ. 125.56 கோடி மதிப்பீடு தொகை கொண்ட 2 பெரிய மற்றும் நடுத்தர பாசனத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் தமிழ் நாட்டில் மேலும் 2,11,500 ஏக்கர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதியும் 4,900 ஏக்கர் பாசனப் பற்றாக்குறை நிலங்களுக்குப் பாசன வசதியும் மேலும் 15,000 ஏக்கர் நிலங்களுக்கு உறுதியளிக்கப்பட்ட பாசன வசதியும் உருவாகும். இதனால் 1,85,000 டன் உணவுப் பொருட்கள் கூடுதலாக உற்பத்தியாகும்.

பெரிய-நடுத்தர பாசனத் திட்டங்களுக்காகத் தமிழ்நாடு அரசு கடந்த ஐந்தாண்டுகளில் ரூ. 75 கோடி செலவு செய்துள்ளது.

பெரிய பாசனத் திட்டமான பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் ஒரு பகுதியான கீழ் நீராறு திட்டம் மூலம் 11 நடுத்தரப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தப் புதிய பாசன வழியால் ஆண்டுக்கு 47,300 டன்கள் கூடுதலாக உணவுப் பொருட்கள் உற்பத்தியாகும்.

மதுரை மாவட்டப் பகுதியில் மட்டும் கடந்த ஜூலைத் திங்களில் மூன்று பாசனத்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

**சோத்துப்பாறை நீர்த்தேக்கத் திட்டம் :**

மதுரை மாவட்டம் பெரிய குளம் வட்டத்திலுள்ள தென் கரை கிராமத்தில் வரகா நதியின் குறுக்கே கட்டப்படவுள்ளது இது. இத்திட்டத்தினால் 1825 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதியும் 1000 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் 87 ஏக்கர்பாசன பற்றாக்குறை நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 791 இலட்சங்களாகும். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தென் கரை, தாமரைக்குளம் ஏனைய கிராமங்களும் இத்திட்டத்தால் பயனடையும்.

**தேராப்பாறை நீர்த்தேக்கத் திட்டம் :**

மதுரை மாவட்டம், உசிலம் பட்டி வட்டத்திலுள்ள சாத்தூர் குன்றுகளில் உற்பத்தியாகும் வரட்டாற்றிலுள்ள குப்பம்ஓடை, செம்ப ஓடை, குளிரட்டிஓடை ஆகிய மூன்று காட்டு ஓடைகளின் குறுக்கே கட்டப்படவுள்ளது தேராம்பாறை நீர்த் தேக்கத் திட்டம்:

தேராப்பாறைத் திட்டத்தால் 732.58 ஏக்கர் நிலங்களுக்குப்




பாசன உறுதியும் 1075 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் 101.70 பாசன பற்றாக்குறை நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கப்படும்.

தேராப்பாறைத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 233 இலட்சங்களாகும். இத்திட்டம் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட திருமங்கலம் வட்டத்திலுள்ள கல்லுப்பட்டிகிராமமும் சுற்று வட்டாரக் கிராமங்களும் பயனடையும்.

**குதிரையாறு நீர்த்தேக்கத்திட்டம் :**

மதுரை மாவட்டம் பழனி வட்டத்திலுள்ள தொப்பம்பட்டி கிராமத்தருகே குதிரையாற்றின ருகே கட்டப்பட உள்ளது, இது. இதன் மூலம் 2660.80 ஏக்கர் நிலங்களுக்குப்புதிய பாசன உறுதியும் 3000 ஏக்கர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் 202.80 ஏக்கர் பாசனப் பற்றாக்குறை நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கப்படும்.

குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ரூ. 408 இலட்சம் செலவாகும். குதிரையாறு திட்டத்தால் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆண்டிப்பட்டி, வாடிப்பட்டி, சித்தரேவு காவல்பட்டி, பாப்பம்பட்டி போன்ற கிராமங்கள் பயனடையும்.

**ஏனைய திட்டங்கள்:**

சோத்துப் பாறைநீர்த் தேக்கத் திட்டம், தேரப்பாறை நீர்த் தேக்கத்திட்டம், குதிரையாறு நீர்த்தேக்கத்திட்டம் தவிர பல நடுத்தர பழைய பாசன முறைகளைச் சீரமைக்கும் திட்டங்களும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

கம்பம் பள்ளத்தாக்குப் பதினெட்டாவது கால்வாய் திட்டம் ரூ. 20 கோடி செலவில் நிறைவேற்றப்பட வேண்டிய பெரிய திட்டமாகும். இத்திட்டத்திற்கான திட்ட ஆய்வுப்பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

## புதிய கால்நடை மருந்தகங்கள்

மதுரை மாவட்டத்தில் இவ்வாண்டில் (1982-83) புதிதாக இரண்டு கால்நடை மருந்தகக் கட்டடங்கள் ரூ. 1.25 லட்சம் செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது.

சின்னமனூர் ஒன்றியம் ஓடைப்பட்டி கிராமத்திலும், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்திலும் இம்மருந்தகங்கள் கட்டப்படும். மேலும் மருந்தகங்களுக்கு அடிப்படை வசதி செய்து தருவதற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்படியும் நிதி உதவி செய்யப்படும்.




மதுரை மாவட்டத்தில் விரு விருப்போடு நடக்கும் தொழில்களில் பட்டுத் தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பட்டுத் தொழிலுக்கு மூலாதாரமாக மல்பரி பயிர் செய்தல் 1979ல் தான் இம் மாவட்டத்தில் துவக்கப்பட்டது.

ஒரு ஏக்கர் மல்பரி பயிர் செய்தால், அதன் மூலம் எட்டுப் பேருக்குக் குறையாமல் வேலை வாய்ப்பு ஏற்படும். இதனால், வண்டி வாகனங்கள் செல்ல இயலாத இடங்களில்கூட பட்டுத் தொழிலுக்கென மல்பரி பயிரிடப்பட்டுள்ளது.

விவசாயத்தில் உள்ள சிரமத்தைவிட இதில் உடலுழைப்பு குறைவாகவே செலவாகிறது; வருமானமோ அதை விட இதில் அதிகம்.

பட்டுக்கூடு விற்பனைக்கென மதுரை மாவட்டம் முழுவதுமாக 7 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன.

### தொழில் பயிற்சி


1982-83ல் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மல்பரி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு இத்தொழிலில் ஆர்வங் காட்டுவோர் 600 பேருக்கு, தக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மூன்று மாதப் பயிற்சியில் பங்கேற்போருக்கு மாதந்தோறும் 150 ரூபாய் உதவிப்பணம் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்து அவர்கள் செல்லும்போது, பட்டுத்தொழில் வளர்ச்சிக்கான 300 ரூபாய் பெறுமானமுள்ள கருவிகள் பாதி விலைக்கு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

மல்பரி பயிரிட முன்வரும் விவசாயிகள் 300 பேருக்குக் குடில்கள் அமைக்கவும், 600 பேருக்குத் தளவாடச் சாமான்களுக்காகவும் வங்கிகள் மூலம் கடன் பெறச் சிபாரிசு செய்யப்படுகிறது. பட்டு நூற்பை ஊக்குவிக்கவும் மான்யம் தரப்படுகிறது.

கூட்டுப்புழு வளர்ப்பது தான் பட்டு வளர்ச்சியில் முக்கியம். ஒரு ஏக்கர் மல்பரியில் ஆயிரம் முட்டை வரை வளர்ப்பதுண்டு.

நெற்பயிருக்குக் காலவரையறைகள் உண்டு. ஆனால் மல்பரிக்கு அப்படி இல்லை. எப்போதும் பயிரிடலாம், இதன் மூலம் ஒருவருக்கு ஆண்டொன்றுக்குக் கிட்டும் நிகரவருமானம் ஆறாயிரம் ரூபாய் .இது நிரந்தர வருமானமாகும்.

மதுரை மாவட்டப் பட்டு நெசவாளர்க்குத் தேவை அதிகமிருப்பதால் இன்னும் அதிகம் மல்பரி பயிரிட முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.



மாடும் மல்பரியும்

மல்பரியைப் பால் மாடுகள் விரும்பித் தின்பதுண்டு. இதனால் மாட்டுக்கோ பாலுக்கோ எவ்விதத் தீங்கும் நேருவதில்லை. இந்த விவரங்களையெல்லாம் நமக்குத் தெரிவித்த மதுரை மாவட்டப் பட்டு வளர்ச்சித் துறை துணை இயக்குநர் திரு எச். அரிகரசுப்பிரமணியம் அவர்கள் ' 'Silk and Milk will go together' என்றே கூறுகிறார்.

மதுரை மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக்குக் காஞ்சிபுரம் வரை நல்ல வரவேற்பிருக்கிறது .

## இராசராசன் காசு



தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் கல்வெட்டுத் துறையினர் அண்மையில் கள ஆய்வின் பொருட்டு தஞ்சை மாவட்ட மாத்தூர் சென்றனர். மாத்தூரில் உள்ள மருந்தாண்டார் கோயிலைச் சுற்றிலும் உள்ள மேட்டை பார்வையிடும்போது தற்செயலாக, சோழ மன்னன் இராசராசனின் காசு ஒன்று கிடைத்தது.

செம்பினால் அமைந்த அக்காசுக்கு ஈழக் காசு என்று பெயர். வட்ட வடிவில் காசு அமைந்துள்ளது. ஒரு பக்கம் நின்ற நிலையில் ஒரு மனிதனும் அமர்ந்துள்ள புலியும் ஒரு புறம் சூலமும் உள்ளது., மறுபுறம் அமர்ந்த மனிதனும் ''ராஜராஜன் என்ற பெயர் நாகரி எழுத்துக்களிலும் உள்ளது. மாத்தூர்ப் பகுதியில் இராசராசன் காசுகண்டெடுக்கப்பட்டது. இந்த நாணயம் சுமார் 1,000 (ஆயிரம்) ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.




# பவனி வரும் பாண்டியனின் அரும் பணிகள்

இந்தியாவிலுள்ள பேருந்து போக்குவரத்துக் கழகங்களில்- சிறப்பாகச் செயல்படுபவைகளில் தமிழ்நாட்டிலுள்ள அரசுப் போக்குவரத்துக்கழகங்கள் குறிப்பிடத்தக்கவை.

—இப்படி அயல் மாநிலத்தவர்களே பாராட்டும் அளவுக்குப் பெருமை பெற்றவை நமது மாநில பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள்.

பட்டி தொட்டி அனைத்துக்கும் இணைப்பாக இருந்து பயணிகள் நலனே குறிக்கோளாக விளங்கும் போக்குவரத்துக் கழகங்களில் ஒன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகம். இப்போக்குவரத்துக் கழகம் தொடங்கப்படும்பொழுது இருந்த பேருந்துகள் 346தான். 1977-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய இப்போக்குவரத்துக் கழகத்தில் இருந்த பேருந்துகள் 649. ஆனால், இப்பொழுது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பேருந்துகள் 1188 ஆகும்.

குறைந்த கட்டணத்தில் மக்கள் பயணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அதிக அளவில் நகரப் பேருந்துகள் விடப்படுகின்றன. நாள்தோறும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 11 இலட்சம் மக்கள் பயணம் செய்கின்றனர். இப்பேருந்துகள் நாள்தோறும் நான்கு இலட்சம் கிலோ மீட்டர்கள் ஓடுகின்றன.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எரிபொருளுக்காக மாதம் ரூபாய் 1 கோடியும் பேருந்துகளின் பழுதடைந்த பாகங்களைப் புதுப்பிக்கும் வகையில் மாதந்தோறும் ரூ. 80 இலட்சமும் செலவிடுகிறது.

9 ஆயிரம் தொழிலாளர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரிகிறார்கள். இவர்களுடைய மாத சராசரி வருமானம் ரூ.825 அளவில் உள்ளது. அவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளில் சில:

தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் இலவச மருத்துவ வசதி.

குடியிருக்கும் இடத்திலிருந்து பணிசெய்யும் இடத்திற்குச் செல்ல இலவசப் பேருந்து வசதி.

ஆண்டுக்கு குடும்பத்துடன் 12 தடவை இலவசப் பயணம் செய்யலாம்.

இரண்டு குழந்தைகளுக்குக் கல்லூரி, பள்ளி சென்று வர இலவசப் பேருந்து வசதி.

குடும்பங்களுக்குத் தையல் பயிற்சி, தட்டெழுத்துப் பயிற்சி.

10 காசிற்கு டீ. 75 காசிற்கு சாப்பாடு.

**மக்களுக்கு செய்யப்படும் வசதிகள்:**

100க்கு மேற்பட்ட இடங்களில் ரூ. 6000 மதிப்பில் நிழற்குடைகள்.

மாணவி மாணவியர்களுக்குக் கட்டணச் சலுகைகள், பெண்களும் ஆண்களும் தொல்லையின்றிப் பேருந்தில் சென்றுவர, மதுரை நகரில் நான்கு வழிகள் உள்ள பேருந்து, சோதனை ஓட்டமாக ஓட்டப்பட்டு வருகிறது.

உடல் ஊனமுற்றோருக்கு இலவசப் பயண வசதி.

பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பயண வசதி.

கிராமப்புற மக்கள் தங்கள் விளைபொருள்களை நகரங்களுக்களுக்குக் கொண்டு வந்து விற்று, வாழ்க்கை நடத்தும் பொருட்டு சரக்குப் பேருந்துகள் முக்கியமான இடங்களில் குறைந்த கட்டணங்களில் விடப்பட்டுள்ளன. இவை சந்தை நாட்களில் கிராமங்களுக்கும் சந்தைகளுக்கும் ஓட்டப்பட்டு கிராமங்களுக்குப் பணி செய்கின்றன.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, தேனியில் இக்கழகம் 9.43 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை உருவாக்க உள்ளது. அதே மாதிரி மதுரையிலும் தொழிலாளர் குடியிருப்புத் திட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கம்பி இல்லாச் செய்தித் திட்டம் பேருந்துகள் நின்று போவதை உடனடியாகத் தெரிவிப்பதற்கும், விபத்துக்களை உடனுக்குடன் கவனிப்பதற்கும், கூட்ட நேரங்களில் தேவைக்கேற்ப பேருந்துகளை விடுவதற்கு ஒரு கம்பி இல்லாத் தொலைபேசித் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

அந்நிய நாட்டுச் செலாவணியைக் குறைக்கும் நோக்கத்துடன் எந்திர எண்ணெய்யை மீண்டும் மீண்டும் சுத்தப்படுத்தி உபயோகிக்க திருமங்கலத்தில் ஓர் எந்திரம் அமைக்கும் திட்டம் உள்ளது.

மானாமதுரையில் தொழிற்பேட்டையில் பேருந்து கூடு தயாரிக்கும் திட்டம் ஒன்று உள்ளது.

போடிநாயக்கனூர், வத்தலக்குண்டு, சிவகாசி, மானாமதுரை, இராமநாதபுரம், தேவாரம் முதலான இடங்களில் பணிமனை கட்டும் திட்டம் உள்ளது.

மதுரை எல்லிஸ்நகர், விருதுநகர் போன்ற இடங்களில் தொழிலாளர்களுக்கு வசதிமிக்க ஓய்வு இல்லம் கட்டப்பட்டு வருகிறது.

தொழிலாளர் பயிற்சி நிலையம், மதுரை அருப்புக்கோட்டை சாலையில் காரியப்பட்டி சமீபம் சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிலாளர் பயிற்சி நிலையம் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்குச் சுமார் 10 இலட் ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ஓட்டுநர்கள் நடத்துனர்களுக்கு ஒரு சிறப்புப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்குத்தொழிலின் நுட்பங்களைப்போதனைசெய்து சிறந்த முறையில் பணி செய்ய வாய்ப்பு அள்ளிக்கப்படுகிறது. முக்கியமாக ஓட்டுநர்களுக்கு விபத்துக்களைத் தடுக்கும் முறைகளையும், முன்னெச்சரிக்கை முறைகளையும், கடந்தகால அனுபவங்களையும் எடுத்துக்காட்டி போதனை செய்யப்படுகிறது. அதேமாதிரி எரிபொருள் சிக்கனத்தின் கையாள வேண்டியமுறைகளையும், பேருந்துகளை நல்லமுறையில் இயக்கிட அனுசரிக்க வேண்டிய முறைகளையும் போதிக்கிறார்கள்.

இக்கழகத்தில் ஆயிரத்துக்குமேற்பட்ட பேருந்துகள் இருப்பதால் நிருவாகத் திறமையை அதிகப்படுத்த இதை இரண்டாகப் பிரிக்கும் திட்டங்கள் ஏற்கெனவே தீட்டப்பட்டு, கடந்த ஓராண்டு காலமாக சோதனை செயல்முறையில் இருக்கின்றன. இதன்படி கிழக்கு இராமநாதபுரம் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓடும் பேருந்துகளை, காரைக்குடியை மையமாகக் கொண்டு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் என்ற பெயரில் தனி நிறுவனம் தொடங்கப்பட இருக்கிறது. அதன் பிறகு பாண்டியன்போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மேற்கு மாவட்டத்தில் மட்டும் செயல்படும்.

## ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க கூடுதல் நிதி உதவி

மதுரை மாவட்டத்தில் 1981-82-ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்த அரசு ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. இதனை முழுமையாகப் பயன்படுத்தி, மேலும் சிறிது செலவிட்டு ரூ. 16,42,200 மதிப்பில், 223.63 ஏக்கர் நிலம் 68 கிராமங்களில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தின் மொத்த மதிப்பு ரூ. 16,42,200 ஆகும். இத்திட்டத்திற்கு அரசு ஒதுக்கிய தொகைக்கு கூடுதலாக ரூ. 1,42.200 செலவு செய்யப்பட்டுள்ளது.





# கோயில் நிதியால் குவியும் பயன்கள்

**பி. எல். ராஜேந்திரன்**

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையரின் நேரடிக் கவனிப்பில் மதுரை மாவட்டத்தில் 84 கோயில்கள் இருக்கின்றன. இவைகளில் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் வரை ஆண்டொன்றுக்கு வருமானமுள்ள கோயில்கள் 39 ஆகும். 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வருமானமுள்ள கோயில்களோ 24.

தெற்கு மாசி வீதியிலே உள்ள பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில், மதுரை வடக்குப் பகுதியிலே உள்ள அரசமரம் பிள்ளையார் கோயில், சின்னமனூரில் உள்ள பூலகண்டேஸ்வரர் கோயில் ஆகிய மூன்றும் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு லட்சம் ரூபாய்க்குள் ஆண்டு வருமானமுள்ள கோயில்களாகும்!

ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோயில்கள் மதுரை மாவட்டத்திலே எட்டு இருக்கின்றன. பழனி தண்டாயுதபாணி திருக்கோயில், மதுரை நகருக்குள்ளேயே இருக்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், அழகர்கோயிலில்உள்ள கள்ளழகர் திருக்கோயில், ரெட்டியார் சத்திரத்தில் இருக்கும்கோபிநாதசாமி திருக்கோயில், மதுரையில் உள்ள கூடலழகர் கோயில், திண்டுக்கல்லில் இருக்கும் காளகஸ்தீஸ்வரர் திருக்கோயில், அதே திண்டுக்கல்லில் உள்ள கோட்டை மாரியம்மன் கோயில், வீரபாண்டியில் இருக்கும் கோமாரியம்மன் கோயில் ஆகியவைகளே அத்தகைய வருமானமுள்ளவைகளாகும்.

கோயில்களுக்கெல்லாம் நஞ்சை புஞ்சை மானாவாரி நிலமெல்லாம் உண்டல்லவா? அரும்பாடுபட்டு அந்தக்கணக்கையும்திரட்டினோம்.

மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற 12வட்டங்களிலும் உள்ள மொத்தக் கோயில்கள் 84க்கும் சொந்தமாக இருக்கும் நன்செய் நிலம் மட்டும் 1921. 44½ ஏக்கர்களாகும். புன்செய் நிலமோ 3121. 77½ ஏக்கர்கள். இவை தவிர மானாவாரியாக 428.33 ஏக்கர் நிலமும் இருக்கிறது.

1981-82ல் இந்த நிலங்களின் மூலம் அத்தனைக் கோயில்களுக்கும் ஆண்டுதோறும் ரொக்கமாக வந்த வருமானம் ரூ. 2,35,509.33 ஆகும். விளைநிலங்களின் மூலம் தானியங்களாகக் கிட்டியதோ 10382.59 களம்.

புன்செய் நிலத்தின் மூலம் கிடைத்த ரொக்க வருமானம் மட்டும் ரூ. 169719.97 ஆகும். தானியத்தின் வரவு 392 களம்.

மானாவாரி நிலங்கள் மூலம் ரொக்க வருமானம் ரூ. 28242 00 அவற்றின் மூலமான தானியமோ 75 களம்.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டுமென்றால்மதுரை மாவட்டத்திலே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை கவனிப்பில் உள்ள அத்தனைக் கோயில்களின் மூலமும் ரொக்கமாகக் கிடைத்திடும் ஆண்டு வருமானம் ரூ. 4,33,471.30.

பல்வேறு வகைத் தானியங்களாக வருவதோ 10849.59 களம்.

கோயில்களால் வரும் இந்த வருமானமெல்லாம் கோயில்களின் பராமரிப்புச் செலவுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி பார்த்தால் சென்னையை விடப் பெரியதாகக் கருதப்படும் மாமதுரைவாழ் ஏழை-எளிய-ஆதரவற்ற மக்களுக்காகக் கல்வியறிவளித்தல்போன்ற பல்வேறு பணிகளுக்காகவும் கூடப் பயன்படுத்தப்படுகிறது கோயில் நிதி!

இந்த வகையிலே உதாரணத்திற்குச் செலவினங்கள் இரண்டொரு கோயில்களால் ஏற்கப்பட்டு ஆற்றப்படும் புனிதப்பணிகளைப் பார்ப்போம்.

கள்ளழகர் திருக்கோயில்சார்பிலும், கௌமாரியம்மன் திருக்கோயில் சார்பிலும்மகளிருக்கான



'அன்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

கள்ளழகர் திருக்கோயில் நிதியில் ஆரம்பப் பள்ளியொன்றும், நடுநிலைப் பள்ளியொன்றும் நடத்தப்படுகிறது.

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அரவணைப்பிலோ பள்ளி, கல்லூரி கலைக் கல்லூரி, மகளிர் தொழில் நுணுக்கக் கல்லூரி, ஆண்கள் தொழில் நுணுக்கக் கல்லூரி, நாதசுர இசைப் பயிற்சிப் பள்ளி ஆகியவைகளெல்லாம் நடாத்தப்படுகின்றன.

திருப்பரங்குன்றம் ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதி நிழலில் சித்தவைத்திய சாலை, மகளிர் முதியோர் இல்லம், பெண்கள் மேல்நிலைப் பள்ளியெல்லாம் இயங்கி வருகின்றன.

மதுரை நகரில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான நிதி ஆதாரத்தோடு எத்தகைய முத்தனைய பணிகளெல்லாம் நிகழ்த்தப்படுகின்றன தெரியுமா?

திருவாதவூர் அன்பு இல்லம், இலவசப் பால் விநியோகத் திட்டம், காந்திநிகேதன் மீனாட்சி அனாதை இல்லம், ஆகமப் பாடசாலை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வேதப்பாடசாலை ஆகியவை மீனாட்சியம்மன் நிதியருளால் மேம்பட இயங்கி வருகின்றன.


1981-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் உள்ள கோயில்கள் ஐம்பத்தொன்றில் சிறப்புப் பொது விருந்து (ஆகஸ்ட் 15) சுதந்திர நாள் அன்று நடத்தப்பட்டது. இந்தப் பொது விருந்தில் ஆதி திராவிட மக்கள் 31 ஆயிரத்து90 பேர் கலந்து கொண்டனர். ஆதிதிராவிடர் அல்லாதோர் 24 ஆயிரத்து 666 பேர் கலந்து கொண்டுள்ளனர். ஆக மொத்தம் 55 ஆயிரத்து 756 பேர்.

இந்த ஆண்டு சுதந்திர நாளன்று மதுரை மாவட்டத்தில் 49 ஆயலங்களில் பொது விருந்து நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஆதிதிராவிடர்கள் 24 ஆயிரத்து 701 பேர், ஆதிதிராவிடர் அல்லாதோர் 23 ஆயிரத்து 642 பேர். ஆக மொத்தம் 50 ஆயிரத்து 587 பேர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கிய குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக மதுரை மீனாட்சிஅம்மன் கோயில் சார்பாக ரூ 4 லட்சமும், கள்ளழகர் கோயிலின் சார்பில் ரூ. ஒரு லட்சத்து 25 ஆயிரமும், சோலை மண்டபம் அழகர் கோயில் மலை சார்பாக ரூ. 80 ஆயிரமும், திண்டுக்கல் நகர் கோட்டை மாரியம்மன் கோயில் சார்பாக ரூ. 80 ஆயிரமும், வீரபாண்டி கௌமாரியம்மன் கோயில் சார்பாக ரூ. 40 ஆயிரமும், திண்டுக்கல் காளகஸ்தீசுவரர்சாமி கோயில் சார்பாக ரூ. 40 ஆயிரமும் ரெட்டியார் சத்திரம் கோபிநாத சாமி கோவில் சார்பாக ரூ. 80 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளது. பழநி சுப்பிரமணியசாமி கோயில் சார்பாக ரூபாய் 10 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள சுமார் 20 கோயில்களின் திருப்பணி வேலைகளுக்காக ரூபாய் 6,51,700 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள கோயில் நிதிமூலம் ஆற்றப்படும் இத்தகைய மக்கள் நலத்திட்டங்களில் இவை மிகச் சில. விரிக்கிற் பெருகும் என்பதால், விடப்பட்டவையோ பல!





ஆண்டில் 1981-82ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து இவ்வாண்டும் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல கடந்த ஆண்டில் நடை பெற்ற பணிகளில் சில வருமாறு:

குடிநீர் வசதிக்காக 47 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூ. 2,63,150 செலவழிக்கப்பட்டுள்ளன. இதில் ஆதிதிராவிடர் கிறித்தவர்கட்குச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 16,000 ஆகும்.

மதிக்கப்பட்டுள்ள ரூ. 5000 செலவிடப்பட்டுள்ளது.

உபகாரச் சம்பளம்; 1981-82 நிதியாண்டில் கல்வி உபகாரச்சம்பளமாக ரூ. 53.94 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்தோர் 8605. இதில் பழங்குடியினருக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 17,650. மேலும் சுகாதாரக் குறைவான தொழில் புரிவோரின், எட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு (விடுதியில் தங்கிப்படிக்கும்) ரூ. 11600 வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் கல்விக் கடன் உதவித்தொகையாக 1588 நபர்களுக்கு ரூ. 10.27 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தட்டச்சு, சுருக்கெழுத்து பயிலும் ஆதிதிராவிட மாணவ, மாணவி

பேருக்கு ரூ. 85100 வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நிலவள வங்கிகள் மூலமாக புதிய பாசனக்கிணறுகள் தோண்டியதற்கு ரூ. 9840 மான்யமாக செலவிடப்பட்டுள்ளது.

உழவு மாடுகள் வாங்குவதற்கு 26 பேருக்கு ரூ. 500 வீதம் ரூ. 15,600 செலவிடப்பட்டுள்ளது. இதில் 7 பழங்குடியினருக்கான ரூ. 4200ம் அடங்கும்.

இத்துறைப்பள்ளிகளில் கல்வி பெறும் 5650 மாணவ, மாணவிகட்கு மதிய உணவிற்காக ரூ. 1.10 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகட்கு 9176 பேருக்குச் சீருடைகள் இரண்டு இணைகள் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டுள்ளன, இதற்காக ரூ. 7.48 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இத்துறை பள்ளியில் பயிலும்



# ஆதிதிராவிடர் நல்வாழ்வுக்கு..

மாணவ-மாணவிகட்கு இலவச பாடப் புத்தகங்கள் நோட்டுகள் மற்றும் சிலேட் வழங்கியமைக்காக ரூ. 58,360 செலவு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள் மற்றும் மயானங்கள் அமைக்கும் பணிகளுக்காக 51 வேலைகள் எடுக்கப்பட்டு ரூ. 2,40,000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக்கட்டடங்கள் அமைக்கும் பணிகளுக்காகப் பத்து சிறிய வேலைகள் எடுக்கப்பட்டு ரூ. 55000 செலவில் முடிக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கட்டடங்கள் பராமரிப்புக்கான 9 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவைகட்கு 30,364 செலவிடப்பட்டுள்ளது.

இளமனூர் மற்றும் முருகம்பட்டி கிராமங்களில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ. 30,000 செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் உண்டுறை விடுதி பராமரிப்புக்காக அனு

யருக்குச் சம்பளம் மற்றும் இதரச் செலவுகளுக்காக 22 நபர்களுக்கு ரூ. 3700 வழங்கப்பட்டுள்ளது.

**குடியிருப்பு மனைகள்:**

இந்த நிதியாண்டில் (1981-82) 68 கிராமங்களில் வீட்டு மனைக்காக 223.67 ஏக்கர் நிலம் கையகம்செய்யப்பட்டுள்ளது. இதனால் 4492 ஆதி திராவிடர் பயனடைகின்றனர். இதற்காக ரூ 16.42 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடியிருப்புக்கள் முன்னேற்றத்திற்காக 148 பணிகள் மேற்கொள்ளப்பட்டு (சாலைகள் அமைத்தல், பள்ளிக்கட்டடங்கள் அமைத்தல், குடிநீர் வசதி செய்து கொடுத்தல்) ரூ. 9 லட்சம் செலவிடப்பட்டுளளது.

சிறு தொழில்கள் தொடங்குவதற்கு இந்த ஆண்டில் 94

அரசு மான்யம் பெறும் 8 விடுதிகளில் தங்கிப் படிக்கும் 540 மாணவ மாணவிகட்கு உணவுச் செலவு ரூ. 2.39 லட்சம் செலவிடப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள மூன்று சமுதாய மன்றங்களின் பராமரிப்புக்காக ரூ. 48500 செலவிடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இலவச தொழிற்கருவிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கும் முகத்தான் ரூ. 42,277 செலவு செய்யப்பட்டுள்ளது.

தீண்டாமைஒழிப்புசம்பந்தமாக சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட பதின்மூன்று ஆதி திராவிடர் குடியிருப்புகள் தேர்வு செய்யப்பட்டு தலா ஒரு வானொலிப்பெட்டியாகப் பரிசு வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 5,200.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம்,


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!






## தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் (22-8-'82)





தமிழ்நாட்டுக்குப் புதிய ஆளுநராகப் பதவி ஏற்கவிருக்கும் திரு எஸ். எல். குரானா அவர்கள் 2.9.'82 இரவு சென்னை மீனம் பாக்கம் விமான நிலையம் வந்து சேர்ந்தபோது மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர் அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார்.

### புதிய ஆளுநர் பதவி ஏற்பு (3-9-1982)


சென்னை இராசாசி மண்டபத்தில் 3.9.'82 அன்று திரு. சுந்தர்லால் குரானா அவர்கள் தமிழக ஆளுநராக, சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. கே. பி. என். சிங் அவர்களால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப் பட்டார்.







நாட்டு நலம் காக்கப் பாடுபட்டு உயிர்நீத்த காவலரின்
வீட்டுநலம் காக்க அரசு உதவி.



தமிழரசு இலவச இணைப்பு

16 – 9 - 1982

# காவல் துறை

# காவல் துறை

வெளியீடு :

இயக்குநர்,
செய்தி—மக்கள் தொடர்பு,
செய்தி, சுற்றுலா (தமிழ்ப்) பண்பாட்டுத்துறை,
தமிழ்நாடு அரசு.

# பதிப்புரை

இந்தியாவிலேயே தமிழகக் காவல்துறை தனிச்சிறப்பு வாய்ந்தது. பெண் காவல் படை, காவலருக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்குதல், வீட்டு வசதி செய்து தருதல் போன்ற பல திட்டங்களில் முன்னோடியாக விளங்குவது. மக்களோடு நெருங்கிய தொடர்பை வளர்த்து மக்களுக்குத் திறமையோடும் தீரத்தோடும் பணியாற்றி வருவது. காவல் துறையின் பல்வேறு அமைப்பு முறைகளையும், அது பெற்றுள்ள நவீன வசதிகளையும், தமிழக அரசு காவலர்களுக்குச் செய்துள்ள பல்வேறு நல் வாழ்வுத் திட்டங்களையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தொகுத்து, தமிழரசு இதழின் இணைப்பாக, காவல் துறை பற்றிய இவ் வெளியீட்டை வெளியிட்டுள்ளோம்.

16-9-1982

இயக்குநர்

செய்தி-மக்கள் தொடர்பு

# முதலமைச்சரின் காவல் விருது



திறமை வாய்ந்த காவல் துறையினரை ஊக்குவிக்கும் வகையில்தமிழக அரசு,முதலமைச்சர் பதக்கம் என ஆண்டு தோறும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று பதக்கங்கள் வழங்குகிறது. இதன்படிப் பதக்கங்களோடு, இரண்டாம் நிலை, முதல்நிலை,தலைமைக்காவலர்களுக்குப் பரிசுத்தொகையாக ரூ. 1000-மும், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்களுக்குப் பரிசுத்தொகையாக, ரூபாய் இரண்டாயிரமும் துணைக் கண்காணிப்பாளருக்கு ரூபாய் மூவாயிரமும் வழங்கப் பெறுகின்றன.

தீரச் செயல் புரிந்தோர்க்கு, முதலமைச்சரின் பதக்கம் அளிக்கப் பெறுவதுடன், பரிசுத் தொகையாக ரூபாய் மூவாயிரம், தகுதி வேறுபாடின்றி அளிக்கப் பெறுகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று வழங்கப் பெறும் பதக்கங்கள், அதிகாரிகளுக்கும், காவலருக்கும் பொதுவானதால், ஓர் ஆண்டில் பத்துக் காவலருக்கு மேல் பதக்கம் பெற வாய்ப்பில்லாமல் இருந்தது.

இந்த ஆண்டு முதல், பொங்கல் பரிசாகத் தமிழக அரசு, ''முதலமைச்சர் காவல் பதக்கம்'' என ஒரு புதிய பதக்கம் ஒன்று தொடங்கப்பெற்று, ஆண்டுதோறும் பத்து ஆண்டுகளுக்கு மேல் குற்றம், குறையின்றிப் பணியாற்றியுள்ள 1,500 காவலர்களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும் வழங்கப் பெறுகிறது.

இந்தப் பதக்கம் பெறுவோருக்கு, மாதம் ஒன்றுக்கு கூடுதல் ஊதியமாக ரூ. 20-ல் இருந்து ரூ. 25 வரை கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. இப்பதக்கம் பெறுவோர், தங்களுடைய பணியில், பழுதறப் பணியாற்றினால், இந்த மாதாந்திர உதவி, அவர்கள் ஓய்வு பெறும் காலம் வரை வழங்கப்படும். இதுகாறுமே, ஏறத்தாழ 52,000 பேரை அங்கமாகக் கொண்டே காவல்துறையில், 1,500 பேர் இப்பதக்கம் பெற்றுள்ளனர் என்றால், இத்திட்டத்தின் பயன் எத்தனைப் பேரை எத்துணை அளவிற்கு அரவணைத்து உள்ளது என்பது தனிப் பெருஞ் சிறப்பு.

# மக்கள் தொடர்பு

காவல்துறையின் பணி, மிகக் கடுமையானதோடு மட்டுமல்லாமல், மிகவும் சிக்கலானதும்கூட. பல போழ்துகளில் அவர்கள் உறுகின்ற அல்லல்களும், இன்னல்களும், சமுதாயத்தின் ஏனைய அங்கங்களால் உணரப்படுவதில்லை என்ற ஆதங்கமும் குறையும் உண்டு. காவல்துறையினரது பணிச் சூழ்நிலை அலாதியானது.

குற்றங்களைத் தடுப்பதிலும், நடந்த குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், சட்டம் ஒழுங்குகளை நிலைநாட்டலிலும், காவலரோடு ஒத்துழைத்து, உறுதுணை பயப்பதில் சமூகத்திற்குப் பெரும் பங்கு உண்டு. சமுதாயப் பொறுப்புணர்வு, எழுச்சி பெற்றிருப்பின், காவலர்கள் அவர்கள் தம் கடமை ஆற்றுவது எளிதாக அமையும்.

ஏனைய பணிகளைக் காட்டிலும், காவல்துறையினரின் பணி சிறக்க, சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரின் ஒத்துழைப்பும் தேவை. காவல்துறைத் தலைவரும், ஆணையரும் நாளேட்டுப் பிரதிநிதிகளையும், பத்திரிகை நிருபர்களையும் வாரமொரு முறை சந்தித்து, கலந்துரையாடி, காவல்துறையினரின் சாதனைச் செயல்களை விளக்குகின்றனர். பொது மக்கள் தரப்பில் இருந்து கூறப்படும் செய்திகளைக் கேட்பதற்கும் இச்சந்திப்புக்கள் பயன்படுகின்றன. காவல்துறை துணைத் தலைவர்களும், காவல் கண்காணிப்பாளர்களும், சரகத் தலைமையிடங்களிலும், மாவட்ட மையங்களிலும், இதுபோன்ற சந்திப்புக்களை மேற்கொள்கின்றனர். வானொலி-தொலைக்காட்சி போன்ற சாதனங்களும், பொது மக்களுடன் உள்ள உறவை வலுப்படுத்த உதவி புரிகின்றன.

போக்குவரத்து விதிகளை அமல்படுத்துவதிலும், போக்குவரத்தை நெறிப்படுத்துவதிலும், கல்லூரி, பள்ளி மாணவ மாணவியருடைய ஒத்துழைப்பு நாடப் பெறுகிறது. இதன் வாயிலாக, மாணவச் சமுதாயத்துடன், காவல்துறையினர்க்குத் தோழமை துளிர்க்கிறது. மாணவர் உலகிற்குக்

காவல்துறையினரின் பணிகளில் உள்ள கடினங்கள் புரிகின்றன. இந்த உறவானது, காலப் போக்கில் ‘போலீஸ் பொது மக்கள் சேவைக்குழு’ என முழுமை பெற்ற இயக்கமாகவே மலர வாய்ப்புண்டு.


சென்னை நகரில் உள்ள ‘போக்குவரத்துக் காப்பாளர்’ அமைப்பானது, பொதுமக்களையும் காவல்துறைப் பணியில் ஈடுபடுத்தும் முறைகளில் ஒன்றாகும். இந்த அமைப்பு, வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

காவல் துறையினரின் பணி பற்றிய திரைப்படம் வாயிலாகப் பொதுமக்களுக்கும் காவல்துறையினரின் பணியைத் தெளிவாக எடுத்துக்கூறும் திட்டம் ஒன்றும் உள்ளது.

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும், காவல் துறையினரோடு ‘தோளோடு தோள்’ சேர்ந்து நிற்கும் நிலை துளிர்க்கும் என்றால், அதைக் காட்டிலும் சிறந்த ‘பணிச் சூழல்’ வேறொன்றும் இருக்கவியலாது.



திக்குத் தெரியாமல் திணறுவோருக்கு உதவி



# தொட்டில் ஆட்டிய கரங்கள் துப்பாக்கி சுடுகின்றன

சென்னை நகரில் 27.12.73-ஆம் தேதி ஓர் உதவி ஆய்வாளரையும், ஒரு தலைமைக் காவலரையும், இருபது பெண் காவலரையும் கொண்டு தொடங்கப் பெற்ற பெண் காவலர் அணி, இன்று பெரிதும் விரிவுற்று, இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுத் திகழ்கிறது.

1975ஆம் ஆண்டில் இவ்வணி, கோவை, திருச்சி, மதுரை மாவட்டங்களிலும், சென்னை விமான நிலையத்திலும் சென்னை நகரைப் போலவே அமைக்கப்பெற்றது. 1981ஆம் ஆண்டு, 77 உதவி ஆய்வாளர்களும், 60 தலைமைக்காவலர்களும், 660 பெண் காவலர்களும் பயிற்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியக் காவல்துறை வரலாற்றில், இது ஒரு சரித்திரச் சாதனையாகும். புதுமைப்பெண் பற்றிக் கனவு கண்ட பாரதியின் பொற்கனவு, பாரதி நூற்றாண்டு விழாவில் நனவாகக் காரணம், மாண்புமிகு தமிழக முதல்வரின் தளராத ஆர்வம் தான். பெண் உதவி ஆய்வாளரின் முதல் அணியில், 77 பேர் சென்னையில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரியில் 1.3.81 முதல், 1.3.82 வரை பயிற்சி பெற்று, இன்று மாநிலம் முழுவதும் அருந்திறனுடன் பணியாற்றி வருகின்றனர்.

வேலூரில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளியில், 64 பெண் தலைமைக் காவலரும், 660 பெண் காவலரும் பிப்ரவரி 81

முதல் அக்டோபர் 81 வரை பயிற்சி பெற்று, இன்று பாங்குடன் பணியாற்றி வருகின்றனர்.

திருமதி திலகவதி குமரன், மாநிலக் காவல்துறையில் இன்று தலைமையகத்தில் உதவிக் காவல்துறைத் தலைவராக உள்ளதும், திருமதி லதிகா சரன், கோவை (நகர்ப்புற) மாவட்டக் கண்காணிப்பாளராக உள்ளதும் வரலாற்றுச் சிறப்புக்கள்.

ஏனைய காவலர்களைப் போலவே எல்லாப் பயிற்சிகளும் பெற்றுப் பணியாற்றும் பெண் காவலர், இன்னமும் சிறப்பான பிரத்தியேகப் பணிகளையும் ஆற்றி வருகின்றனர். அவை:—

(1) விமான நிலையங்களில், பெண் பயணிகளைப் பரிசோதனை செய்தல்
(2) பெண்கள் குழுமிய பெருந்திருவிழாக்களில், பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

(3) பெண், இளம் குற்றவாளிகளைக் கைது செய்தல்.
(4) பெண் குற்றவாளிகளைப் பரிசோதனை செய்தல்.
(5) சிறையிலிருந்து நீதிமன்றத்திற்கும், நீதிமன்றத்தில் இருந்து சிறைக்கும் பெண் மற்றும் இளம் குற்றவாளிகளை அழைத்துச் செல்லல்.
(6) பள்ளிக் கூடங்கள் அருகே, போக்குவரத்தைநெறிப் படுத்துதல்.
(7) விபச்சார விடுதிகளைப் பரிசோதனை செய்ய அணிகள் செல்லும் போதில், அவற்றின் உடன் போந்தல்.

''பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்ற பெண் விடுதலைக் கும்மியின் குதூகலக் கோலாட்டம் தான், தமிழகக் காவல் துறையின் பெண் காவலர் அணியின் இயக்கம். இன்னமும் சிறப்புடனும், செயலூக்கத்துடனும் இவ்வணி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வெற்றி வாகை சூடவிருப்பது வெள்ளிடைமலை.

**1948**-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டுக் காவல்துறையில் 20,473 அதிகாரிகளும், காவலர்களும் இருந்தனர். மக்கள் தொகை பெருகப் பெருக நகர்ப்புறங்கள் விரிவடைய, சமுதாயம் நாடோறும் மேலும் தொழில் மயமாகிவர, காவல் துறையினரின் எண்ணிக்கையும் அதிகரித்ததாக வேண்டியுள்ளது. நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக 1948-ல் 20,473 காவல்துறையினரைக் கொண்டிருந்த துறை, இன்று பல்லாற்றாலும், படிப்படியாக வளர்ந்து, 1981-ஆம் ஆண்டில், ஏறத்தாழ 52,000 காவலர்களையும், அதிகாரிகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

# சிறுவர் சங்கங்கள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள இளஞ்சிறார்கள் குற்றவாளிகளின் கொடிய கரங்களுக்கு இரையாகாமல் தடுக்கும் பொருட்டும், அவர்களின் ஓய்வு நேரப்பொழுது போக்கை ஆரோக்கியமான, தூய்மையான சூழ்நிலையில் பயனுறக் கழிக்க வாய்ப்பளிக்கவும், நல்ல குடிமகனாக வாழ வழிகாட்டும் வகையிலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ''சிறுவர் சங்கங்கள்'' அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் தற்போது 31 'சிறுவர் சங்கங்கள்' இயங்கி வருகின்றன. குடிசைப்பகுதிகளில் சோம்பித் திரியும் சிறுவர்களை ஆரோக்கியமான பொழுது போக்கில் ஈடுபட ஈர்க்கும் வகையில் இச்சிறுவர் சங்கங்களில் பெரும்பாலானவை குடிசைப் பகுதிகளை ஒட்டிய அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிறுவர் சங்கத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரை துணைத் தலைவராகவும் கொண்ட ஒரு குழுவே நிர்வகிக்கிறது. நலச் சங்கங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் சமூக நிறுவனங்களில் உள்ள பொது மக்களில் சிலர் இச்சங்கங்களின் நிர்வாகத்தில் பங்கேற்கின்றனர். இக்குழுக்களின் நடவடிக்கைகளை ஒருமுகப் படுத்தவும், ஒருங்கிணைக்கவும், குற்றப்பிரிவு காவல்துறைத் துணைத் தலைவரை, தலைவராகக் கொண்ட மத்தியக் குழு ஒன்று உள்ளது. இச்சிறுவர் சங்கங்களுக்குத் தேவையான நிதியுதவியை மாநில அரசு அளிக்கிறது.

# தண்டவாளங்களுக்கு இடையே...

இருப்புப்பாதைச் சரகத்தில், சட்ட ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பு அரசினர் இருப்புப் பாதை அணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது பொதுக் காவல்துறையின் ஓர் அங்கமே. அதன் பரப்பானது இருப்புப் பாதைத் தண்டவாளங்களுக்கு இடைப்பட்ட சுமார் 2,857 கி. மீட்டர் பாதையிலும் 1,067 கி.மீ. அகலப் பாதையிலும் சரக்குக் கிடங்குகளை உள்ளடக்கியும் வியாபித்து உள்ளது.

இருப்புப் பாதைக் காவல் அணி காவல்துறைத் துணைத் தலைவர் ஒருவரின் மேற்பார்வையில் சென்னையில் ஒரு காவல் கண்காணிப்பாளரையும் திருச்சியில் ஒரு காவல் கண்காணிப்பாளரையும் கொண்டு இயங்குகிறது. மத்திய சென்னை, கோவை, திருச்சி, மதுரை முதலிய இடங்களைத்




தலைமையாகக் கொண்டு நான்கு கோட்டங்கள் உள்ளன. 27 இடங்களில் இருப்புப் பாதைப் புறக் காவல் நிலையங்களும் உள்ளன.

மத்திய சென்னையிலும், எழும்பூரிலும், இருப்புப்பாதைக்குரிய முக்கிய ரயில்நிலையங்கள் உள்ளபடியால், அங்குள்ள காவல் நிலையங்களுக்குப் பெரிதும் பொறுப்பான அலுவல்கள் உள்ளன. இரண்டு நிலையங்களிலும், இரண்டு பெண் காவல் அணிகள் உள்ளன. இவர்கள் ரயிலில் வரும் பெண் பயணிகளுக்கு வழிகாட்டி உதவி புரிகின்றனர். ஒரு துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் திருச்சியில் குற்ற ஆவணக் காப்பகம் ஒன்று இயங்குகிறது. பொதுக் குற்றப் பிரிவு ஒன்றும் தனிப்பிரிவு ஒன்றும் உள்ளது.

பெரும்பாலும் மாவட்டக் குற்றவாளிகளாலேயே இருப்புப்பாதை எல்லைக்குள் குற்றங்கள் நிகழ்கின்றன. மாணவர் கிளர்ச்சிகள், அரசியல் போராட்டங்கள் போன்றவற்றால் சட்டம் ஒழுங்கு, பாதிக்கப்படும்போது, இருப்புப் பாதைகளும், இரயில்களும் தாக்குதல்களுக்கு இலக்காகின்றன. இதனால் இருப்புப் பாதையில் நடக்கும் குற்றங்களைக் கண்டுபிடிப்பது, மிகவும் கடினமானதும் நுட்பமானதுமாகும்.

உள்ளூர்க் காவல் துறையுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதன் மூலம், இருப்புப் பாதைக் காவல்துறையினர் அவர் தம் அலுவலில் வெற்றிகரமாகப் பணியாற்ற முடியும். பெரும்பாலான சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்

கள், ஓடும் இரயிலிலும், நிற்கும் இரயிலிலும், சமதளங்களிலுமே நடக்கின்றன. அவற்றைத் தடுக்க ஓடும் இரயில்களிலும், சமதளங்களிலும் தவறாது ரோந்து அனுப்பப்படுகின்றது.

**இருப்புப் பாதைக் காவல்துறை, இருப்புப் பாதைப் பாதுகாப்புப் படையினின்றும் வேறுபட்டதாகும். இருப்புப் பாதைப் பாதுகாப்புப் படை என்பது, இரயில்வே நிர்வாகத்தால் உருவாக்கப்பட்ட இரயில்வே சொத்துக்களையும், இரயிலில் கொண்டு வரப்பட்ட சொத்துக்களையும் பாதுகாக்கும் படையாகும்.**

புறநகர் மின்சார இரயில்கள் தாம்பரத்துக்கும்-எழும்பூருக்கும் இடையேயும் மத்திய சென்னை-கும்மிடிப் பூண்டிக்கும் இடையேயும், மத்திய சென்னை திருவள்ளூருக்குமிடையேயும் விடப்பட்டுள்ளன. அவை வாடிக்கைப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. வாடிக்கைப் பயணிகளின் நெருக்கம் அதிகம் என்பதால், நெருக்கமும், பரபரப்பும் நிறைந்த காலை, மாலை வேளைகளில் இருப்புப் பாதை காவல்துறையினர் ரோந்துகளை அதிகரிக்கின்றனர்.


ஆண்டுகள் பலவாக, இருப்புப் பாதைக் காவலரின் எண்ணிக்கை என்றுமே நிலையாயிருந்துள்ளது, என்பது குறிப்பிடத்தக்கது. பயணிகள் போக்குவரத்து அதிகரித்துள்ளதை முன்னிட்டு இரயில்களும் அதிகமாக விடப்பட்டுள்ளபடியால் இப்படையின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

ooo

# விமான நிலையப் பாதுகாப்பு

விமான நிலையத்தில், விமானப் பாதுகாப்புக்கெனத் தனிக்காவலர் படை ஒன்று உள்ளது. அதன் அலுவல் இரு வகைப்படும். ஒன்று விமானத்தளத்தையும் ஏனைய இன்றியமையாத கருவிகளையும் பாதுகாத்தல், மற்றொன்று விமானக் கடத்தலை தடுத்தல். விமானத்தளத்திலும், அங்கீகார காரமற்றவர்கள் நுழைவதைத் தடுக்கவும், விமானத்தின்





விமான நிலையத்தில் பரிசோதனை.

பல்வேறு பகுதியைச் சார்ந்த அலுவலர்கள் விமானதளத்துக்குள் நுழைவதைச் சீர் செய்யவும், எல்லா நுழை வாசல்களிலும் எந்நேரமும் காவல் உண்டு. விமானதளத்தின் வெளிப்புறப்பரப்பு 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆயுதம் தாங்கி காவல் படையினரால் ரோந்து செய்யப்படுகிறது.

விமானக் கடத்தலைத் தடுப்பது இப்பாதுகாப்புப் படையின் முக்கிய அலுவலாகும். ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடிய பொருட்களாகிய வெடி மருந்துகள், துப்பாக்கிகள், கத்திகள் போன்றவற்றை, யாராவது பயணிகள் கொண்டு செல்கின்றனரா என்பதை அவர்களை நன்கு சோதனையிட்டு அறிகிறார்கள். இச்சோதனையினின்று எவரும் தப்பிக்க இயலாது. எனவே, விமானத்தை நடு வானத்தில் அச்சுறுத்திக் கடத்துவது அரிது.

பயணிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்ட பின்புதான் விமானதள ஓய்வறைக்குள் அனுமதிக்கப்பட்டு, பின்னர் விமானத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். ஓய்வறையிலிருந்து விமானத்திற்குள் செல்லும் வரையிலும் பாதுகாப்பு உண்டு. தங்கம், வெள்ளி போன்ற உலோகப் பொருட்களை உடலிலோ அல்லது தமது கைப்பைகள், பெட்டிகளிலோ பயணிகள் மறைத்து வைத்துள்ளனரா என்பதைக் கண்டுபிடித்தறியும் சிறப்புக் கருவியொன்று உள்வாயிலில் பொருத்தப்பட்டு உள்ளது. எனவே.

இந்த உள் வாயில் வழியாக எந்த உலோகப் பொருட்களையும் கள்ளத்தனமாகக்கொண்டு செல்ல முடியாது. பயணிகள் எடுத்துச் செல்லும் பொருட்களை ஊடுருவிப் பார்க்கக் கதிரியக்கக் கருவிகளும் விமான நிலையத்தில் இனி பொருத்தப் படவுள்ளது.

இப்பாதுகாப்புப் படை, காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மூன்று பிரிவுகளாக, ஒவ்வொரு பிரிவும் ஓர் ஆய்வாளர் தலைமையில் நாள் முழுவதும் இயங்குகிறது. பெண் காவலர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாகப் பயணிகள் எடுத்துச் செல்லும் பொருட்களைச் சோதனை செய்யும்போது, அப்பிரிவுக்கான ஆய்வாளர் தவறாது பயணிகள் புறப்படும் இடத்திலிருந்து கண்காணிக்கின்றார். வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்து விமானம் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்யப்பட்டால், ஆய்வாளர் அருகிலிருந்து உதவுகிறார்.

ஓர் உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 2 காவலர்கள் ஆகியோர் துப்பாக்கி ஏந்தி, விமானம் நிற்கும் தளத்துக்கு அருகே ரோந்து புரிகின்றனர். ஓர் உதவி ஆய்வாளரும், ஒரு காவலரும், கடைசி மாடிக் கட்டடத்திலிருந்து ஐயப்படும்படியாகத் திரியும் நபர்களைக் கண்காணிக்கின்றனர். விமானக் கடத்தல் குறித்த குற்றவாளிகளின் நிழற்படப் பதிப்பில் பார்வையிட்ட பின்பு அவர்களையும், தவறவிடப்பட்ட பொருட்கள், பொட்டலங்கள், சந்தேகத்துக்குரிய சாதனங்கள் ஆகியவற்றையும் மேற்கண்ட உதவி ஆய்வாளரும் காவலரும் கண்டுபிடிக்கத் துணைபுரிகின்றனர்.

பன்னாட்டு விமான நிலைய இந்திய அதிகார அமைப்பு, சுங்கத்துறை போன்ற அமைப்புகளுக்கு உறுதுணையாக இருந்து, விமானநிலையைப் பாதுகாப்புப்படை சிறப்பாகப் பணியாற்றிவருகிறது.


**காவல்துறை, சீராகச் செயல்படத் தேவையான போக்குவரத்து வசதிகளும், சாதனங்களும் அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. 1962-ஆம் ஆண்டு, காவல் துறையில் 424 போக்குவரத்து வாகனங்கள் மட்டுமே இருந்தன. 1982-ஆம் ஆண்டில், அதன் எண்ணிக்கை, படிப்படியாகப் பெருகி 2,049 ஆக உயர்ந்துள்ளது. பெருகிவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், காவல்துறையின் செயலாக்கத்தை இன்னும் விசைப்படுத்தவும் திட்டங்கள் பல உள்ளன.**

# காவல்படையின் ஏழு அணிகள்

ஆயுதப்படைச் சரகமானது ஏழு தமிழ்நாடு சிறப்புக் காவல் படைகளாகவும், காவல் போக்குவரத்து வாகனங்கள், தொழிற்பட்டறையுடன் கூடிய ஆவடி பயிற்சிப் பள்ளி, அத்துடன் படைப் பயிற்சி மையம் ஆகியவைகளாகவும் பகுக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஏழு அணிகள் ஆவடி, திருச்சி, கோவைப்புதூர், மணிமுத்தாறு ஆகிய இடங்களில் பாடி அமைத்துள்ளனர்.

ஒவ்வொரு தமிழ்நாடு சிறப்புக்காவல் படையும் ஒரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு ஈடான தகுதியுடைய தளவாய்ப் பொறுப்பில் இயங்குகிறது. 7 அணிகளும் அவற்றின் தலைமையகத்தோடு 4 பிரிவிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை தலைமையகம், சைகைப்பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு, பண்டக சாலைப் பிரிவு ஆகியவையாகும். ஒரு படையின் மொத்த எண்ணிக்கை 854.



மாநிலத்தில், சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட உள்ளூர் காவல் படையினருக்கு, தக்க பலம் வழங்கும் படையாகத் தமிழ் நாடு சிறப்புக் காவல்படை செயல்படுகிறது. கடந்த காலங்களில் உருவான புரட்சிகளை ஒடுக்க இந்தியப் படையினருக்கு உறுதுணையாகவும், இப்படைகள் அனுப்பப்பட்டுள்ளன. 1980 செப்டம்பர் மாதத்திலிருந்து, தமிழ்நாடு சிறப்புக் காவல் 2-ஆம் படை டில்லியிலுள்ள, இன்றியமையாத நிறுவனங்களைக் காப்பதற்கு இந்திய அரசுக்கு உதவியாக உள்ளது.

ஆவடியிலுள்ள படைப் பயிற்சி மையத்தில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த உதவி ஆய்வாளர்கள், சேமநலப்படை துணை உதவி ஆய்வாளர்கள், மாவட்ட சேமநலப்படை உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு ஆரம்பப் பயிற்சியும், ஆழ்ந்த பயிற்சியும் வழங்கப்பெறுகிறது.

ஆவடி படைப்பயிற்சி மையம், திருச்சி தமிழ்நாடு சிறப்புக் காவல் முதல் படை, மணிமுத்தாறு தமிழ்நாடு சிறப்புக் காவல் மூன்றாம் படை முதலிய அணிகளில் காவல் மருத்துவ மனைகள் உள்ளன.

ஆவடியிலுள்ள காவல் மோட்டார் வாகனப் பழுது பார்க்கும் கூடம் மற்றும் பயிற்சிப் பள்ளி, ஆவடியில் அமைந்துள்ளன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை வாகனங்களும் சென்னை நகர் காவல், மற்றும் சென்னையிலுள்ள இதர காவல் அணிகளின் வாகனங்களும் இங்கு பழுது பார்க்கப்பட்டு பராமரிக்கப்பெறுகின்றன. அந்தத் தொழிற்கூடம் ஒரு மோட்டார் பொறியியல் வல்லுநரின் கீழ் கைதேர்ந்த தொழிலாளர்களின் உதவியுடன் செயல்படுகிறது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் உள்ளூர் காவல் துறையினருக்கு உறுதுணையாக, தம் இன்னுயிரையும் துச்சமென மதித்து செம்மையாகச் செயல்பட்டு வருகின்றனர்.

## மதுவிலக்குக் குற்றப் பிரிவு

தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தையும், அவற்றின் கீழ் கொண்டு வரப்பட்ட ஏனைய விதிகளையும் அமல்படுத்தும் பணியை இப்பிரிவு ஆற்றி வருகிறது. மாநிலம் முழுமைக்குமான இப்பிரிவின் பணிகளைக்காவல்துறைத் துணைத் தலைவர் ஒருவர் மேற்பார்வையிட்டுக் கண்காணித்து வருகின்றார்.

சாராயம் கடத்தப் பெறுதல், கள்ளச் சாராயம் உற்பத்தி செய்தல் இவை போன்ற சட்டவிரோதச் செய்கை

தமிழ்நாட்டின் பரப்பு 6 காவல்துறைச் சரகங்களாகவும், 20 காவல்துறை மாவட்டங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இது நீங்கலாக, இருப்புப் பாதைக் காவல்துறை தனி மாவட்டமாகவும், சென்னை நகரில் ஆணையர் தலைமையில் இயங்கும் அமைப்பு தனியாகவும் இயங்குகின்றன.

களைத் தடுப்பதில் இப்பிரிவு தளராது பணிபுரிகிறது. அண்டை மாநிலங்களில் இருந்து, அயல்நாடு மதுவகைகள் கடத்தப் பெறுவதைத் தடுத்து, அரசுக்கு வரிஏய்ப்புச் செய்யும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறது. சுத்திகரிக்கப்பட்ட சாராயம், மற்றும் சாராய எரிபொருட்கள், இவை அங்கீகரிக்கப்பட்ட முறைகளுக்கு முரணாகப் பயன்படுத்தப் பெறாமல், காக்கும் பொறுப்பும் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரின் கீழ், இணைக் காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் மதுவிலக்குக் குழுக்கள் செயலாற்றுகின்றன. இவை, சென்னை நகரில், காவல்துறை உதவித் தலைவர் ஒருவரைத் தலைவராகக் கொண்டுள்ளன.

வட சென்னை, தென் சென்னை என்ற இரண்டு பகுதிகளுக்கும், தனியாக இரண்டு சோதனைக் குழுக்கள் உள்ளன. இப்பிரிவு, மதுவிலக்கு நடவடிக்கைகளுடன், கஞ்சா, அபின் மற்றும் போதைப் பொருள்கள் புழக்கத்தையும் கட்டுப்படுத்தி, வேட்டையாடி அதை அறவே ஒழிக்கப் போராடி வருகிறது.

## உணவுப் பொருள் வழங்கல்

உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத்துறை இன்றியமையா உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், இப்பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்கவும் 'இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்' கீழ் மாநில அரசு பிறப்பிக்கும் பல்வேறு உணவு தானியக் கட்டுப்பாட்டு ஆணைகள் மற்றும் இதர ஒழுங்கு முறைகளை அமல்படுத்தவும், இன்றியமையா உணவுப் பொருட்கள், நேர்மையான முறையில், வழங்கப்படவும் உணவுப் பொருள் வழங்குதுறை நிர்வாகத்தினருக்கு உதவவும், பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள், கள்ள வணிகர்கள், கலப்படம் செய்வோர் ஆகி

யோரைக் கண்காணித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள் வதுமான இன்றியமையாப் பணிபுரிந்து வருகிறது.

ஒரு காவல்துறைத் துணைத்தலைவரின் தலைமையில் இயங்கும் இப்பிரிவில் சட்ட ஆலோசகர் ஒருவரும் பணி யாற்றுகிறார். இப்பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங் களை நீதிமன்றங்களில் தாக்கல் செய்து உதவ அரசு வழக்கறி ஞர் ஒருவரும் உண்டு. காவல்துறைத் துணைத்தலைவரின் கட்டுப்பாட்டில் 14 உணவுப் பொருள் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளும், 8 பதுக்கல் தடுப்புப் பிரிவுகளும் உள்ளன.

சென்னை, உணவுப் பொருள் வழங்கு குற்றப்புலனாய் வுத்துறையின் காவல் கண்காணிப்பாளர், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகிறார். இவர் 9 பிரிவு களை மேற்பார்வையிடுகிறார். இவருக்கு உதவியாக சென் னையில் ஒருவரும், கோவையில் ஒருவருமாக இரண்டு துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் செயல்படுகின்றனர்.

மதுரை உணவுப் பொருள்கள் வழங்கு குற்றப்புல னாய்வுத்துறை, காவல் கண்காணிப்பாளருக்கு மதுரை தலைமையிடம். இவர் ஐந்து பிரிவுகளை மேற்பார்வையிடு கிறார். அவருக்கு மதுரையில் ஒருவரும், திருநெல்வேலியில் ஒருவருமாக, இரண்டு துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் உதவி புரிகின்றனர். சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பதுக்கல் தடுப்புப்பிரிவு ஒன்றும் உள்ளது. பதுக்கல்காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் ஆகியோர் பற்றி துப்புத்துலக்கி கடும் நடவடிக்கை எடுப்பதே இப்பிரி வின் தலையாய பணிகள்.

பதுக்கல், கள்ளச் சந்தை வணிகம், இன்றியமையாப் பண்டங்களைக் கடத்துதல் போன்றவை நிகழா வண்ணம், தடுக்கும் நோக்கோடு இத்துறை இன்றியமையாப் பொருட் கள், விற்பனை செய்யும் வணிகர்களைக் கண்காணித்து வரு கிறது. பொதுமக்களுக்குத் தெரியும் பொருட்டு, பண்டங் களின் விலைகளையும் கையிருப்பையும் கடைக்காரர்கள் எழுதி வைத்துள்ளனரா என்பதையும் கண்காணிக்கிறார்கள். ஐம்பது சதவீதக் கொள்முதல் முறையை அமலாக்கிய பிறகு, அரிசி மற்றும் நெல் வணிகர்களிடமிருந்து கொள் முதல் பெற, வருவாய்த்துறைப் பணியாளர்களுக்கு உறு துணையாக இத்துறையினர் உதவி புரிந்தனர். 'சிமெண்ட்' கலப்படத்தைத் தவிர்க்க, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. சமீபத்தில் சர்க்கரை யில் கலப்படம் செய்வதும், பெட்ரோலிய திரவ வாயுவைத் திருடுவதும் தெரிய வந்தபோது, அம்மாதிரி தீய நடவடிக்கை களைக் களையும் பொருட்டு திடீர்ச் சோதனைகள் நடத் தப்பட்டு, குற்றவாளிகள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.

காட்டிக் கொடுக்கும் கைரேகை



# விரல் ரேகைகள்

தமிழ்நாடு விரல் ரேகைக்கூடம் 1895-ஆம் ஆண்டு மே மாதம் மாநில முழுவதிலுமுள்ள குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன், நிறுவப் பட்டது. தமிழகத்தில் ஏதேனும் ஒரு காவல்நிலையத்தில் ஒருவர் திருட்டுக்குற்றங் களுக்கென கைது செய்யப்படும்போது, அவருடைய விரல் ரேகைப் பதிவுக்கள் தமிழ்நாடு விரல் ரேகைக் கூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. விரல்ரேகைக் கூடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 3 லட்சம் குற்றவாளிகளின் விரல்ரேகைப் பதிவுகளுடன் அவை ஒப்பிடப்பட்டு அவர் ஏற்கெனவே குற்ற வாளியாக இருந்தால் அவரது முன் தண்டனை போன்ற விவரங்கள் குறிப்பிட்டு அந்தக் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

புதிதாக ஒருவர் மாநிலத்தின் எந்த மூலையிலாவது குற்றம் செய்து பிடிக்கப்பட்டால், அவரது விரல்ரேகைப் பதிவுகள் தமிழ்நாடு விரல் ரேகைக் கூடத்திற்கு அனுப்பப் பட்டு, அங்குள்ள மற்ற விரல் ரேகைப் பதிவுதளுடன் சேர்த் துக் கொள்ளப்படும். இது தவிர சிவில் வழக்குகள், காவல் துறை வழக்குகள், கூட்டுறவு அமைப்பு, மற்ற அரசு நிறு வனங்களில் தில்லுமுல்லுகள் நடந்திருந்தால் சம்பந்தப்பட்ட கோப்புகளிலுள்ள கைரேகையைச் சரிபார்த்து முடிவு கூறுதல்,

ஆகிய பணிகளையும் இது மேற்கொள்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்தின் கிளைகளிலும் நிறுவப்பட்டிருக்கும் தனிவிரல் ரேகைக்கூடங்களும் குற்றக் கண்டுபிடிப்பிற்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றன. இதில் பணிபுரியும் நிபுணர்கள் வீட்டுத் திருட்டு, கதவுடைத்துத் திருடுதல், கொள்ளை ,வழிப்பறி, கொலை, போன்ற குற்றங்கள் நடந்த இடங்களுக்குத் தகவல் கிடைத்ததும் உடனே விரைகிறார்கள். அவர்கள் குற்றம் நடைபெற்ற குறிப்பிட்ட இடங்களில் கிடைக்கும் விரல் ரேகைத் தடயங்களைச் சேகரித்துத், தனி விரல் ரேகைக்கூடத்திலுள்ள குற்றவாளிகளின் விரல்ரேகைப் பதிவுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

குற்றம் நடந்த இடத்திலிருந்து கிடைத்த விரல் ரேகைத் தடயம் ,தனி விரல்ரேகைக்கூடத்தின் எந்த ஒரு விரல் ரேகைப் பதிவுடனாவது ஒத்து இருந்தால், அந்த நபர்தான் அந்த குற்றத்தைக் செய்ததாக ஐயத்துக்கு இடமின்றிக் கண்டு பிடிக்கப்பட்டு, காவல் துறையினருக்கு உடனே தெரிவிக்கப் படுகிறது. அதை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப் பட்ட காவல் அதிகாரிகள் அந்தக் குற்றவாளியைக் கைது செய்வதன் மூலம் அந்தக் குற்றத்துக்கான துப்பு துலக்கப்படுகிறது.

தனிவிரல்ரேகைக் கூடத்திலும் தமிழ்நாடு விரல்ரேகைப் பதிவுக்கூடத்திலும் கண்டு பிடிக்கப்படாத குற்றவாளிகளின் விரல்ரேகைத் தடயங்கள், அண்டை மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள விரல்ரேகைப் பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இந்த முறையினால் பல பெருங் குற்றங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக விரல் ரேகைத் தடய முறைதான் திருட்டுக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் காவல்துறைக்குப் பெரிதும் உதவியாய் இருக்கின்றது. மிராக்கோடு என்னும் மின்னணு இயந்திரம் குற்றம் நடந்த இடங்களில் கிடைக்கும் விரல் ரேகைத் தடயங்களை நுண்ணிய புகைப் படங்களாக எடுத்து, ரேகைத் தடயங்களைத் தேடித்தர உதவி செய்கின்றது.

மிராக்கோடு முறையில் எல்லாக் குற்றவாளிகளின் ரேகைகளும் சேமித்தபின் விரல்ரேகைத் தடயங்களை தேடிக் கண்டு பிடிப்பது வெகுவிரைவாக நடைபெறுவது மட்டுமில்லாமல் புலனாய்வுத்துறை அதிகாரிகள் குற்றங்களை விரைவாகக் கண்டுபிடிக்கவும் இயலும்.




# கம்ப்யூட்டர் பிரிவு

காவல்துறையை நவீனப்படுத்தும் நோக்கில், குற்றவிவரங்கள்-குற்றவாளிகள்-கைரேகைகள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கெனக் காவல்துறையில் கம்ப்யூட்டர் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2,85,974 சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் 2,32,270 பழங்குற்றவாளிகள், மற்றும் 3,81,993 குற்றவாளிகளின் கைரேகைப் பதிவுகள் ஆகிய விவரங்கள் கம்ப்யூட்டரின் புள்ளி விவரச் சேகரிப்பு நிலையத்தில் பராமரிக்கப்பட்டுள்ளன.

திருட்டுக் குற்றங்களில் குற்றவாளிகள் பயன்படுத்திய முறைகள் பற்றி கம்ப்யூட்டர் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தால், அத்தகைய முறைக்குற்றவாளிகள் அடங்கிய தேர்ந்தெடுத்த பட்டியல் ஒன்றைக் காவல்துறை கம்ப்யூட்டர் வழங்கும். இதன் மூலம் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது எளிதாகிறது. மேலும் ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்ட விவரத்தைத் தெரிவிக்கும் போது, அக்குற்றவாளி ஏற்கெனவே எந்தெந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார் என்பதையும் கம்ப்யூட்டர் தொகுத்தளிக்கிறது.

குற்றவாளிகளின் பெயர், முகவரி, அங்க அடையாளங்கள், குற்றமுறைகள் போன்ற பல்வேறு விவரங்கள் தொகுக்கப்பட்டு, கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 3,81,993 குற்றவாளிகளின் விரல்ரேகைப் பதிவுகள் கம்ப்யூட்டர் புள்ளி விவரச் சேமிப்பில் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஒரு நபர் கைது செய்யப்படும்போது அவருடைய கைவிரல் ரேகைகள் தரம் பிரிக்கப்பட்டு அத்தகவல் கம்ப்யூட்டருக்கு அனுப்பப்படுகிறது. அந்நபருடைய முன் நடத்தை, முன் தண்டனை போன்ற விவரத்தை உடனுக்குடன் அலசி ஆராய்ந்து கம்ப்யூட்டர் தெரிவிக்கிறது. இதன்மூலம் நிரபராதிகள் தேவையின்றிக் காவலில் வைக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது.

நாள்தோறும் காவலர்கள் தங்கள் பணிகளுக்கென செல விடும் நேரமும் கணக்கிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட தலைமையகங்களிலும் ஒரு தொலை அச்சு இயந்திரம் நிறுவி அவற்றை நுண்ணலை, மிக உயர் அலை இணைப்பு மூலம் கம்ப்யூட்டருடன் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் மாவட்டக் காவல்துறையினர், குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய சந்தேகங்களை அவ்வப்போது நேரடியாகச் சென்னையிலுள்ள கம்ப்யூட்டர் நிலையத்துடன் தொடர்பு கொண்டு, அதற்கான விடைகளைத் தொலை அச்சுமூலம் உடனுக்குடன் பெற முடியும்.

மேற்கண்ட வினாவிடைகளை அஞ்சல் மூலம் பெறும் காலதாமதத்தை, தொலை அச்சுமூலமாகப் பெறுவதன் மூலம் தவிர்க்கமுடியும். குற்றக்கண்டுபிடிப்பு மற்றும் குற்றத்தடுப்பு முறைகளில் கம்ப்யூட்டர் சிறந்த அறிவுரைகளை வழங்கி உயர்ந்த பயனை நல்கியுள்ளது.

இந்தியாவிலேயே கம்ப்யூட்டரைக் காவல்துறைப் பணிகளுக்கெனப் பயன்படுத்திய மாநிலம், தமிழ்நாடுதான் என்பது வரலாற்றுச் சிறப்பாகும்.

—ooo—

# காவல் வானொலிப் பிரிவு

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காக்கவும், குற்றங்களைத் தடுக்கவும், வானிலைக் கோளாறுகளின் போது மற்ற தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, பொதுமக்கள் வாடும்போது அவர் தம் உதவிக்கும் காவல்துறையில் வானொலிப் பிரிவு தனித்தியங்கும் நிறுவனமாகும்.

### உயர் அலை கம்பியில்லாத் தந்திப் பிணைப்பு

இப்பிணைப்பானது 83 நிலையங்கள் கொண்டதாகும். அவை 5 கட்டுப்பாட்டுக் கருவிகளாக, நான்கு சென்னையிலும் ஒன்று திருச்சியிலும் ஆயுதப் படையிலும் உள்ளன. சென்னையிலுள்ள கட்டுப்பாட்டுக் கருவிகள், மாவட்டத் தலைமையகங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டத் தலைமையகங்களிலும் உள்ள உயர் அலை நிலையங்களைக் கட்டுப்படுத்துகின்றன. அத்தகைய 11 நிலையங்கள், அணைக்கட்டுகள், பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனத்துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெள்ளம் மற்றும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் சேதங்களின் போது செய்திகளைப்

பரிமாறிக் கொள்ள அமைக்கப்பட்டிருக்கின்றன. 4 உயர் அலை இடம் பெயர்த்து எடுத்துச் செல்லத்தக்க கருவிகள், புயல் போன்ற வானிலைக் கோளாறுகள் ஏற்படும் போது பயன்படுத்துவதற்கெனத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

## மிக உயர் அலை பிணைப்புக் கட்டுப்பாட்டு அறைகள்

சென்னை நகர், மாவட்டத் தலைமையகங்கள், மற்றும் சில முக்கிய நகரங்களில் ரோந்து வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றில் வானொலிக் கருவிகள் இணைக்கப்பட்டு மிக உயர் அலைகள் மூலம் மத்தியக் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

## காவல் நிலையங்களில் மிக உயர் அலை பிணைப்புக் கருவிகள்

இந்திய அரசின் உதவியாலும் மாநில அரசின் பொருளுதவியாலும் 1971 முதல் 1975 வரை 60 முதல் 75 விழுக்காடு வரை காவல் நிலையங்களில் ''டூசி பிளக்ஸ்'' அமைப்புப்படி முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்ட மீள் பரப்புக் கருவிகள் மூலம், மிக உயர் அலை வானொலி தொடர்புக் கருவிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றின்



மூலம் மாவட்டத்திலுள்ள எந்தவொரு காவல் நிலைய மானது மற்ற காவல் நிலையகங்ளுடன் தொடர்பு கொள்ள முடியும். இவ்வாண்டு நூறு சதவீத காவல் நிலையங்களுக்குத் தொடர்பினைப் பெறத் திட்டங்கள் தீட்டப்பட்டு உள்ளன. இன்று மொத்தமுள்ள 895 காவல் நிலையங்களில் 816 காவல் நிலையங்கள் இத்தகைய வானொலித் தொடர்புக் கருவிகளால் இணைக்கப்பட்டுள்ளன.

## மாநிலத் தலைமையகத்திலிருந்து மாவட்டத் தலைமையகங்களோடும், மாவட்டங்களுக்குள்ளும் மிக உயர் அலை மற்றும் நுண்ணலைக்கருவிகளால் தொடர்புகள்.

சென்னை முதல் மதுரை வரையுள்ள 500 கி.மீ. தூரத்தை, 170 மீட்டரிலிருந்து 2,300 மீ. வரை உயரமுள்ள குன்று நிலையங்களில் அமைக்கப்பட்ட 4 மீள் பரப்புக் கருவிகளைப் பயன்படுத்தி ஒரு வழி மிக உயர்அலை தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுளளது. 545.5 கி.மீ. உள்ள நுண்ணலை நெடுந்தொலை பேசித் தொடர்பின் மூலம் தென் பிராந்தியத்தில் முக்கிய நகரமான மதுரையை மாநிலத் தலைமையகமான சென்னையுடன் இணைக்க முடிகிறது. பல்வேறு மாவட்டத் தலைமையகங்கள், பிரதான நெடுந்தொலை பேசி நுண்ணலைக் கருவியுடன் ஒன்று அல்லது இரண்டு மிக உயர்அலை வானொலித் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளன. அதன் நுண்ணிய பிரிவுகள் சுமார் 1700 கி.மீ. நீளத்தை இணைக்கின்றன.


## ஆராய்ச்சியும் முன்னேற்றமும்

எந்தவொரு பொது நிறுவனத் தொழிற்சாலையிலும், இதுகாறும் நுண்ணலைக் கருவி மற்றும் மிக உயர்ந்த அலைக் கருவி ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளும் வகையில் மீள் பரப்புக் கருவியும் தொலை தூர மிக உயர் அலைக்கருவி இணைப்புக் கருவியும் உற்பத்தி செய்யப்படவில்லை. ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றப்பிரிவில், எல்லா துணை அமைப்புகளும் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுகின்றன. அந்தப் பிரிவுகளில் இறக்குமதியான கருவிகளுக்கும் அதன் உதிரி பாகங்களுக்குப் பல மாற்றுக் கருவிகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கண்ட பிரிவின் சாதனைகளால் கடந்த ஆண்டுகளில் அரசுக்கு ஏற்படும் செலவினத்தில் 14.52லட்சம் மீதம் ஏற்பட்டுள்ளன.

## யூ.எச்.எப். திட்டம்


10 ஆண்டுகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ், 120 இலட்ச ரூபாய் செலவில் யூ.எச்.எப். பலதரப்பட்ட தொடர் இணைப்புக் கருவி அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அவை எல்லா மாவட்டத் தலைமையகங்களிலுள்ள கருவிகளைத் தற்போதுள்ள நுண்ணலை மீள் பரப்புக் கருவிகளுடன் இணைக்கும்.

நாடு காப்போருக்கு நல்வகையில் பாதுகாப்பு.



# தமிழகக் காவல்துறை

அமைப்பு






'விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து'
திருக்குறள் (776)

'மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே'
(புறம் - 165)

பண்டைத் தமிழகத்தில் சிறப்பாகப் போரிட்டு வீர மரணம் அடையும் வீரனுக்கு நடுகல் நட்டு, அவன் புகழ் பொறித்து, வழிபாடு செய்வது வழக்கமாக இருந்து வந்தது.

முக்கிய நகரங்களின் காவல்துறை எண்ணிக்கை, கீழே தரப்பட்டுள்ளது:

| நகரம் | காவல்துறையின் எண்ணிக்கை<br>1978-ல் உள்ளவாறு |
|---|---|
| டில்லி | 22,216 |
| பம்பாய் | 21,864 |
| கல்கத்தா | 20,312 |
| ஹைதராபாத் | 6,927 |
| பெங்களூர் | 6,914 |
| சென்னை | 7,509 (1982-ல் உள்ளவாறு) |
| அகமதாபாத் | 6,221 |
| கான்பூர் | 6,027 |

# காவல் பயிற்சி

காவல் பயிற்சி நிர்வாகத்தின் தலைவராக காவல்துறை தலைவர் விளங்குகிறார். தாலூகாக் காவல் பிரிவின் அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் காவல்துறைத் துணைத் தலைவர் (பயிற்சி) அவர்களின் மேற்பார்வையில் பயிற்சியளிக்கப்படுகிறது. ஆயுதப்படைக் காவல்துறைத் துணைத் தலைவர் மேற்பார்வையில் ஆயுதப்படை அதிகாரிகளும் காவலர்களும் பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள பயிற்சி நிலையங்களின் தலைமையகங்களையும், அலுவல்களையும் மேற்பார்வையிடுகின்றனர். பயிற்சியளிக்கும் அதிகாரிகள் தமிழ்நாடு காவல்துறையிலிருந்து தேர்ந்தெருக்கப்பட்ட சிறந்த தேர்ச்சியுள்ளவர்கள்.

சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் காவல் உதவி-கண்காணிப்பாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்குப்

தமிழகத்தில், மொத்தம் 105 உட்கோட்டங்களும், 332 காவல்துறை வட்டங்களும், 894 சட்டம் ஒழுங்குக் காவல் நிலையங்களும், 107 குற்றப் பிரிவு நிலையங்களும், 70 போக்குவரத்துக் காவல் நிலையங்களும், 191 புறக் காவல் நிலையங்களும் இயங்கி வருகின்றன.




பயிற்சியளிக்கப்படுகிறது.

(அ) துணைக் கண்காணிப்பாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி —ஓர் ஆண்டு

(ஆ) உதவிக் கண்காணிப்பாளர்களுக்குத் தெளிவுப் பயிற்சி —மூன்று ஆண்டுகள்

(இ) நேரடித் தேர்வு பெற்ற உதவி ஆய்வாளர்களுக்கு அடிப் படைப்பயிற்சி—ஓர் ஆண்டு.

(ஈ) உதவி ஆய்வாளர்களுக்கு மீள் பயிற்சி-ஆறு வாரங்கள்.

(உ) உதவி ஆய்வாளர்கள், துணை உதவி ஆய்வாளர்கள் பட்டியலில் உள்ள தலைமைக் காவலர்களுக்குப் பயிற்சி —ஒன்பது வாரங்கள்

(ஊ) பெண் உதவி ஆய்வாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி —ஓர் ஆண்டு.

காவல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முறையை மூன்று துறைகள் மூலம் நடத்துவதற்குத் திட்டம் ஒன்று அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:-

(அ) சட்டப் பயிற்சித்துறை

(ஆ) காவல் அறிவியல்துறை

(இ) சமூக அறிவியல்துறை

அருங்காட்சியகம் ஒன்று பயிற்சிக்கூடத்தில் உள்ளது. அதில் துப்பாக்கிகள், நாட்டு வெடிகுண்டுகள், கொள்ளைக் காரர்கள், கொலையாளிகள் ஆகியவர்கள் கையாண்ட ஆயுதங்கள் மற்றும் பல நூற்றாண்டுகளாகப் பிரசித்தி பெற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட கள்ள நோட்டுகள், அதற்கான பொருட்கள், பொய்க் கையெழுத்து ஆவணங்கள், நிழற்படங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## வேலூர்-கோவை நகர காவல் பயிற்சிப் பள்ளி

ஒவ்வொரு பள்ளியும் 600 இரண்டாம் நிலை காவலர்களைப் பயிற்றுவிக்கும் தகுதி வாய்ந்தது. தமிழ்நாடு காவல் குழுவின் பரிந்துரைப்படி 1972ல் கோவைப் பயிற்சிப் பள்ளியில் 1000 முதல்நிலைக் காவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அதற்குப் பிறகு அத்தகைய காவலர்கள் சேர்க்கப்படுவது நிறுத்தப்பட்டது.

இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சிக் காலம் 6 மாதங்களாகும். இப்பயிற்சிக்கு வெவ்வேறு மாவட்டங்களிலிருந்தும் புதியவர்கள் தேர்ந் தடுத்து அனுப்பப்படுகின்றனர். பயிற்சிப் பள்ளிகளிலிருந்து ஒவ்வொரு மாதமும் 100 முதல் 200 பேர் பயிற்சி முடித்து மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.




காவல் துறையினருக்குப் பயிற்சி வகுப்பு.



காவல் துறையினருக்கு 'உடற்பயிற்சி

காவல் புதியோர் பள்ளிக்கு ஆயுதப்படைத் துணைக் கண்காணிப்பாளர் தகுதியில் ஒருவர் முதல்வராவார். உள்ளிடப்பயிற்சிக்கு ஆய்வாளர் தகுதியில் தலைமைச் சட்டப் பயிற்சியினராகவும், உதவி ஆய்வாளர்கள் தகுதியில் உதவி சட்டப் பயிற்றுனர்களும் உள்ளார்கள். வெளியிடப்பயிற்சிக்குச் சேமநலப்படை ஆய்வாளர் மற்றும் அவில்தார்கள் தலைமையில் உதவி கவாத்துப் பயிற்றுனர்களும் உள்ளார்கள். அங்குள்ள பயிற்றுனர்களில் 50 முதல் 60 சதவீதம் பேருக்கு, வாடகையில்லாத தங்கும் இடவசதிகள் உள்ளன. பள்ளி முதல்வர்க்கும் அத்தகைய வசதிகள் உண்டு.

## அலுவலில் உள்ளோர்க்கு மீள் பயிற்சிக் கூடம்

• அத்தகைய பயிற்சிக் கூடங்கள் மொத்தம் எட்டு உள்ளன. அவற்றில் இரண்டு சென்னை நகரிலும், பிராந்தியத் தலைமையகங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றுமாக உள்ளன. ஒவ்வொரு பயிற்சிக் கூடமும் ஒரு துணைக் கண்காணிப்பாளரின் பொறுப்பில் உள்ளது. அவர் மாவட்டத் தலைமையகங்களுக்குச் சென்று கீழ்க் கண்ட பயிற்சிகளை நடத்துவார்கள்:

(அ) தலைமைக் காவலர், காவலர்களுக்கு-6 நாட்கள் பயிற்சி

(ஆ) உதவி ஆய்வாளர்கள் -துணை உதவி ஆய்வாளர்கள்-3 நாட்கள் பயிற்சி

## சஞ்சிகைகள்

தமிழ்நாடு காவல் பயிற்சிக் கல்லூரி துணைத்தலைவர் அலுவலகத்திலிருந்து காலாண்டுக்கு ஒரு முறை ''தமிழ்நாடு காவலர்'' என்ற தலைப்பில் ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் இரு சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. பதிப்பாசிரியர் என்ற முறையில் காவல் பயிற்சிக் கல்லூரி துணைத் தலைவர், காவலர் மற்றும் அதிகாரிகளிடமிருந்து கட்டுரைகள் சேகரித்து இச்சஞ்சிகையைப் பதிப்பிக்கின்றார். ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் இதன் நகல் ஒன்று அனுப்பப்படுவதோடு ஏனைய அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கும் விற்கப்படுகிறது.

# காவல் துறை – பொதுமக்கள் விளையாட்டுப் போட்டிகள்

1977-ஆம் ஆண்டு காவல்துறை பொதுமக்கள் நல்லுறவை வலுப்படுத்துவதில் புதியதொரு திருப்பம் கண்டது. பொதுமக்கள் நல்லுறவுக்கு விளையாட்டுப் போட்டிகள் சிறந்ததொரு தொடர்பு முறையாகும். காவல் துறையினர்களின் உயர்வுக்கும், பொதுமக்கள் முன்பு தமது நற்திறனை வெளியிடுவதற்கும் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தல் மூலம், சீரிய தொண்டாற்ற முடியும். இத்திட்டமானது தமிழகக் காவல்துறையினரால் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் துவக்கப்பட்டது. எல்லா அதிகாரிகளும், காவலர்களும் பொதுமக்களுடன் கலந்து விளையாட்டுப் போட்டிகளை உருவாக்க ஊக்குவிக்கப்பட்டனர். ஆரம்பத்தில் இப்போட்டிகளை நடத்த ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டது. அன்று இரண்டாம் சனிக்கிழமைப் போட்டி மலர்ந்தது. இன்று பல்வேறு விளையாட்டுப் போட்டிகளாக முழு நேரத் திட்டமாக வலுப்பெற்றுள்ளது.

**போட்டிகளின் நோக்கங்கள்**

* காவல்துறை – பொதுமக்கள் நல்லுறவை வலுப்படுத்தல்.
* மாநிலமனைத்தும், குறிப்பாகக் கிராமப்புறங்களில் விளையாட்டுக்களை மேம்பாடு அடையச் செய்தல்.
* கிராமப்புறத்து மக்களின் திறமையை இப்போட்டிகளின் மூலமாகக் கணித்துப் பின்னால் காவல் துறைக்குத் தேர்ந்தெடுத்தல்.
* சமுதாயத்தில் தொழிலாளர்கள், மாணவர்கள், குடிசைவாழ் மக்கள், ஊனமுற்றோர் ஆகியோர் இடையே விளையாட்டுகளைத் துவக்கி அதில் அவர்கள் பங்கு கொள்வதற்கு ஆர்வம் உண்டாக்குதல்.
* காவல்துறையில் உள்ளோர்க்கும், அதில் இல்லாதவர்களுக்கும் போட்டி அனுபவத்தை உருவாக்குதல்.
* காவல் துறையிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்கள் பயிற்றுனர்கள் ஆகியோரின் சேவையை நல்குதல்.

## இத்திட்டத்தின் பயன்கள்

* அடிக்கடி இப்போட்டிகள் வைப்பதன் மூலம் விளை யாட்டுப் போட்டிகளுக்கென ஒரு பிரத்தியேகமான சிறந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. வெற்றி வீரர்கள் பலர் காவல்துறையில் சேர்ந்து இருக்கின்ற னர். கிராமப்புறங்களிலிருந்து பல விளையாட்டு வீரர்கள் காவல்துறையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
* கூடைப் பந்து, கைப்பந்து, கபடி ஆகிய விளை யாட்டுகளில் காவல்துறை அணியினர், சிறந்த முன் னேற்றம் காட்டியுள்ளனர்.
* பள்ளிகளில் அவ்வாறு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் அங்கேயுள்ள விளையாட்டின் தரத்தை உயர்த்தியிருக்கிறது எனப் பள்ளி அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.
* பொதுமக்கள் நல்லுறவைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலைகளில் நெய்வேலி நகர்ப்புறத்திலும், உழவர்களைப் பொறுத்தமட்டில், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை ஆகியவற்றிலும் இத்துறையில் சீரிய முன்னேற்றம் கண்டுள்ளது வெள்ளிடைமலை.
* காவல்துறை பொதுமக்கள் விளையாட்டுப் போட்டி சமுதாயப் பொறுப்புணர்ச்சியை மையமாகக் கொண்டு இயங்குவது. அதை நிர்ப்பந்தமற்ற சூழ லில் நல்ல வகையில் வளர்க்கலாம்.

**விளையாட்டுப் போட்டியில் வென்றவருக்குப் பரிசு.**



அன்றாட அலுவல்களில் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் காவல் நிலைய அதிகாரிகளும், காவலர்களும், இதர தனிப்பிரிவுகளாக, குற்றப் புலனாய்வுத் துறை, மது விலக்கு போன்ற பிரிவுகளில் இருந்த காவலர்களும் 1948-ல் 14,677 பேராக இருந்தனர். ஆனால், இந்த எண்ணிக்கை 1980-ஆம் ஆண்டில், 32,520 ஆக உயர்ந்துள்ளது. 1948-ஆம் ஆண்டில், உள்ளூர் காவலர்க்கு அபாயகரமான, சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகளில் உறுதுணை பயக்கும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த காவலரின் எண்ணிக்கை 1,139 ஆக இருந்தது. அதுவே, 1980-ஆம் ஆண்டில் 4,345 ஆக உயர்ந்தது. மேலும் இரண்டு அணிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக, 1981-ல் இந்த எண்ணிக்கை 6318ஆகப் பரிணமித்தது. 1948-ஆம் ஆண்டில் 3,275 பேரைக் கொண்டிருந்த சென்னை நகர காவல்படை, இன்று 7,509 பேரைக் கொண்டு திகழ்கின்றது.

# முதல்வர் வழங்கியுள்ள நல்வாழ்வுத் திட்டங்கள்

*இடர்ப்படி:— காவலர் நிலை இரண்டில் இருந்து, ஆய்வாளர்கள் வரை மாதம் ஒன்றுக்கு இடர்ப்படி ரூபாய் **20** வீதமும், துணைக்கண்காணிப்பாளருக்கு மாதம் ரூ. **30** வீதமும் வழங்கப் பெறுகிறது.*

*துணிப்படி :— குற்றப் புலனாய்வுத்துறை மாவட்டத் தனிப்பிரிவு, மற்றும் இரயில்வேயைச் சேர்ந்த காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் துணிப்படி ரூ. **1.87**ல் இருந்து ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.*

*வீட்டு வாடகைப்படி :— வாடகையின்றிக் குடியிருப்புக்கள் வழங்கப்படாத காவல்துறைப் பணியாளர்களுக்கு, சென்னை மாநகரம் உட்பட எல்லா மாவட்டத் தலைநகர்களிலும், வாடகைப்படி ரூ. **50** ஆகவும், மாவட்டத் தலைமையகம் இல்லாத ஏனைய இடத்தில் உள்ளோர்க்கு ரூ. **30** ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.*

தமிழ்நாடு சிறப்புக் காவல்படையினரை மாவட்ட சேமப்படைக்கு மாற்றுதல் :— தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 10 ஆண்டுகள் பணிபுரிந்து மாவட்டச் சேமப் படைக்கு மாறுதல் ஆக விருப்பம் தெரிவிப்போர்க்கு மாற்று தல் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் துறையில் சிறப்புப் பிரிவினர்க்குச் சிறப்பு ஊதியம் :— குற்றப் புலனாய்வுத் துறை சிறப்புப் பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கு, 1-5-81 முதல் ரூ. 10 முதல், ரூ. 25 வரை சிறப்பு ஊதியம் வழங்க அரசு ஆணை யிட்டுள்ளது.

சீருடை பராமரிப்புப்படி :— காவல்துறையில் உள்ள எல்லாக் காவலர்களுக்கும், இளநிலை உதவியாளர்களுக்கும், சீருடை பராமரிப்புப்படி ரூ. 10-ல் இருந்து, ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டது. இந்தியக் காவல் பணியைச் சேராத காவல்துறைக் கண்காணிப்பாளருக்கும், கூடுதல் கண்காணிப் பாளருக்கும், துணைக் கண்காணிப்பாளருக்கும் மாதம் ரூ. 30 வீதமும், மற்றும் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர் களுக்கு ரூ. 20 வீதமும் சீருடை பராமரிப்புப்படி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

சமையற்காரரின் பணியை ஒழுங்குபடுத்தல் :—சிறப்புக் காவல் படையைச் சார்ந்த சமையற்காரர்களுடைய பணியை




சென்னையில்
புதிதாகத் துவங்கப்படவிருக்கும்
நடமாடும் காவல் நிலையம்




போக்குவரத்துச் சீரமைப்பில் குதிரைப் படை

*26-9-81* முதல் வரையறை செய்து, அவர்களுக்கும் அடிப் படை அரசு ஊழியர்களுக்குரிய எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஏவலர் முறை ஒழிப்பு :— நீண்ட நெடுங்காலமாக, இத் துறையில் காவலர்களை அதிகாரிகளின் இல்லங்களில் ஏவலர் களாகப் பணியமர்த்தி வந்த முறை 15-8-80 முதல் ஒழிக்கப் பட்டு விட்டது. அவர்களுக்குப் பதிலாக, அடிப்படை ஊழி யர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் இராணுவ வீரர்கள் :— சென்னை நகரில், குற்றங்களைத் தடுக்கும் ரோந்துப் பணியில் 350 முன்னாள் இராணுவ வீரர்கள் அமர்த்தப்பட்டனர்.

பதவிகளும், பதவி உயர்வுகளும் :— 1982-83 நிதி ஆண்டில், காவல்துறையில் இருந்த 245 துணை ஆய் வாளர் பதவிகளை ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தியும், 825 இளம் உதவி ஆய்வாளர்கள் பதவிகளை உதவி ஆய் வாளர் பதவிகளாக உயர்த்தியும் அரசு ஆணை பிறப்பித் துள்ளது. காவல்துறை அமைச்சுப் பணியாளர்கள் வேலைப் பளுவைக் குறைக்க 1981-82-ல் 90 புதிய பதவிகள் தோற்று விக்கப்பட்டன.

குதிரைப்படை :— சென்னையில் உள்ளது போலவே மதுரை, திருச்சி ஆகிய நகரங்களிலும் குதிரைப்படை அமைக்க அரசு அனுமதித்துள்ளது

பரிசு :—குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில், காவல்துறையினர்க்கு உதவுகின்ற பொதுமக்களுக்கு ரூபாய் 1000 முதல் ரூ. 5000 வரை பரிசளிக்க வகை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை ரோந்து :—நெடுஞ்சாலைகளில், வழிப் பறிக் கொள்ளை ஆகியவற்றைத் தடுப்பதற்கு, நெடுஞ் சாலை ரோந்துக்குழு சென்னை-வேலூர், சென்னை நெல் லூர், சென்னை-விழுப்புரம் ஆகிய வழித்தடங்களில் பணி யாற்றக் கூடுதல் பணியாளர்கள், தேவையான வாகனங்கள் ஆகியவற்றிற்கு அரசு அனுமதித்துள்ளது.

மதுவிலக்கு : மாவட்டங்களில், மதுவிலக்குப் பிரிவுப் படைகளின் களப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதி கரிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆய்வாளர், ஒரு துணை ஆய்வாளர், நான்கு உதவி ஆய்வாளர்கள், நான்கு இளநிலை உதவி ஆய்வாளர்கள், நான்கு தலைமைக் காவ லர்கள், இரண்டு முதனிலைக் காவலர்கள், 24 காவலர்கள் முதலியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக ஒவ் வொரு மாவட்டத்திலும் ஒரு ஜீப்பும், ஒரு பிக் அப் வேனும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வாகன வசதிகள் : காவல் நிலையங்களில் பணிபுரியப் பெண் உதவி ஆய்வாளர்களுக்கு 50 மொபெட் மோட்டார் சைக்கிள்களும், 200 மோட்டார் சைக்கிள்களும் காவல் நிலையங்களுக்கு வழங்க அரசு அனுமதித்துள்ளது.

நடமாடும் காவல் நிலையங்கள் :—சென்னை நகரில் நடமாடும் காவல் நிலையங்களிலும் நடமாடும் நீதிமன்றங் களையும் நிறுவிட அரசு ஆணையிட்டுள்ளது. நடமாடும் காவல் நிலையங்களாக, ஐந்து வாகனங்கள் செயல்படும். இவை, நகரின் புறத்தே, வெகுதூரத்திலுள்ள இடங்களுக்குச் சென்று, பொது மக்களின் குறைகேட்டு நிறை செய்யும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு காவலர் உதவிநிதி

**1981**-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட 'கார் உதவி நிதி', 1944-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட 'காசான் காவல் உதவி நிதி' ஆகியவற்றை ஒருங்கிணைத்து 1957ஆம் ஆண்டில்

தமிழக அரசு காவல்துறை நலச்சங்கமாக தமிழ்நாடு காவலர் உதவி நிதியைத் தோற்றுவித்தது. இது காவல்துறையில் உள்ள அரசிதழ் பதிவுறாத, அலுவலர் அனைவரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவுகிறது.

அரசிதழ் பதிவு பெறாத, காவல்துறையினர் தாமாகவே விரும்பி உறுப்பினர்களாகச் சேர்ந்ததற்கான ஆண்டுச் சந்தா, மற்றும் அரசிதழ் பதிவு பெற்ற காவல்துறை அதிகாரிகளின் நன்கொடைகளும் ஆண்டுக்கு இருமுறை, சனவரியிலும் ஜூலையிலும் பெறப்படுகிறது. இது ஏறக்குறைய 95,000 ரூபாயாகும். தமிழகஅரசு ஆண்டுதோறும் மான்யமாக 1,50,000 ரூபாய் இந்நிதிக்கென வழங்குகிறது. மேலும், இந்நிதியின் முதலீடுகள் மூலம் ஆண்டொன்றிற்குச் சுமார் 90,000 ரூபாய் வட்டியும் கிடைக்கிறது.

மாநில அளவில் மத்திய குழுவும் மாவட்ட நிலையில் மாவட்டக் குழுவும் இந்நிதியினை நிர்வகிக்கின்றன. காவல் துறை இயக்குநரே இந்நிதியின் தலைவர். மூன்று மாதத்திற்கு ஒரு முறையேனும் மத்திய குழு கூடுகிறது. சராசரியாக, ஆண்டொன்றிற்கு ஐந்து முறை இக்குழு கூடி, அந்தந்த மாவட்டக் குழுக்களின் பரிந்துரைகளுடன் நிதியும் நிவாரணமும் வேண்டி பல்வேறு பிரிவு அதிகாரிகளிடமிருந்து வந்துள்ள விண்ணப்பங்களையும் பரிசீலித்து நிதியளிக்க ஆணையிடுகிறது.

**1980**-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட, மக்கள் தொகைக் கணக்கின்படி, தமிழகத்தில் நான்கு கோடியே, அறுபத்தொன்பது இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். 1981-ஆம் ஆண்டில் உள்ள காவல்துறையினரின் எண்ணிக்கையினை வைத்துப் பார்க்கும்போது, 888 மக்களுக்கு ஒரு காவலர் வீதம், இத்துறை செயல்படுகிறது. நகரங்களின் மக்கட்தொகையை ஒப்பிடும்போது, கல்கத்தாவில் 268 மக்களுக்கு ஒரு காவலர் வீதமும், தலைநகரான டில்லியில் 342 மக்களுக்கு ஒரு காவலர் வீதமும், ஹைதராபாத் நகரில் 384 மக்களுக்கு ஒரு காவலர் வீதமும், பம்பாய் நகரில் 399 மக்களுக்கு ஒரு காவலர் வீதமும் பெங்களூர் நகரில், 550 மக்களுக்கு ஒரு காவலர் வீதமும், சென்னை நகரில் 459 மக்களுக்கு ஒரு காவலர் வீதமும், காவல்துறையின் எண்ணிக்கை அமைந்துள்ளது. சென்னை மாநகரக் காவல் துறை, மற்றப் பெருநகர்களை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இன்னமும் அதிகமாகப் பணியாற்றுவது புலனாகிறது.

பின்வரும் நோக்கங்களுக்காகவே இந்நிதி பயன்படுத்தப் படுகிறது :

(1) செய்தித் தாள் மற்றும் சஞ்சிகைகள் வாங்க, காவல்துறை குடியிருப்புகளில் உள்ள வாசகசாலைகளுக்கு ஒரு வாசகசாலைக்கு ஆண்டொன்றிற்கு இருநூறு ரூபாய் வீதம் நிதியுதவி.

(2) பொறியியல் மற்றும் பட்டப் படிப்புகளுக்கு, அமைச்சுப் பணியாளர் உள்ளிட்ட காவல்துறையின் அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் மற்றும் காவலர்களின் பிள்ளைகளுக்கு உபகார ஊதியங்களுக்கு நிதியுதவி.

(3) உறுப்பினர்களின் வாழ்க்கைத் துணைவியருக்கு இருநூறு ரூபாய் முதல் ஆயிரத்து இருநூறு ரூபாய் வரை மொத்தத் தொகை குடும்ப நிவாரணமாக அளிக்கப்படு கிறது. மேலும் சிறப்பு நிவாரணமாக இரண்டாயிரம் ரூபாய் அளிக்கப்படுகிறது.

(4) கொடிய நோய்களினால் (குறிப்பாகக் காச நோய், தொழு நோய் ஆகியன) மற்றும் கடுமையான காயங்களினால் ஏற்பட்ட மருத்துவச் செலவினங்களைத் தங்கள் வருவாயினைக் கொண்டு சமாளிக்க இயலாத குறிப் பிட்ட சிலருக்குப் பணவுதவி.

(5) உறுப்பினரின் வருவாயில் வாழ்ந்து வரும் அவரின் குடும்பத்தார் எவரேனும் இறக்க நேரிட்டால், அந்திமச் சடங்குகளுக்குப் பணவுதவி.

(6) உறுப்பினர்களின் பிள்ளைகளின் பொழுதுபோக் கிற்கும், விளையாட்டுத் திடல் அமைக்கவும் நிதியுதவி.

(7) மத்தியச் செயற்குழுவின் உசிதப்படி, உறுப் பினர்களுக்குப் பொதுவாகப் பயன்தரும் ஏதேனும் ஏற்ற காரணங்களுக்காக நிதியுதவி.

(8) காசநோயால் பீடிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மருத்துவ மனைகளில் தனித் தங்குமிடம் அமைக்க நிதியுதவி.

(9) உறுப்பினர்களின் வீடுகளோ, குடிசைகளோ தீ விபத்திற்குள்ளாகிச் சேதம் நேர்ந்தால், அதனை ஈடுசெய்ய ஐந்நூறு ரூபாய் வரை உறுப்பினர் எந்தப் பிரிவினராக இருந் தாலும் அளிக்கப்படுகிறது.

(10) உறுப்பினர்களுக்கு நலம் பயக்கும் வகையில் காவலர் நலச் சங்கங்கள் அமைக்கவும், திரைப்படக் கருவிகள்

வாங்கவும், கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைகள் அமைக்கவும் எளிய தவணை முறையின் மூலம் திருப்பித் தரும் வகையில் வட்டியில்லாக் கடனுதவி அளிக்கப்படுகிறது.

*(11)* இவை தவிர, தமிழ்நாடு காவலர் உதவி நிதிக்குக் கிடைக்கும் ஆண்டு வருவாயில் பத்து சதவீதம், ஆண்டு தோறும் தமிழ்நாடு காவலர் குடும்பநலச் சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் சராசரி இருபத்தையாயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து செயல்படும் இத்திட்டத்தின் சிறப்பியல்புகளைச் சொல்லவும் வேண்டுமோ!

# நல்வாழ்வுப் பணிகள்

மாநிலக் காவல்துறையின் குடும்பத்தினருக்கென ஆரம்பித்துள்ள முக்கிய நல்வாழ்வுப் பணிகள் பின்வருமாறு:

காவலர்க்குத் தேவையான பல்வேறு சீருடைகள் காவல் துறையினரின் குடும்பங்கள் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் உருவாக்கப்படுகின்றன. ஆவடி தமிழ் நாடு சிறப்புக்



காவல் படைக் குடும்பத்தினர் உள்ள கூட்டுறவுச் சங்கம். செங்கை மாவட்டக் காவல் துறையினரின் குடும்பங்கள் அடங்கிய கூட்டுறவுச் சங்கம் ஆகியவை காவலருக்குத்தேவையான காலுறை, மேலுறை, பட்டிகள் 'கிட்' பைகள், கொசு வலைகள், பணிச்சட்டைகள் ஆகியவற்றைத்தயாரிக்கின்றன. 1981-82-ல் இந்த இரு கூட்டுறவுச் சங்கங்களும் 2 லட்சம் ரூபாய் லாபமாக ஈட்டியுள்ளன. திருச்சியிலுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் குடும்பத்தினரின் கூட்டுறவுச் சங்கம், காவலருக்குத் தேவையான பயன்களையும், கோவை, சேலம், மாவட்டங்களில் உள்ள சேமநலப்படைக் குடும்பத்தினரின் கூட்டுறவுச் சங்கம், விரிப்புகளையும் உற்பத்தி செய்கின்றன. பல்வேறு மாவட்டங்களில் 25 தையல் பிரிவுகள் 475 தையல் இயந்திரங்களை வைத்துக் காவலர்க்குத் தேவையான சீருடைகளைத் தைத்துத் தருகின்றன. அச்சங்கங்களின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் மாதம் சராசரியாக ரூ. 100 வருமானமும் கிடைக்கிறது.

மாவட்டத்திலுள்ள எல்லாக் காவலர் குடியிருப்புகளிலும், 16 மி.மீ. (அ) 35 மி.மீ. படக்காட்சி இயக்குக் கருவிகள் மூலம் தவறாது படக் காட்சிகள் காட்டப்படுகின்றன. காவலருக்கும், அவர்தம் குடும்பத்தின் வசதிக்கென டில்லி, ஆவடி, சென்னை போன்ற இடங்களில் தொலைக்காட்சிக் கருவிகளும் நிறுவப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுக் காவலரின் ஓய்வுக் கால நலனுக்கென இந்திய மத்திய வங்கி உருவாக்கிய திட்டப்படி காவலர் ஒருவர் மாதம் ரூ. 50 வீதம் 5 ஆண்டுகளுக்குச் செலுத்தினால், 26 ஆண்டுகள் கழித்து ரூ. 50,822 பெறுகிறார். இத்திட்டத்தில் இதுகாறும் சுமார் 3,000 காவலர்கள் சேர்ந்துள்ளனர்.

தமிழ்நாட்டுக் காவலர் சேமநலநிதியானது (அ) காவலர் குடியிருப்புகளில் உள்ள வாசக சாலைகளுக்கு நிதி உதவி செய்யவும் (ஆ) காவலரின் குழந்தைகட்கு உயர்கல்வி பெற கல்விச் சலுகை நல்கவும் (இ) பணியில் உயிர் துறந்த காவலர்களின் துணைவிகள், சார்ந்தோர் ஆகியோருக்குப் பொருள் உதவி வழங்கவும் (ஈ) நீண்ட காலமாகப் பிணிவாய்ப் பட்டோருக்கு மருத்துவ வசதி பெற உதவவும் பயன்படுத்தப்படுகிறது.

# தமிழ்நாடு காவலர் குடும்ப நலச் சங்கம்

காவல்துறையினரின் குடும்பங்களுக்கு நலம் பயக்கும் நோக்கோடு 'தமிழ்நாடு காவல்துறைக் குடும்ப நலச்சங்கம்' இயங்கி வருகிறது. இச்சங்கத்திற்குக் காவல்துறை இயக்குநர் தலைவர். துணைத்தலைவர்களாகச் சென்னை மாநகரில் நகர ஆணையரும், மாவட்டங்களில் அந்தந்தச் சரகக் காவல் துறைத் துணைத் தலைவர்களும், பொறுப்பேற்றுள்ளனர்.

ஆவடியிலுள்ள படைக்கலன் மையத்தின் தளவாய், கௌரவச் செயலாளராகவும், குற்றம் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரிவு காவல்துறை உதவித் தலைவர் கௌரவப் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றனர். அமைச்சுப் பணியாளர் உட்பட அரசிதழ் பதிவு பெறாத காவல்துறையினரின் குடும்பங்கள் தாங்களாகவே, நலம் பயக்கும் தொழில்களைப் புரிய ஊக்குவித்து. ஒருங்கிணைப்பதே இச் சங்கத்தின் முழுமுதற் குறிக்கோள்.


காவல்துறையினரின் குடும்பத்தினர் தங்கள் ஓய்வு நேரத்தைப் பயனுறக் கழிக்கவும், வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், மருத்துவம் மற்றும் கல்வி வசதிகளைப் பெறவும் உதவும் நோக்கோடு இச்சங்கம் செயல்படுகிறது.

தனிப்பட்டோரும், தனிப்பட்ட நிறுவனங்களும் தாராளமாக வழங்கி வரும் நிதியுதவியோடு, தமிழ்நாடு காவலர் உதவி நிதியின் மொத்த வருவாயில் பத்துச் சதவீதமும் இச்சங்கத்திற்கு நிதியாகக் கிடைக்கின்றது. எனவே, இதன் உறுப்பினர்களிடமிருந்து சந்தா எதுவும் வசூலிக்கப்படுவதில்லை.

இச்சங்கத்தின் நிதிநிலையைப் பெருக்கும் பொருட்டு, தமிழக அரசின் பரிசுச்சீட்டு குலுக்கல் ஒன்றில் கிடைக்கும் நிகர வருவாய் அனைத்தையும், இச்சங்கத்திற்கு அளிக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. மேலும், இச்சங்கத்தின் கிளைகளிலுள்ள தங்கள் மாவட்டக் காவல்துறையினரின் பாதுகாப்புச் சேவைகளின் மூலம் கிட்டிய பணத்தில் பத்து சதவீதத்தை அளிக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இது ஒரு கூட்டுறவு நிறுவனமல்ல. எனினும் பின் வரும் சிறு தொழில்கள் கூட்டுறவு முறையிலேயே நடத்தப் படுகின்றது

(1) பனியன் நெய்தல்
(2) காலுறை பின்னுதல்
(3) தையல் வேலை
(4) புத்தக பைண்டிங்
(5) தீப்பெட்டித் தொழிற்சாலை
(6) பால்பண்ணை
(7) கோழி வளர்ப்பு



(8) பாலிதின் பை செய்தல்
(9) தேனீர்த்தூள் பொட்டலம் தயாரித்தல்
(10) கூடை முடைதல்

காவலர் குடும்பத்தினர் ஓய்வு நேரத்தைப் பயனுறக் கழித்து பொருளீட்டப் பயன்படும் இச்சங்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

# சலுகை விலையில் இன்றியமையாப் பண்டங்கள்

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்ற முதுமொழிக் கொப்ப, காவலர்களின் இல்லத்தரசிகள் உள்ளங்குளிரும் வகையில் இன்றியமையாப் பண்டங்களைச் சலுகை விலையில் அளிக்கும் திட்டம், தமிழகக் காவல்துறையில் கொண்டு வரப்பட்டது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டத்தின் கீழ் காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள காவல்துறையினர் அனைவருக்கும் அரிசி, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையா உணவுப் பண்டங்கள் சலுகை விலையில் மாதந்தோறும் வழங்கப்படுகின்றன. மணமாகாதவர், மணமாகிப் பிள்ளைகள் பெற்றோர் என்ற வேறுபாட்டின் அடிப்படையில் ஒரு அலகு முதல் நான்கு அலகுகள் வரை இச்சலுகை விலைப் பண்டங்கள் அளிக்கப்படுகிறது.

காவல்துறையினர் தாங்கள் வைத்திருந்த பழைய உணவுப் பங்கீட்டு அட்டைகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டு இப்புதிய சலுகை விலை நீலநிற உணவுப் பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எந்த இடத்திற்கு மாற்றுதலில் சென்றாலும் இந்த அட்டைகளைக் காவலர்கள் பயன்படுத்தலாம். முன்னர் எந்த இடத்தில் உணவுப் பொருட்களைச் சலுகை விலையில் பெற்றார்களோ அந்த இடத்திலிருந்து இவர்களின் உணவுப் பங்கீட்டு அட்டைகள் மாற்றம் செய்யப்பட்டு, புதிய இடத்தில் தங்கு தடையின்றி உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

புதிதாக வந்து சேரும் காவலர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த இடத்திலேயே பங்கீட்டு அட்டைகள் வழங்கப் பெற்று உணவுப் பொருட்களும் அளிக்கப்படும். தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ளவர்கள் தங்கள் பங்கீட்டு அட்டைகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வரலாம். பங்கீட்டு அட்டைகள் காணாமற்போய் விட்டால் மாற்றுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படும்.



மலிவு விலையில் உணவுப் பொருள்

மாதமொருமுறைதான் உணவுப் பொருட்கள் வழங்கப் படும். அந்தந்தப் பிரிவுக் காவலர்களுக்குரிய உணவுப் பொருட்களை, அந்தந்தப் பிரிவு ஆய்வாளர்கள் மொத்தமாகப் பெற்றுத் தருகின்றனர். எந்தவொரு மாதத்திற்கான உணவுப் பொருட்களை அந்த மாதத்திற்குள் வாங்காமல் விட்டு விட்டால், அதை மீண்டும் வாங்க முடியாது.

இத்திட்டத்தினால், மாதந்தோறும் அறுபது ரூபாய் வரை காவலர்கள் பயன்பெறுகின்றனர். மேலும், இன்றியமையா உணவுப் பொருட்கள் அவர்கள் இல்லந்தேடி வருவதால், அதற்கென, அவர்களின் இல்லத்தரசிகள் தேடியலைய வேண்டியதில்லை. வயிறு நிறைந்தால் உவகை பெருகும்; உவகை பெருக ஊக்கம் பிறக்கும். ஊக்கம் மிகுந்தால் வேலைத் திறன் சிறக்கும். ஆதலால் இத்திட்டம் அமுத சுரபிக்கு ஒப்பாக விளங்கி, புதிய சரித்திரச் சாதனையொன்றைப் படைத்துள்ளது.

# காவல் துறையில்

# ஆளுக்கொரு வீடு!

**தமிழக அரசால், தற்போது பணியிலுள்ள காவலர்களுக்கும், மற்றும் ஓய்வு பெற்ற காவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மலிவு விலையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் நோக்கத்துடன், 'தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்' உருவாக்கப் பட்டது. இவ்வீடுகளுக்குரிய விலை, எளிய தவணைகள் வாயிலாக, மாதந்தோறும் பிடித்தம் செய்யப் பெறுகிறது.**

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் திட்டங் களுக்குத் தமிழக அரசும், 'அட்கோ' நிறுவனமும், பண உதவி செய்கின்றன. இத்திட்டத்தின் மூலம், பயனடைப வர்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளை, தங்கள் அலுவல் காரணமாகத் தாங்களால் குடியேற இயலா விடில் மற்றவர்க்கு வாடகைக்கு விட அனுமதிக்கப்படுகின்ற னர்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள, நாவல்பட்டு என்ற புற நகர்ப் பகுதியில், கன்னி முயற்சியாக 720 வீடுகள், இப் போது கட்டப் பெற்று வருகின்றன. இவ்வீடுகளுக்கான, அடிப்படைத் தேவைகளான வடிகால் வசதிகள், சாலைகள், வாகனங்கள் நிறுத்த இடம் அனைத்தும் வழங்கப் பெற் றுள்ளன. எரிபொருள்களுக்கென, எரிவாயு இயந்திர சாதன மும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிழல் தரும் மரங்கள், சாலை களின் இருமருங்கிலும் வளர்க்கப்படடுள்ளன. வீட்டிற்கு ஒரு தென்னை மரமும் உண்டு.


இக்கழகம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மேல்பாக்கத்திலும், கோவை மாவட்டத்திலுள்ள கணபதி யிலும், நெல்லை மாவட்டத்திலுள்ள திம்மராஜபுரத்திலும் மதுரை மாவட்டத்தில் உள்ள வடபழஞ்சியிலும், தஞ்சை, காரைக்குடி, நாமக்கல், உதகமண்டலம், சென்னைப்பெரு நகர்ப் பகுதி ஆகிய இடங்களிலும் தனது திட்டங்களை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது. காவல்துறையினரின் 'ஆளுக்கொரு வீடு' திட்டத்தினை நிறைவேற்றப் பல வரைவுகளும், திட்ட மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வரு கின்றன.

ஊண், உடை, உறைவிடம் மூன்றும் மனிதனின் அடிப்படைத் தேவைகள். காவலர்க்கு மலிவுவிலையில் உணவுப் பண்டங்கள் வழங்கப் பெறுகின்றன. சீருடைதனைப் பராமரிக்கவெனத் தனியே படி அளிக்கப்படுகிறது. அதுபோலவே உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யவென, நவீன வசதிகளுடன் காவலர் குடியிருப்புக்கள் கணிசமான அளவில் கட்டப்பெற்று உள்ளன. அதோடு மட்டுமல்லாமல், கட்டப்பட்டும் வருகின்றன.

காவலர் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 1980-81-ஆம் ஆண்டில் 72 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில், காவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 363.29 இலட்சங்களாகும்.

1981-82ஆம் ஆண்டில், மொத்தம் 292 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில், காவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 211.34 இலட்சங்களாகும். இந்த ஆண்டில், மேலும் 620 புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கும், கட்டுமானப் பணிகளுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை ரூ. 204 இலட்சங்களுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது.

மார்ச் 31, 1982 வரை கட்டி முடிக்கப்பட்ட, குடியிருப்புக்களில் மொத்த எண்ணிக்கை 22036. இந்தக் குடியிருப்புகளை, காவல்துறை அதிகாரிகளின் எண்ணிக்கையான 52,507-உடன் ஒப்பு நோக்குகையில், எட்டியிருக்கும் சாதனைக் குறியீடு 41.97 சதவீதமாகும் இது இந்தியச் சாதனை ஆகும்.



சென்னை எழும்பூர், புதுப்பேட்டை இராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தின் அருகே, இரண்டுகோடியே எண்பத்து மூன்று இலட்சம் ரூபாய் செலவில், 604 வீடுகள் சென்னை நகரக் காவலர்களுக்காகக் கட்டப்படத் திட்டமிடப்பட்டு, 23-8-82-ஆம் தேதியன்று, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால், அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது. இங்கு, 12 ஆய்வாளர்கள், 48 உதவி ஆய்வாளர்கள், 544 தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் குடியமர்த்தப் பெறுவர்.

# பெருநகர்கள்

**சென்**னைப் பெருநகர் :—சென்னை நகர எல்லையைப் பெருநகர் பரப்புக்கு விரிவுபடுத்தும்போது, தற்போது செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்தில் உள்ள (1) வில்லிவாக்கம், (2) இராஜமங்கலம், (3) திருவான்மியூர், (4) வேளச்சேரி, (5) மதுரவாயல், (6) விருகம்பாக்கம், (7) மாதவரம், (8) செயின்ட் தாமஸ் மௌன்ட், (9) மீனம்பாக்கம், (10) திருவொற்றியூர் முதலிய காவல் நிலையங்களின் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகள், சென்னை நகரக் காவல் ஆணையரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பெறும். இது காவல் ஆணையருக்கு உதவியாகச் செயல்பட, இணை ஆணையர் என ஒரு புதிய பதவியையும், இன்னமும் 850 காவலருக்கும் 150 ஓட்டுநர் காவலருக்கும் வேலை வாய்ப்பினையும் நல்கும்.

மதுரை-கோவை :—பத்து லட்சத்திற்குமேல் மக்கட்தொகை கொண்ட மதுரை, கோவை ஆகிய நகரங்களையும் பெருநகர்களாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்விரு நகர்களும் பெருநகர் அமைப்பாக மாறும்போது, இவ்விரு நகர்களுக்கும் தனித்தனியே காவல் ஆணையர்கள் நியமிக்கப் பெறுவர். இவர்களுக்கு உதவியாக துணை ஆணையர்களும், ஆயுதப்படைத் துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும் நியமிக்கப்படுவார்கள். காவல் ஆணையருக்கு மாவட்டக் குற்றவியல் நீதிபதிக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படும். பொதுமக்களின் புகார்களைக் கவனிக்க, பொதுமக்கள் தொடர்பு அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார். காவல் கட்டுப்பாட்டு நிலையம், ரோந்துக் குழுக்கள் மற்றும் காவல் நிலையங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையும், நாள் முழுவதும் செயல்படும் வகையில் அதிகரிக்கப்படும். கூட்டங்கள், விழாக்காலங்கள், பொருட்

காட்சிகள் ஆகியவற்றில் கூடும் மக்கள் வெள்ளத்தை கட்டுப் படுத்தி ஒழுங்கு செய்ய, 10 குதிரைகள் கொண்ட குதிரைப் பட்டாளப் பிரிவு ஒன்றும் இவ்விருநகர்களிலும் அமைக்கப் படும்.

திருநெல்வேலி :—82 காவல் நிலையங்களும், 24 புறக் காவல் நிலையங்களும் கொண்ட திருநெல்வேலி மாவட்டம் தற்போது இந்தியாவிலேயே பெரிய மாவட்டமாகத் திகழ் கிறது எனலாம்.

நாளும் பெருகி வரும் சட்டம், ஒழுங்குப் பிரச் சனைகளின் காரணமாகக் காவல்துறையினரின் வேலைப் பளு அதிகரித்துள்ளது. சட்டம் ஒழுங்குதனை நன்கு பேண வும், குற்றங்களைக் கட்டுப்படுத்தவும் ஒரு மாவட்டதிற்கு 40 காவல் நிலையங்கள் தான் இருக்க வேண்டும் என்பது அனுபவத்தில் கண்டறிந்த உண்மை. எனவே, திருநெல்வேலி மாவட்டத்தை, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு என்று இரண்டாகப் பிரிக்கும் கருத்து அரசின் பரி சீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது திருநெல்வேலி கிழக்கு மாவட்டம் 4 துணைக் கோட் டங்கள், 14 வட்டங்கள், 39 காவல் நிலையங்கள், 8 புறக் காவல் நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகவும், திரு நெல்வேலி மேற்கு மாவட்டம் 4 துணைக் கோட்டங்கள், 16 வட்டங்கள், 43 காவல் நிலையங்கள், 15 புறக்காவல் நிலை யங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகவும் இருக்கும். இவை தவிர, ஏனைய தனிப் பிரிவுகளும் இவ்விரு மாவட்டங்களுக் கும் உண்டு. ஆயுதப்படையும் இரு மாவட்டத்திற்கும்பகிர்ந் தளிக்கப்படும்.

திருடர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்களை முதல்வர் பார்வையிடல்.



தமிழரசு அச்சகம், சென்னை-600 002.



ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண் !

தமிழரசு

16-9-1982

இலவச இணைப்பு



இந்தியக் குடியரசுத் தலைவரும், மாண்புமிகு முதல்வரும் பங்கேற்ற காவலர் குடியிருப்பு அடிக்கல் நாட்டு விழா (23-8-82)